

எங்கள் அன்புத் தந்தையார்

# திரு. கந்தையா துரைராஜா

அவர் பற்றிய நினைவுகளும்

அவர் நேசித்த

திருக்கோணமலை மண்ணின்

வரலாறும்

03.04.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பு மழை பொழிந்து அவனியிலே
எம்மையெல்லாம் பாசத்தின் சுமையோடு
அரவணைத்துக் காத்த எமது அன்பு அப்பாவே!
பாரினிலே நன்றாய் வாழப் பழக்கிவிட்டு
நீங்கள் நீடுதுயில் கொண்ட சோகத்தை
மறக்கமட்டும் சொல்லித் தரவில்லையே அப்பா!
மாண்டவர் மீண்டதில்லை என்ற உண்மை
உணர்ந்த பின்பும் ஏங்குகின்றோம் அப்பா!
காலன் கொடியவன் உயிரைப் பறித்துக்கொண்டு
சென்றுவிட்டான். நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து
எத்தனையுகம் சென்றாலும் என்றென்றும்
நீங்காது உங்கள் நினைவுகள். இந்த நினைவு
மலரை உங்கள் நினைவாக உங்கள்
பாதங்களில் சமர்பிக்கின்றோம்.

**சாந்தி ! சாந்தி ! சாந்தி !**

**– குடும்பத்தினர் –**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



விநாயகர் துதி

**திருச்சிற்றம்பலம்**

**பிடியத னுருவுமை கொளமிகு கரியது**
**வடிகொடு தனதடி வழிபடும் அவர்இடர்**
**கடிகண பதி வர அருளினன் மிகு கொடை**
**வடிவினர் பயில்வலி வலமுறை இறையே**

## தேவாரம்

**கடிதென வந்த கரிதனை யுரித்து**
**அவ்வுரி மேனி மேற் போர்ப்பர்**
**பிடியென நடையாள் பெய்வளை மடந்தை**
**பிறைநுத லவளொடு முடனாய்க்**
**கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து**
**கொள்ளமும் நித்திலஞ் சுமந்து**
**குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்**
**கோணமா மலையமர்ந்தாரே**

## திருவாசகம்

**உடையாள் உன்றன் நடுவிருக்கும்**
**உடையாள் நடுவுள் நீயிருத்தி**
**அடியேன் நடுவுள் இருவீரும்**
**இருப்பதானால் அடியேனுன்**
**அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்**
**புரியாய் பொன்னம் பலத்தெம்**
**முடியா முதலே யென் கருத்து**
**முடியும் வண்ணம் முன்னின்றே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரண்மேரு
விடங்கன் விடைப் பாகன்
பல்லாண்டென் னும் பதங் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கிமேலாம்
நன்னெறியொழுகச் செய்துநவையறு காட்சி நல்கி
என்னையும டியனாக்கி யிருவனை நீக்கியாண்ட
பன்னிருதடந்தோள் வள்ளல்பா தபங்கயங்கள் போற்றி

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவஞ்சலி

## தந்தையான தவமே
## போற்றி



அன்புக்கு ஆனவரே போற்றி
அறநெறி விதைத்தவரே போற்றி
ஆசையாய் பாசமானவரே போற்றி
ஆணவம் அற்றவரே போற்றி
இல்லையென்று கூறாதவரே போற்றி
இனிமையான மனத்தினரே போற்றி
ஈகை பற்றாளரே போற்றி
ஈடிணை அற்றவரே போற்றி
உண்மையின் உறைவிடமே போற்றி
உங்கண் நிறைவானவரே போற்றி
ஊண்இன்றி உழைத்தவரே போற்றி
ஊக்கத்தை விதைத்தவரே போற்றி
எல்லாமாய் எமக்கானவரே போற்றி
எரிப்பு இல்லாதவரே போற்றி
ஏணியாய் வாழ்ந்தவரே போற்றி
ஏழையை மனங்கவர்ந்தவரே போற்றி
ஐயத்தை அறுத்தவரே போற்றி
ஐயோன் ஆனவரே போற்றி
ஒற்றுமையை ஏற்றவரே போற்றி
ஓடமாய் இருந்தவரே போற்றி
ஔதாரியம் காத்தவரே போற்றி
ஔதசியம் போன்றானவரே போற்றி
தந்தையான தவமே போற்றி

- குடும்பத்தினர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். கந்தையா துரைராஜா

கந்தையா துரைராஜா, மார்ச் 4 1938ம் ஆண்டு அனலைதீவில் கந்தையா, தெய்வானை ஆகியோருக்கு மகனாக பிறந்தார். இளம் வயது முதலே மிகுந்த பொறுப்புடன் வளர்ந்தவர். இளவயது பள்ளிப்படிப்பை சாவகச்சேரியில் பயின்றார். பாடசாலையில் படிப்பில் முதன்மை மாணவராகத் திகழ்ந்த போதும் குடும்ப சூழல் காரணமாக பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு குடும்ப பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

இளம் வயது முதலே உழைப்பின் மீது மிகுந்த ஆர்வமும் , நம்பிக்கையும் கொண்டிருந்த துரைராஜா, ஆரம்ப காலங்களில் கடை நிலை ஊழியனாகவே தன் வாழ்க்கையை ஆரம்பித்தார். இருந்தபோதும் தன்னுடைய கடின உழைப்பால் படிப்படியாக தன்னை உயர்த்தியவர்.

இவரது பயணம் கண்டியில் உள்ள விமலா ஸ்டோர்ஸில் துவங்கியது. அங்கு பணிபுரிந்த காலத்தில் உரிமையாளரின் நன்மதிப்பை பெற்றிருந்தார். இவரது வேலைத் திறனை கண்ட திருக்கோணமலை ஆதித்தன் ஸ்டோர்ஸ் உரிமையாளரின் வேண்டுகோளுக்கு இணங்க, விமலா ஸ்டோர்ஸ் உரிமையாளரால் திருக்கோணமலைக்கு அனுப்பப்பட்டார்.

தன்னுடைய திறமையாலும் , நேர்மையாலும். கடின உழைப்பாலும், இறை பக்தியாலும் குறுகிய காலத்தில் ஆதித்தன் ஸ்டோரேஸின் பங்குதாரராக தன்னை உயர்த்திக்கொண்டார். தான் உயர்ந்தது மட்டுமல்லாமல் தன்னை சார்ந்தவர்களையும் உயர்த்தி அழகுபார்த்தார்.அதன் பின் ஆதித்தன் ஸ்டோர்ஸின் வளர்ச்சி அளப்பெரியது. அவ்வளர்ச்சியின் காரணமாக "ஆதித்தன் துரைராஜா" என்னும் அடைமொழிக்கு சொந்தக்காரனானார். தற்போதும் ஆதித்தன் துரைராஜா என்றால் திருக்கோணமலையில் 1970, 1980 மற்றும் 1990களில் இருந்த எவருக்கும் மொழி இனப்பாகுபாடின்றி அவரை நன்கு தெரிந்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் நிர்வாகத்தின் பொழுது ஆதித்தன் ஸ்டோர்ஸ் மூன்று முறையும் அவரின் பாரஊர்திகள் பல பலமுறையும் இனக்கலவரத்தினால் தீக்கிரையாக்கப்பட்டது. இருந்தும் அவர் மனம் தளரவில்லை, மீண்டும் மீண்டும் கட்டியெழுப்பி அனைவரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கினார்.

ஆதித்தன் ஸ்டோர்ஸ்சை தொடர்ந்து நந்தகோபால் என்கின்ற ஸ்தாபனத்தையும் வாங்கி , தனக்கே உரிய பாணியில் , தன்னுடைய நிர்வாகத்திறனால் முன்னேற்றிக்காட்டினார். இன்று திருக்கோணமலை மாத்திரமல்லாது உலகின் பல பாகங்களிலும் இவரிடம் பணி புரிந்தவர்களில் பலர் பெரிய தொழிலதிபர்களாக விளங்குவது குறிப்பிடத் தக்கது. இவரிடம் பணி புரிந்த எவரிடத்திலும் இவரைப் பற்றி கேட்டால் சற்றும் சிந்திக்காமல் மிகுந்த கர்வத்துடன் பெருமையாகப் பேசுவதை அவதானிக்கலாம். சுவடே இல்லாமல் இவர் செய்த உதவிகளினால் பலர் இன்றும் அவரின் பெருமை பேசுவதைக் கேட்கலாம்.

1980களில் நாட்டில் இருந்த சூழல்கள் காரணமாக இந்தியாவில் இவர் வசிக்க நேரிட்டது. அந்த வேளையிலும் சென்னையில் ஒரு அலுமினிய தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்து நிர்வகித்து வந்தார். இந்த நேரங்களில் அவர் போர் காரணமாக இடம் பெயர்ந்து வந்த பலருக்கு பல விதங்களில் உதவி செய்து அவர்கள் நல்ல நிலைமைக்கு வருவதற்கு முக்கிய காரணமாக இருந்தார். இந்தியாவில் இருந்த பொழுதும் அவர் பணத்துக்காக சில இலங்கையர்களால் கடத்தப்பட்டார். ஆனால் அதனில் இருந்தும் மீண்டு வந்தார். எங்கு சென்றாலும் அவரின் வளர்ச்சியை தடுக்கும் முயற்சிகளை அவரது இறை நம்பிக்கை மற்றும் நேர்மையான அணுகுமுறைகளினால் வெற்றி கொண்டார்.

ஆனாலும் திருக்கோணமலைப் பாசம் விடாததால் மீண்டும் திருக்கோணமலை வந்து பலதடவைகள் யுத்தத்தாலும் இனக்கலவரங்களாலும் பாதிக்கப்பட்டிருந்த தனது வியாபார ஸ்தாபனத்தை மீண்டும் மீண்டும் கட்டி எழுப்பினார். பலதடவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுமையான அழிவுகளைச் சந்தித்தபோதும் தனது கடின உழைப்பாலும் விடாமுயற்சியாலும் பீனிக்ஸ் பறவை போல மீண்டும் மீண்டும் திருக்கோணமலையிலேயே அவர் நிலை கொண்டது அவர் திருக்கோணமலையின் மீது கொண்டிருந்த பற்றுதலையே காண்பிக்கின்றது.

திருக்கோணமலையில் வர்த்தக சம்மேளனம் துவங்குவதற்கு முக்கிய காரணமாக திகழ்ந்தவர். இவரின் திறமை மீது நம்பிக்கை கொண்ட கொழும்பு வர்த்தக சம்மேளனங்கள் , திருக்கோணமலைக்கு பல திட்டங்களை அறிமுகப்படுத்தியது. திருக்கோணமலையின் மூத்த வர்த்தகர் என்ற முறையிலும், தொழில் துறையில் மிகுந்த அனுபவம் கொண்டவர் என்கின்ற வகையிலும் , திருக்கோணமலையின் வர்த்தக சம்மேளனத்தின் முதலாவது தலைவராக நியமிக்கப்பட்டார். இவரது தலைமையின் கீழ் பல்வேறு நலத்திட்டங்கள் வர்த்தகர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டது.

சமூகத்தின் மீது மிகுந்த அக்கறை கொண்ட காரணத்தினால் மக்களுக்காக பாடுபடும் பல்வேறு அமைப்புகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். பெற்றோரை இழந்த சிறார்களுக்காக துவங்கப்பட்ட அன்பு இல்லத்தின் இயக்குனர் சபையின் உறுப்பினராக இருந்து தொண்டாற்றியவர். இயற்கை அனர்த்தங்களின் போதும் இனக்கலவரங்களின் போதும் பாதிப்புக்குளாகிய மக்களுக்கு கிராமம் தோறும் சென்று பல்வேறு உதவிகளை செய்துவந்தார்..திருக்கோணமலையிலும் அனலைதீவிலும் உள்ள கோவில்களுக்கும் தர்மஸ் தாபனங்களுக்கும் அளவிட முடியா உதவிகளாற்றி உள்ளார். அனலைதீவு ஐயனார் கோவிலில் அமையப் பெற்ற இலங்கையிலேயே மிகப் பெரிய தேரின் உருவாக்கத்தில் இவரின் பங்காற்றல் அளப்பரியது.

தமிழரசுக்கட்சியின் மூத்த உறுப்பினரில் ஒருவராக விளங்கியவர். 2006ம் ஆண்டு திருக்கோணமலை நகரசபையின் உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலையின் வளர்ச்சியைப் பற்றி அவர் கொண்டிருந்த கனவுகள் எண்ணில் அடங்கா. சிங்கப்பூர் அளவிற்கு வந்திருக்க வேண்டிய திருக்கோணமலை என்றும் அதனை செய்வதற்கு முயல வேண்டும் என்றும் அவர் பல இடங்களில் ஆதங்கப்பட்டுள்ளார்.

2006இல் சித்திரை மாதம் திருக்கோணமலையில் நடந்த கலவரத்தில் மீண்டும் கட்டி எழுப்பத் தயாராகிய ஆதித்தன் ஸ்டோர்ஸ் தீக்கிரையாக்கப்பட்டது. பின்னர் அதே ஆண்டு ஆவணி மாதம் இவரது மகன் கொலைகாரப் பாவிகளால் நந்தகோபால் வர்த்தக ஸ்தாபனத்திலேயே, தமிழர்களுக்கு உதவும் தமிழன் என்னும் காரணத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதன் பின்னர் அந்த வர்த்த கஸ்தாபனமும் தீக்கிரையாக்கப்பட்டது. அதன் பின்னர் அவருக்கு வசிக்க பல இடங்கள் இருந்தும், குறிப்பாக கனடா நாட்டின் குடியுரிமை வைத்திருந்தும் திருக்கோணமலையில் தான் வசித்து வந்தார்..

பேசுவதற்கு மிகவும் இனிமையானவர். எந்த இறுக்கமான சூழலையும் தனக்கே உரிய நகைச்சுவைப் பேச்சினால் மாற்றிவிடுவார். இரக்க குணம் கொண்டவர், நேர்மையானவர், நம்பிக்கைக்குரியவர் . தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர். வாழ்க்கையில் எவ்வளவு உயரங்களை அவர் அடைந்தாலும் தனது ஒழுக்கம், நாணயம் மற்றும் இறை நம்பிக்கையில் ஒரு சிறு குறையும் ஏற்படாதவாறு வாழ்ந்து காட்டியவர். அனலைதீவு ஐயனார், திருக்கோணமலை கோணேசர் மற்றும் காளி அம்பாள் மீதும் மிகுந்த பக்தி கொண்டவர்.

தனது வாழ்வில் கம்பீர மனிதனாக உலவியவரை இறைவன் தன்னுடன் ஐக்கியப்படுத்திவிட்டான் எம் இதயத்தில் விருட்சமாக உயிருடன் கலந்த எங்கள் தந்தையின் ஆன்மசாந்திக்கு இறைவனடி துதிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்தகராய் வந்தெம்மை
## வாழ்வித்த உத்தமரே !

யாழ் அனலை தீவுதான்
பிறந்த அற்புத மண்ணாம்
கந்தையா தெய்வானை
அன்பு பாச மகனாம்
துரைராஜா துணையாக
சகோதரங்கள் பலராம்
தெய்வானை, செல்லம்மா,
பொன்னம்மா, கமலம்,
சண்முகம், சீனிவாசகம்
என்போருடன் கூடிமகிழ்ந்தாரே
மைத்துனர்களாக பாசத்துடன்
சுப்பையா, நாகநாதர், ஐயம்பிள்ளை,
பொன்னம்பலம், சின்னாச்சி, மனோன்மணி,

திருக்கோணமலை மண்ணாம்
பாடல் பெற்ற ஊராம்
தொழில் பயின்ற இடமாம்
தொழில் அதிபர் ஆனதும் இங்குதான்
செல்வமும் வந்ததே வாழ்வினில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனலை தீவு வேலாயுதம்
வள்ளியம்மை மகளாம்
கமலலெட்சுமி இல்லாளாக
வாழ்வுத் தேரும் இழுபட
உதயன் விஜயகுமாரி
சங்கர் அமரர் மயூரன்
வரன் மக்களுமாயினராம்!

மருமக்களாக சிவதர்சினி
கம்ஷா தசானி வந்தே
சிபி, வருண், மயூரன், மயூரா
தியானா, அகரா, மயூரி,
பேர முத்துக்களுமாயினரே!

அகன்ற நெற்றியும் புன்
சிரிப்பும் கோபமே வந்திடாத
பார்வையும் ஆயிரம் கதைகள்
சொல்லும் அற்புதமும் பழகியவர்
சொல்வர் ஆனந்த மனிதரென்று!

வேண்டியவர் வேண்டாதவர்
உள்ளவர் இல்லாதவர்
கற்றவர் கற்காதவர் எவராயினும்
இவர் முன் வந்தால்
பணிந்து அன்போடு பேசுவார்
மனிதத்தை மதிக்கும் மனிதராய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவமும் தமிழும் உயிரென்பார்
மனிதம் அதைவிட மேலென்பார்
உதவியென்று எவர் வரினும்
இல்லையென்று சொல்லாது
வந்தவரை திருப்தி படுத்தியே
தானும் மகிழ்ந்து பரவசமாகி
ஆனந்த குளியலில் குளித்திடுவார்!

நகைச்சுவை பிறவியில்
வந்த கலை சமூதாய
சிக்கல்களை அற்புதமாய்
மற்றவர் மனம் நோகாது
நாகரீகமாய் சொல்லிடுவார்!

வர்த்தக சங்கமும் தலைமையில்
இருத்தி அழகு பார்த்திட அவரை
நகராட்சி மன்றமும் உறுப்பினராக்கி
பெருமையும் கொண்டது இவரோ
தமிழர்களின் மனத் துயரில்
இலங்கை தமிழரசுக் கட்சியின்
அனுதாபியும் ஆனாரே திடத்துடன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயற்ற உடலும் திடமான
மனதும் கோயில் பற்றும்
ஆன்மீக போக்கும் சொல்லும்
செயலும் மாறாத பண்பும்
வீரியமான பேச்சும் பேசாது
சாதிக்கும் வல்லமையும் பெற்றே
வாழ்ந்தாரே வாழ்வில் உயர்ந்தாரே

ஆண்டுகள் நகர நிலையற்ற
உடலும் தளர்ந்தது விரைந்து
காலமும் வந்தது காலனும்
உயிர் உதவி கேட்டே
வந்தான் அவனுடனும் பகுடி
கதைகள் பல பேசி மகிழ்ந்தே
தூர பயணமும் திரும்பிவர
முடியாத தொலைவுக்கும்
போனாரோ நாம் கலங்க!

- குடும்பத்தினர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேஸ்வரமும் தோற்றக் காலமும்

திருக்கோணேஸ்வரத்தை வட, தென் மொழி தொல் இலக்கியங்களும், புராணங்களும் போற்றிப் பாடியுள்ளன. திருக்கோணேஸ்வரம் குறித்துப் பல ஐதீகக் கதைகள் உள்ளன. குறிப்பாக புராணங்கள் கூறும் ஐதீகக் கதைகள் நம்பகத்தன்மை மிகக் குறைவாக இருப்பதால் வரலாற்றை ஆதாரமாகக் கொள்வதில் பல சிக்கல்கள் உள்ளன. புராணங்களையும், ஐதீகக் கதைகளையும் வைத்து ஒரு வரலாற்றை ஆதாரமாகக் கொள்வதில் பல சிக்கல்கள் உள்ளன. புராணங்களையும், ஐதீகக் கதைகளையும் வைத்து ஒரு வரலாற்றைக் கட்டி எழுப்ப முடியாது. எனினும் அவற்றில் இருந்து சில சான்றுகளைப் பெறக்கூடிய சாத்தியம் உள்ளது.

தட்சண கைலாசம், மச்சகேஸ்வரம் என்பன திருக்கோணேஸ்வரத்திற்கான மறுபெயர்களாகும். இந்த மறுபெயர்கள் ஏற்பட புராணங்கள் கூறும் நிகழ்வுகள் இந்து மதச் சார்பானவை ஆதிசேடன் மகா மேருவின் சிகரத்தை மூடிக்கொள்ள, வாயு பகவான் மகா மேருவின் சிகரங்களில் ஒன்றை பெயர்த்து கடலில் வீச, அது இலங்கையின் கிழக்குக் கரையோரமாக விழுந்து திருகோணமலையாக உருவாகியது என்பது புராணத்திலிருந்து கிடைக்கும் செய்தியாகும். இமயமலையின் ஒரு பகுதியே கோண பர்வதம் என்ற நம்பிக்கை காரணமாகக் கோணேஸ்வரத்திற்கு தட்சண கைலாசம் என்ற பெயர் உருவாகியது. திருமால் மச்சாவதாரத்திலே தக்சண கைலாசத்தை அடைந்து தனது மீன் உருவத்தை விட்டு நீங்கி மகேஸ்வரனை வணங்கியதால் மச்சகேஸ்வரம் என்ற பெயரும் உருவாகியதாக தக்சண கைலாச புராணம் கூறுகின்றது. புராண, இதிகாசங்களில் இருந்து பல மறுபெயர்கள் அறிந்து கொண்ட போதிலும் திருக்கோணேஸ்வரம் என்ற பெயரே நீண்டகால வழக்கிலுள்ள தலப் பெயராகும். 7ம் நூற்றாண்டுக்குரியவராகக் கருதப்படும் சம்பந்தர் திருக்கோணமலை என்றே பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் நிலாவெளிப் பிள்ளையார் கோயிலில் கிடைத்த சாசனத்தில் திருக்கோணேஸ்வரத்தை மச்சகேஸ்வரம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகர்ணத்துச் சிவாலயமானது 10ம், 11ம் நூற்றாண்டுகளில் மச்சகேஸ்வரம் என அழைக்கப்பட்டிக்கின்றது.

திருக்கோணேஸ்வரத்தின் தோற்றக்காலம் குறித்து வரலாற்றுத் தடயங்கள் இல்லாத நிலையில் தோற்றக்காலத்தை உறுதியாக நிர்ணயம் செய்வது மிகக்க் கடினமானதாகும். காலத்தை மதிப்பிடுவதற்குப் போதிய வரலாற்றுச் சான்றுகள் இல்லாதவிடத்து தொல் இலக்கியங்களிலும் மத வழிபாட்டுத் தடயங்களிலும் தங்கியிருக்க வேண்டிய தேவை உருவாகின்றது. எனவே உறுதியான ஆதாரங்கள் இல்லாத காரணத்தால் கோணேசர் ஆலயத்தின் தோற்றக் காலத்தை மதிப்பிடுவதற்கு இரு தளங்கள் அவசியமாகின்றன.

1. கோணேஸ்வரம் குறித்து பல தொல் இலக்கியங்கள் தகவல்கள் தருவதால் அவற்றின் காலங்களையும், அவை கூறும் தகவல்களையும் மதிப்பிடுவதன் மூலம் கோணேஸ்வரத்தின் தோற்றக் காலத்தினை மதிப்பிடுதல்.

2. திருகோணமலை மாவட்டத்தில் இந்து மத வழிபாட்டு வரலாற்றை அறிதல். திருகோணமலையில் இந்து மத வழிபாடு மிக நீண்ட காலமாகப் பின்பற்றப்பட்டு வருகின்ற போதும் இந்து மத் வழிபாட்டிற்கான வரலாற்றைக் கண்டறிதல் இலகுவானதல்ல. ஏனெனில் இந்து மத வழிபாட்டின் உட்கூறுகள் பல வெவ்வேறு காலகட்டத்தைச் சேர்ந்தவைகளாகும். குறிப்பாகப் பெருங்கற் காலச் சமூகத்தினரிடையே காணப்பட்ட நாக வழிபாடு, விருட்ச வழிபாடு என்பன இந்துமத வழிபாட்டில் சிறப்பிடம் பெற்றிருக்கின்றனது. இதுவரை கிடைக்கப் பெற்றுள்ள வரலாற்றுத் தடயங்களும் இலக்கியங்களும் கோணேசர் ஆலயத்தின் தோற்றம் குறித்து போதியளவு தகவல்ககளைத் தரவில்லை. திருகோணமலை வரலாற்றுப் போக்கினை இலங்கை நிகழ்வுகளை விடத் தமிழக அரசுகளின் ஆதிக்கம் திருகோணமலையில் ஏற்பட்ட போது பண்பாட்டுத் தொடர்பு வலுப்பெறத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக இலக்கியங்களில் இருந்தும் திருக்கோணேஸ்வரம் குறித்து அறிந்து கொள்ளக்கூடியதாக இருப்பதனால் தமிழக வரலாற்று அறிவு அவசியமாகின்றது.

திருக்கோணேஸ்வரம் குறித்துப் பேசப்படுகின்ற தொல் இலக்கிய வரிசையில் இராமாயணமே காலத்தால் முத்தியதாகும். திருக்கோணேஸ்வரத்தின் தொன்மைக்குச் சான்றாக இராவணனின் வழிபாட்டிற்குரிய தலமாக கோணேஸ்வரம் குறிப்பிடப்படுவதால் இராவணனின் காலம் எது என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது. ஆயினும் இதுவரை இராமாயண நிகழ்வுகள் நடைபெற்ற காலமோ அல்லது இராமாயண நிகழ்வுகள் இதிகாசமாகத் தொகுக்கப்பட்ட காலமோ உறுதியாக நிர்ணயம் செய்யப்படவில்லை. இந்திய உபகண்டத்தின் எல்லைக்கு அப்பாலும் இராமன் ஒரு வணக்கத்திற்குரிய அவதாரமாகக் கருதப்படுவதால் இராமாயணம் பல ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. இவர்களுள் பர்கிரெரு, ஐகொபி, வெபர், ஆர்தர் மக்டோனல், கீத், வின்ரெனிஸ், தர்ம ராமசுவாமி சாஸ்திரி, ஆனந்த குருகே என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுடைய கருத்துக்களும் கணிப்புகளும் முரண்பாடாக இருந்த போதிலும் கி.மு. 1600-கி.மு. 800 இடைப்பட்ட காலப்பகுதியை இராமாயண காலமாக கணிப்பிட்டிருக்கின்றார்கள். மரபு வழிப் பாரம்பரியங்களின் பிரகாரம் இராமாயணம் திருத யுகத்தில் நிகழ்ந்தாக கூறப்படுகின்றது. ஆயினும் கூட இராமாயணக் காலம் குறித்து இதுவரை ஆய்வு நடாத்தியவர்கள் மிக உறுதியான சான்றுக்களை அறிவியல் அடிப்படையில் முன்வைக்கத் தவறிவிட்டனர். எனவே இராமாயண காலத்தை அண்ணளவாகவே கணிப்பிட முடிகிறது. இராமாயணம் ஒரு உண்மை நிகழ்வொன்றின் மிகைப்படுத்தல் அல்லது ஒரு அற்புதமான கற்பனைக் காவியம் என்ற இரு முரணபாடான கருத்துக்கள் விமர்சனமாக முன்வைக்கப்படுகின்றது. இதில் மிக முக்கியமான விடயம் என்னவெனில் கோணேஸ்வரக் கோயிலுக்கும் இராவணனுக்கு மிடையில் தொடர்பையேற்படுத்தும் எத்தகைய ஒரு தகவலும் இராமாயணத்தில் இல்லை என்பது தான் (1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணனைக் கோணேசர் ஆலயத்துடன் தொடர்பு படுத்தும் மரபுவழிக் கதைகள் எவ்வாறு தோற்றம் பெற்றன என்பது ஆராயப்பட வேண்டும். இலங்கையில் மாத்திரமல்ல இந்தியாவிலும் இராவணனை கோணேசர் ஆலயத்துடன் தொடர்புபடுத்தும் மரபுக்கதைகள் நீண்ட கால வழக்கில் உண்டு என்பதை மறுக்க முடியாது. இராமாயண நிகழ்வுகள் நடைபெற்று பல வருடங்களுக்குப் பின்னரேயே வால்மீகியால் தொகுப்பட்டது. என ஏற்றுக் கொள்கின்றவர்கள் இராமாயணத்தை உண்மையின் மிகைப்படுத்தல் எனக் கருதுகின்றார்கள். பிற்காலத்தில் வால்மீகியால் இராமாயணத்தை தொகுக்கின்ற போது பல மரபுவழிக் கதைகள் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது சில நிகழ்வுகள் தவறவிடப்பட்டிருக்கக் கூடும். திருக்கோணேஸ்வரம் தொடர்பான இராவணனின் நிகழ்வுகள் வால்மீகியால் மறக்கப்பட்டோ அல்லது ஒதுக்கப்பட்டோ இருக்கலாம். வால்மீகிக்குப் பின் வந்த கம்பரும் இராமாயணத்தில் பல மாற்றங்கள் செய்திருப்பை இரு நூல்களையும் ஒப்பிட்டு அவதானிக்கும் ஒருவரால் அவதானிக்க முடிகின்றது.

மரபுக் கதைகளில் இராவணனுடன் தொடர்புபடுத்தப்படும் திருகோணமலையின் மற்றுமொரு புனிதத்தலம் கன்னியா வெந்நீர் ஊற்றுக்களும், கன்னியா சிவன் ஆலயமுமாகும். இவற்றை இராவணனால் இறந்த தன் தாயின் ஈமைக்கடனை நிறைவேற்ற உருவாக்கப்பட்டதாக மரபுக் கதைகள் முற்றிலும் உண்மைத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டதாகக் கருத முடியாது. எனினும் ஏன் மரபுக் கதைகளில் இலங்கையின் ஏனைய தலங்களை விட தொடர்புபடுத்தப்படுகின்றது. என்ற வினாவும் தவிர்க்க முடியாமல் எழுகின்றது. திருக்கோணேஸ்வரத்துடன் இராவணனைத் தொடர்புபடுத்தும் எழுத்திலமைந்த முதல் தமிழ் இலக்கியமாகத் திருகோணமலைப் பதிகத்தைக் குறிப்பிட முடியும் 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த சம்பந்தரால் இராவணன் குறித்த செய்தி திருகோணமலைப் பதிகத்தின் எட்டாவது பாடலில் (சம்பந்தருடைய தேவாரம்) சொல்லப்பட்டிருக்கின்றது. திருக்கோணேஸ்வரத்துடன் தொடர்படும் இராவணனின் வாழ்க்கை நிகழ்வுகள் இலங்கைக்கு வெளியிலும் பேசப்பட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12ம் நூற்றாண்டில் உருவாகிய கம்பராமாயணத்தில் இலங்கை மன்னனாகச் சித்தரிக்கப்படும் இராவணன் ஒரு சிவ பக்தனாகவே சித்தரிக்கப்படுகின்றான். இராவணனை ஆரியருக்கு எதிரான போருக்குத் தலைமை வகித்த இயக்க இன அரசன் எனப் பல வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றார்கள். இந்திய உப கண்டத்தின் தென் பிராந்தியத்தில் ஏற்பட்ட ஆரியமயமாக்கலுக்கு எதிரான போரை வழி நடத்திய ஆதிக் குடிமக்களின் தலைவன் என்றே ஆனந்த குருகே கருருதுகின்றார் (2) இங்கு நாம் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஓர் உண்மை என்னவெனில், இராவணன் மக்கள் மனதைக் கவரத்தக்க பாத்திரமாக விளங்கியிருக்கின்றான் என்பதே. அத்தகைய ஒரு பாத்திரமாக இராவணன் எவ்வாறு மாறியிருக்கலாம் என்பது இயல்பான ஒரு வினாவாகும். இராமாயணம் கூறும் யுத்த நிகழ்ச்சிகளைக் கவனிக்கும் போது, அது இந்தியாவில் மையமாகக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. இந்தியப் பிரதமர் நேரு தனது நூலில் இராம-இராவண யுத்தத்தை ஆரிய திராவிட யுத்தமாகவே குறிப்பிடுகின்றார் (3) வால்மீகி இராமாயணத்தில் இராவணனுடன் தொடர்புபடுத்தப்படாத கோணேசர் ஆலயம் மரபுக் கதைகளில் எவ்வாறு இடம் பிடித்துக் கொண்டது என்பது இன்னும் வரலாற்று வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்படவில்லை திராவிட இனத் தலைவன் ஒருவனின் நம்பிக்கைக்குரிய ஆலயமாகக் கோணேசராலயத்தைக் காட்ட எழுந்த ஐதீகக் கதைகளாக இருக்கலாம். எனினும் எதிர்கால ஆய்வுகள் உறுதியாக முடிவுகளை வழங்கலாம்.

## கோகர்ணம்

இராமாயணக் காலத்தை அடுத்து கோணேஸ்வரம் குறித்துத் தகவல் தருகின்ற காலத்தால் முற்பட்ட நூலாக மகாவம்சத்தையே எடுத்துக் கொள்ளலாம். இலங்கை வரலாற்று நூல்களில் மகாவம்சமே திருகோணமலையில் காணப்பட்ட புராதன சிவாலயம் பற்றிச் செய்தியை முதலில் எழுத்தில் தருகின்றது.

மகாசேனன் மகாயன பௌத்தத்திற்கு ஆதரவாக மேற்கொண்ட நடவடிக்கைகளில் கோகர்ண பிராமண ஆலயத்தை அழித்தான்(4) அன்று தொட்டு பௌத்தர்களுக்கும், இந்துக்களுக்கும் சர்ச்சைக்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலமாக திருக்கோணேஸ்வரம் விளங்குகின்றதுது. இங்கு மகாவம்சத்தில் கோகர்ண எனக் குறிப்பிடப்படுவது திருகோணமலை என்பதற்கான பல வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. திருகோணமலையைப் புராணகாலங்களில் கோகர்ணம் என்றும் அழைக்கப்பட்டிருக்கின்றது. பாளி இலக்கியங்களிலும் திருகோணமலையைக் கோகண்ண என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே மகாவம்சத்திலும் திருகோணமலையைக் கோகர்ணம் என்ற சொல் கோகண்ண என்ற உருவில் வரும் (5) கோகர்ணம் என்ற பெயரைக் கொண்ட மூன்று தலங்கள் இந்தியாவிலும் இருந்தது என்பது வரலாற்றாசிரியர்களின் முடிபாகும். G.P.மல்லசேகராவின் பாளி பிரதிப் பெயர்ச் சொற்களுக்கான அகராதி கோகர்ணம் என்பதைத் திருகோணமலை என்றே குறிக்கின்றது.

கலிங்க நாட்டில் மகேந்திர மலைத் தொடரிலே கோகர்ணம் என்றொரு சிவாலயம் காணப்பட்டது. இந்த ஆலயம் கலிங்கத்தை ஆண்ட கீத்திசைக் கங்கர்களால் தங்கள் குலதெய்வமான கோகர்ண சுவாமிக்குக் கட்டப்பட்டதாகும். இது குறித் கீழைத் தேசக்கங்கர்களின் கல்வெட்டுக்களில் விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேபாள நாட்டின் கிராதர் இன மக்கள் வாழுகின்ற பசுபதி என்ற பிரதேசத்தில் கோகர்ண சிவாலயம் அமைக்கப்பட்டிருந்தது. வங்காளத்து பால பரம்பரையைச் சேர்ந்த தர்ம பாலுனுடைய படைகள் வட இந்தியாவில் திக்கு விஜயத்தை மேற்கொண்ட பொழுது கோகர்ணம் என்ற புண்ணிய சிவ தலத்தில் வழிபட்டதாக கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இந்தியாவின் வடமேற்குப் பிரதேசத்தில் உள் துளுவ நாட்டில் கோகர்ண ஆலயம் உள்ளது துளுவ நாட்டு கோகர்ண சிவனைப் பலிநாதர் எனவும் கோகர்ணத்து நாயகியான பார்வதி எனவும் அழைக்கப்படுகின்றது. துளுவ நாட்டுக் கோகர்ண மூர்த்தியை சம்பந்தரும், நாவுக்கரசரும் பதிகம் பாடித் துதித்துள்ளார்கள் முன் குறிப்பிட்ட மூன்று கோகர்ண ஆலயங்களினால் வழிபட்ட கோகர்ண சிவனைப் பலிநாதர் எனவும் கோகர்ணத்து நாயகியான பார்வதி எனவும் அழைக்கப்படகின்றது. துளுவ நாட்டுக் கோகர்ண மூர்த்தியை சம்பந்தரும், நாவுக்கரசரும் பதிகம் பாடித் துதித்துள்ளார்கள். முன் குறிப்பிட்ட மூன்று கோகர்ண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்களில் மகேந்திர மலைத் தொடரில் கீழைத் திசைக் கங்கர்களினால் வழிபட்ட கோகர்ண சுவாமியை மட்டுமே கோகர்ண ஈஸ்வரர் என அழைப்பதுண்டு. இதன் மூலம் இந்தியாவிற்கும், திருகோணமலைக்கும் வரலாற்றின் ஆரம்பக் காலங்களில் இருந்து தொடர்ச்சியான பண்பாட்டு, வணிகத் தொடர்புகள் இருந்திருக்க வேண்டும் என்பதை இலகுவில் ஏற்க முடிகின்றது. கோணேஸ்வரத்திற்கும், கோகர்ண ஈஸ்வரருக்கும் உள்ள வரலாற்றுத் தொடர்பு விரிவாக ஆராயப்பட வேண்டும். கோணேஸ்வரர் என்ற பெயர் கோகர்ண ஈஸ்வரர் என்ற இரு சொற்களின் இணைப்பால் உருவாகியிருக்கலாம். கி.பி 5ம் நூற்றாண்டில் குப்தராட்சிக் காலத்தில் உருவாகிய வாயு புராணம் மலைய தீவின் கிழக்குகரையோரத்தில் அமைந்துள்ள கோகர்ண சிவாலயம் பற்றி குறிப்பிடுகின்றது. பொன்னும், மணிகளும் மிகுதியாகக் கிடைக்கின்ற நாடு அங்கே அகஸ்திய பவனம் காணப்படுகின்றது. அங்கே அரக்கர்களும், மிலேச்சர்களும் அதிகளவில் வாழ்கின்றார்கள். மலைய தீவில் லங்காபுரி என்ற நகர் உள்ளது (6)

மேற்கூறிய விபரங்களைக் கவனத்திலெடுக்கும் ஒரு வரலாற்றுத்துறையினர் மலைய தீவாக இலங்கையை அடையாளங்காட்டுவது தவறாகாது. வாயு புராணத்தில் குறிப்பிடப்படும் கோகர்ண சிவாலயத்தை திருக்கோணேஸ்வரம் என ஏற்பது சரியானதாகும். மகாவம்சத்திற்கான உரை நூலாகக் கருதப்படும் மகாவம்சதீக திருகோணமலையில் மகா சேனனால் இடிக்கப்பட்டது ஒரு சிவலிங்க ஆலயம் எனக் குறிப்பிடுகின்றது. மகாவம்சம் தரும் தகவலுக்கு இணங்க மகாயான பௌத்தத்தை ஆதரித்த மகாசேனன் மகா விகாரைப் பிக்குகளை விரட்டியதோடு இந்து ஆலயத்தையும் அழித்தான் என அறிய முடிகின்றது. மகாயான மத வளர்ச்சிக்குத் தடையெனக் கருதப்பட்ட ஏனைய மதப் பிரிவுகள் தாக்கப்பட்டன. இதிலிருந்து மகாயான பௌத்த மத வளர்ச்சிக்குதத் தேரவாதப் பௌத்தமும், இந்து மதமும் தடையாக இருந்திருக்கின்றது என்பதை அறிய முடிகின்றது. மகா வம்சத்தின் உரை நூலான வம்சத்தப்பகாசினி இந்த நிகழ்வை பின்வருமாறு வர்ணிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமணக் கோயில்களை இந்துக் கோயில்களை இடித்த பின்னர் திஸ்ஸ என்பவன் மூன்று புத்த விகாரைகளைக் காட்டினான். அவை கோகர்ணம், ஏரகாவில்லை, கலந்த ஆகியனவாகும். கோகர்ணம் என்ற ஊரில் கோகர்ண விகாரையும், ஏரகாவில்லை என்ற கிராமத் துக்கு அருகில் எரகாவில்லை விகாரையுமம், பிராமணக் கிராமத்துக்கு அருகே கலந்த விகாரையையும் உருவாக்கினான். இந்த மூன்று இடங்களிலும் முன்பு (இந்துக் கடவுளுக்கான வழிபாட்டியடங்கள் கட்டப்பட்டிருந்தன. இவை பௌத்த சாசனத்திற்குத் தடையாக இருந்தன. அத்துடன் தவறான மத் நம்பிக்கையுடையோரின் வழிபாட்டு இடங்களாகவும் இருந்தன. இதனால் இந்த (இந்து) வழிபாட்டுத் தலங்களை இடித்து புத்த பிக்குகளுக்காக புத்த விகாரைகளைக் கட்டினான். கிழக்குக் கடற்கரையில் கோகண்ண விகாரை கட்டப்பட்டது. மற்றைய இரு விகாரைகளும் றோகணத்தில் கட்டப்பட்டன இவ்வாறு மத நம்பிக்கையற்றவர்களின் சிவலிங்கம் போன்ற வழிபாட்டுச் சின்னங்களை அழித்து இலங்கைத் தீவின் எல்லாப் பகுதிகளிலும் புத்த மதத்தைப் பரப்பினான்(7)

எனவே மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்ட செய்திகளின் பிரகாரம் மகாசேனன் காலத்தில் கி.பி 302 இல் திருகோணமலையில் புகழ்வாய்ந்த சிவாலயம் இருந்திருக்கின்றது. மகாசேனன் ஆட்சிக் காலத்தில் இலங்கையின் கிழக்குப் பகுதியில் திருகோணமலையிலும், ஈழத்தின் வேறு இடங்களிலும் சைவ ஆலயங்கள் நிலை பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. மகாசேனன் கோணேசர் ஆலயத்தை அழித்தபோதும் சைவர்கள் மீண்டும் குறுகிய காலத்தில் அவ்விடத்தில் மீண்டும் தங்கள் ஆலயத்தை அமைத்தனர் என்று ஊகிப்பதற்கு சூளவங்ஸ என்ற பாளி நூலிலே கிடைக்கும் சில தகவல்கள் உதவுகின்றன. அது மட்டுமல்லாது அநுராதபுரத்திலிருந்து ஆட்சி நடத்திய சில பௌத்த மன்னர்களே இந்த ஆலயத்துடன் நெருங்கிய தொடர்புடையவர்களாக இருந்தனர் என்பதையும் அறிய முடிகின்றது. (8) மகாசேனன் இந்து மத ஆலயமான கோணேசர் ஆலயத்தை மட்டுமல்ல, தேரவாத பௌத்தப் ஆலயங்களையும், மடங்களையும் அழித்திருக்கின்றான். திருக்கோணேஸ்வரம் மீதான மகாசேனனின் தாக்குதல் இந்து-பௌத்த தத்துவார்த்த முரண்பாடுகளினால் ஏற்பட்டது. அதே போன்றே மகாயான பௌத்தனான மகாசேனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரவாத பௌத்த பள்ளிகளையும், குருமார்களையும் தாக்கியதற்கு பௌத்த பள்ளிகளையும் தத்துவார்த்த முரண்பாடுகளே காரணமாகும்.

வட இந்தியாவில் கி.பி.5ம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட வாயு புராணத்தில் திருக்கோணேஸ்வரம் குறித்து சொல்லப்படுவதன் மூலம் இலங்கைத் தீவுக்கு வெளியேயும் அதன் புகழ் பரவியிருந்திருக்கின்றது. மகாவம்சத்தில் கூறப்படவது போன்று மகாசேனன் காலத்தில் கோணேசர் ஆலயம் பெரும் புகழுடன் விளங்கியிருந்ததை ஏற்க முடிகின்றது. தகவற் பரிமாற்றம் மிகக் குறைந்த கி.பி 5ம் நூற்றாண்டளவில் வட இந்தியாவில் திருக்கோணேஸ்வரத்தின் புகழ் பரவியிருந்ததை அறியும் ஒருவர், திருக்கோணேஸ்வரத்தின் தோற்றம் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலகட்டத்தில் தோற்றம் பெற்றிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருவது இயல்பானதே மேலும் மகாவம்சத்திலும், அதன் உரை நூலான மகாவம்ஸ தீகவிலும் கோகர்ணச் சிவாலயம் என அழைக்கப்படும் கோணேஸ்வரம் பௌத்த மதப் பரப்புரைக்குத் தடையாக இருந்தது என்பதை தெளிவாக ஏற்க முடிகின்ற போது, கோணேஸ்வரத்தின் தோற்றக் காலத்தை கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து தேடுவதே சிறந்தது. இதற்கு இன்னுமொரு முக்கிய காரணம் உண்டு. விஜயனுக்குப் பின் அரசு உரிமையை பெற வாரிசு இல்லாத நிலையில், தனக்குப் பின்னர் அரசுரிமையை ஏற்க ஒருவரை அனுப்பும்படி விஜயன் தனது தம்பி சுமிதனுக்குக் கடிதம் அனுப்பினான். விஜயனின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட சுமிதன் தனது மகனான பாண்டு வாசுதேவனை இலங்கைக்கு அனுப்பிவைத்தான். பாண்டு வாசுதேவன் 32 மந்திரிகுமாரருடன் துறவி வேடம் அணிந்து திருகோணமலை வழியாக இலங்கையை வந்தடைந்தான் என மகாவம்சமம் கூறுகின்றது. சில காலத்திற்குப் பின்னர் இவர்களைத் தொடர்ந்து பாண்டு வாசுதேவனையும், மந்திரி குமாரர்களையும் திருமணம் செய்து கொள்ள சாக்கிய வம்சத்து பத்ரகாஞ்சனா என்ற இளவரசியும், அவளது தோழிகளும் மாறு வேடத்தில் திருகோணமலைத் துறைமுகம் வழியாக வந்தார்கள் என மகாவம்சம் கூறுகின்றது(9) மகாவம்சம்சமம் கூறும் செய்தி உண்மையாயின் பௌத்த மதத்திற்கு எதிரான வழிபாடு மற்றும் பண்புகளைக் கொண்டிருந்த மக்களே திருகோணமலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்திருக்கின்றார்கள் என்பது உறுதியாகின்றது. கி.மு 3ம் நூற்றாண்டளவில் பௌத்த - இந்து மத மோதல் உச்ச நிலையில் இருந்தது. பாண்டுடு வாசுதேவாவும் தோழர்களும் துறவி வேடமணிந்து திருகோணமலைத் துறைமுகம் வழியாக வந்திருப்பதனால் திருகோணமலைப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் இந்துக்களாகவே இருந்திருக்கின்றார்கள் என்பதை ஏற்கலாம் கி.மு3-கிமு4ம் நூற்றாண்டு: காலப்பகுதியில் திருகோணமலையில் பகுதியில் இந்துக்கள் வலிமையுடன் வாழ்ந்திருந்தால் ஆலய வழிபாடும் உன்னதம் பெற்றிருக்கவேண்டும். கி.பி.3ம் நூற்றாண்டு: காலப் பகுதியில் மகாசேனனால் அழிக்கப்பட்ட திருக்கோணேஸ்வரத்தின் தோற்றம் கிறிஸ்த்துவுக்கு முற்பட்ட காலத்தில் உருவாகியிருக் வேண்டும் எனவே கிறித்துவுக்கு முற்பட்ட காலச் சமுதாயமாகக் கருதப்படும் இயக்கர் நாகர் வழிபாடு குறித்து விபரமாக ஆராயப்பட வேண்டும்.

## இயக்கர்-நாகர் வழிபாடுகள்

கிறிஸ்துவுக்கு முற்பட்ட கால இலங்கை மக்களின் மத வழிபாட்டு வழக்கத்தை ஆராய முற்படுகின்ற வேளை, ஆதிக்குடிகளான இயக்கர் நாகர் என்பவர்களுடைய வாழ்வியலில் இரந்து ஆரம்பிப்பதே பொருத்தமானதாகும். கி.மு.483 இல் விஜயனின் வருகைக்கு முன்னரேயே ஓரளவு நாகரீகமடைந்த மக்கள் இலங்கையில் வாழ்ந்திருக்கின்றார்கள்(10) இதைப் பௌத்த பாளி நூலான மகாவம்சமும் ஏற்றுக் கொள்ளுகின்றது. இயக்கர்களும் நாகர்களும் இயற்கை வழிபாட்டைப் பின்பற்றியிருந்தார்கள். இயக்கர்கள் மர வழிபாட்டையும், நாகர்கள் நாக வழிபாட்டையும் சிறப்பாகக் கொண்டிருந்தனர். பௌத்த மதம் இலங்கைக்கு அறிமுகம் செய்யப்படுவதற்கு முன்னரேயே மரவழிபாடு சிவலிங்க வழிபாடு ஜைனம் பின்பற்றப்பட்டிருக்கின்றது(11).

கோணேசர் ஆலயத் தோற்றக் காலம் குறித்த கணிப்பீடுகள் காலத்திற்கு காலம் வரலாற்று ஆய்வாளர்களினாலும் ஆர்வலர்களினாலும் வெளியிடப்படுகின்றன. இக் கணிப்பீடுகள் அனைத்துமே சாசனச் சான்றுகளைன அடிப்படையாகக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவப்பட்டதல்ல சில கணிப்பீடுகள் பிற்காலத்தில் எழுதப்பட்ட வரலாற்று இலக்கியங்களை ஆதாரமாகக் கொள்வதில் இருக்க வேண்டி எச்சரிக்கை இல்லாமல் கூறப்பட்ட கணீப்பீடுகளாகும். கோகர்ணத்தில் பிராமணக் கோயிலை மகாசேனன் அழித்தான் என்ற மகாவம்சச் செய்தியைப் பரணவிதானை ஏற்றுக்கொள்ள வேண்டி நிர்ப்பந்தத்தால் கோணேசர் ஆலயம் மகாசேனன் காலத்திற்கு முந்தியது என்ற முடிவுக்கு வரவேண்டியிருந்தது. கோணேசர் ஆலயத்தின் தோற்றக் காலத்தை ஒரு தெளிவான சாசனத்தால், உறுதிப்படுத்த முடியாத நிலை காணப்படுவதால், மகாசேனன் காலத்திற்கு முந்திய திருகோணமலை ஆதிக் குடிகளின் பண்பாடு மத நம்பிக்கை குறித்த தேடுதல் அவசியமாகின்றது. குறிப்பாகத் திருகோணமலைச் சமூகத்தின் ஆரம்ப வரலாற்றுப் பின்னணியை ஆராய்வதன் மூலம் சில முடிவுகளுக்கு வர முடியும். இலங்கையின் பல பாகங்களில் நடத்தப்பட்ட அகழ்வாய்வுகள்ட ஆதிக் குடிகள் பற்றிய தகவல்களைத் ததருகின்றது. குறிப்பாகப் புத்தளம் மாவட்டத்திலுள்ள பொம்பரப்பு (பென்னரிப்பு) திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி, கொட்டியாரம் பகுதிகளில் கிடைத்த தொல்லியற் தடயங்கள் தமிழகத்தில் திருநெல்வேலி உள்ளிட்ட தென் இந்திய நகர்களில் அடையாளங் காணப்பட்ட பெருங் கற்காலக் கலாச்சாரத்தோடு நேரடித் தொடர்பு கொண்டுள்ளதை அறிய முடிகின்றது.

தென் இந்திய திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றுக்குத் தென்புறமான ஆதிச்ச நல்லூரில் கிடைத்த ஈமைச் சடங்கு முறைகளை திரராவிடப் பண்பாடாக அடையாளங் காணப்படுவதால் குச்சவெளி, கொட்டியாரம் என்பனவும் திராவிடர்களின் ஆரம்ப வாழிடம் எனக் கொள்ள முடிகிறது. இலங்கையில் பொம்பரிப்பு (பொன்னரிப்பு) குச்சவெளி, கொட்டியாரம் பண்பாடு கி.மு 1000 வருடங்களுக்கு முற்பட்டதாகக் கருத முடிகின்றது. தென்னிந்திய பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய இந்த திராவிட மொழி பேசுகின்ற மக்கள் தமிழ் எழுத்து வடிவத்தையும், இந்து மத வழிபாட்டையும் இலங்கைத் தீவுக்குள் கொண்டு வந்தார்கள். (12) மிகப் புகழ்வாய்ந்த கிரேக்க நாடுகாண் பயணி டொலமி (Ptolemy) தனது பயணக் குறிப்பேட்டில் கி.மு 1000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் வாழ்ந்த இயக்கர்கள், தேவதைகளையும், நாகர்கள் நாகத்தையும் வழிப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். கிறிஸ்த்துவுக்குப் பிற்பட்ட 5ம் நூற்றாண்டைச் சேர்ந்த பாஹியான் என்பவனும், கி.பி 7ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஹுஆன் திஸாங் என்பவனும் ஆதிக் குடிகள் குறித்துக் கருத்துக்களைக் கூறியுள்ளார்கள். இயக்க வழிபாடும் நாக வழிபாடும் இயற்கை வழிபாட்டின் இரு வகை மூலக்கூறுகளே. பௌத்த பாளி நூலான மகாவம்சம் புத்தர் ஈழத்திற்கு இரண்டாவது. தடவை வருகை தந்தபோது நாக அரசர்களாக மகோதரா, குலோதரா என்பவர்கள் இரத்தினமிழைத்த சிங்காசனத்திற்காகப் போரிட முனைந்த போது ஏற்பட்ட முரண்பாடுகளைத் தீர்த்துச் சமரம் செய்து வைத்ததாக கூறுகின்றது. (13) மேலும் பல நாகர்களை பௌத்தர்களாகவும் மதமாற்றம் செய்தார் எனக் குறிப்பிடப்படுகின்றது. இது குறித்து மணிமேகலையிலும் குறிப்புக்கள் உண்டு. இரு நாக அரசர்களின் முரண்பாடுகள் தீர்க்கப்பட்டதன் பின்னர் மேலும் பல தமிழ் இந்துக்கள் பௌத்தர்களாக மாறினார்கள். இதைக் கந்தரோடை அகழ்வுகள் தெளிவுபடுத்துகின்றன. (14) இந்த மாற்றம் தென் இந்தியாவிலும் ஏற்பட்டது நாகர்கள் நாக வழிபாட்டை உடையவர்களாக கருதப்படுகின்றார்கள். இந்த நாகவழிபாடு இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே காணப்பட்ட பண்பாட்டுத் தொடர்பின் ஒரு அம்சமாமகும். பொதுவாக நாடுகளுக்கிடையே முதலில் ஏற்படும் வணிகத் தொடர்பே பின்பு பண்பாட்டுத் தொடர்பு ஏற்படுவதற்கு காரணமாகியிருக்கின்றது. பெருங் காற்காலச் சமூகத்தின் ஈமைத் தாழிகளில் கண்டறியப்பட்ட பெரிய சுறாக்களின் எலும்புகள் இந்த மக்கள் ஆழ் கடலோடுவதில் வலிமை பெற்றிருந்ததைக் காட்டுவதால் பெருங்கற்கால கல கட்டத்தில் இலங்கை - இந்தியக் கடற்தொடர்பு ஏற்பட்டதில் வியப்பில்லை. இந்திய-இலங்கை குடிநகர்வுகளும், வணிகமும் இரு நாடுகளுக்கிடையிலான மதப்பண்பாட்டுத் தொடர்புக்கு வழிகோலின எனக் கொள்வதே பொருத்தமானதாகும். இயற்கை வழிபாட்டின் கூறுகளான மர வழிபாடகள் நாக வழிபாடுகள் போன்றன ஆதிக் குடிகளிடையே உலகின் பல பாகங்களில் காணப்பட்டிருக்கின்றது. வட இந்தியப் பிரதேசத்திற்குரிய நாலாந்து நாகபுரி தென் இந்திய நகரான நாகர்கோவில் என்பன நாகர்களின் இருப்பிடங்களைச் சுட்டி நிற்கின்றன. மாமல்லபுரத்தில் அர்ச்சுனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவம் என்ற பெரும் கற்பாறை உள்ளது. அதன் நடுவே உள்ள பிளவில் நாகர்களைக் குறிக்கும் சிற்பங்கள் உள்ளது. இதை நாக வழிபாட்டிற்காக ஏற்படுத்தப்பட்ட சிலைகளாகக் கருதப்படுகின்றது(15)

திருகோணமலைக் கடற்கரையில் நடைபெற்றதாகச் சூளவம்சம் கூறும் ஒரு இதிகாசக் கதை மூலம் இப் பகுதியில் நாக வழிபாடு நிலவியதாகக் கொள்ளலாம். சூளவம்சம் கூறும் இந்த இதிகாசக் கதையின் நம்பகத் தன்மை குறித்த வினா எழுவது இயல்பானதே. ஆனாலும் சூளவம்சம் தொகுக்கப்பட்டதாகக் கருதப்படும் காலகட்டத்திலாவது திருகோணமலையில் நாக வழிபாடு தொடர்பான எண்ணங்களும் செயல்களும் இருந்திருக்கின்றது. எனக் கருதுவது ஏற்கத்தக்கதே வரலாற்று ஆய்வாளர்கள் மஜூம்தார், புசல்கர் ஆகிய இருவரும் இயக்கர் நாகர் என இதிகாசங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கைப் பூர்வீக குடிகள் தற்போது கிழக்கு மாகாணத்திலுள்ள திராவிடருக்கு முற்பட்ட பூர்வீக குடிகளான வேடர்களின் சந்ததியினராக இருக்கலாம் எனக் கூறியுள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது. இதன் மூலம் திருகோணமலையில் ஆதிக்குடிகளிடத்து நாக வழிபாடு பின்பற்றப்பட்டிருக்கிறது என்ற முடிவுக்கு வருவது சரியானதே. இந்திய தொல் இலக்கியங்களில் மட்டுன்றி, கிரேக்க, எகிப்திய இலக்கியங்களிலும் பாம்புகள் (நாகம்) அரைப்பங்கு தெய்வத்தன்மை பொருந்தியதாகக் கருதப்பட்டது. அதர்வ வேதங்களிலும் நாகங்கள் தெய்வ நிலையைச் சார்ந்தன என்ற கருத்துக்கள் உள்ளன. சிந்துவெளி அகழ்வு மூலம் கிடைத்த இலச்சினைகளில் யோகி நிலையில் இருக்கும் ஒரு உருவத்திற்கு அருகே பக்தி நிலையில் ஒரு பாம்பு இருப்பதைக் காண முடிகின்றது.

மேற் கூறப்படும் விடயங்களை ஆராய்கின்றபோது சிவ வழிபாட்டிற்கும் நாக வழிபாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது என்பதை ஏற்கமுடிகின்றது. மேலும் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலகட்டத்தில் இலங்கையில் இந்து மதம் பரவலாகப் பின்பற்றப்பட்டது என்பதை உறுதிப்படுத்த இலங்கைத் தொல்பொருற்சாசனங்கள் உதவுகின்றன. இந்தச் சாசனங்கள் பிராமணர்கள் பௌத்த மகாசங்கத்திற்கு அளித்த குகைத் தானங்களைக் குறிப்பிடுவதோடு, பிராமணர்கள் இலங்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவலாக வாழ்ந்திருக்கின்றார்கள். என்ற செய்தியையும் உறுதிப்படுத்துகின்றது. இலங்கைத் தொல்பொருள் இலாகாவின் உத்தியோக பூர்வச் சாசனப்பதிவு இலக்கங்களையே பின்வரும் சாசன இலக்கங்கள் குறிக்கின்றன. சாசன இலக்கம் 228 மகா அலகமுவ (அனுராதபுரம்) சாசன இலக்கம் 545 கோங்கல (அம்பாறை), சாசன இலக்கம் 812 மொலகொட (கண்டி), சாசன இலக்கம் 1003 ஸஸெறுவ (குருநாகல்) சாசன இலக்கம் 1060 பிச்சாண்டியாவ (புத்தளம்), மேற்படி குகைத் தானங்களை ஏன் பிராமணர்கள் செய்தார்கள் என்ற வினாவிற்கு விடையளிக்கப் போதிய வரலாற்று ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஆயினும், உதாரணங்களாக எடுத்துக்காட்டப்பட்ட இலங்கைத் தொல்பொரள் இலாகாவின் சாசனங்கள் மூலம் வட கிழக்கிற்கு வெளியேயும் பிராமணர்கள் பரவலாக வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதோடு, இந்துக்களின் மத வழிபாடம் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் இலங்கையில் செறிவாகப் பின்பற்றப்பட்டிருக்கின்றது. என்பதை அறிய முடிகின்றது.

புத்தர் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் சிங்களவர் இந்து மதக் கடவுளையே வணங்கியிருந்தார்கள் (16) பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படும் இந்துமதப் பெயர்கள் இந்த நாட்டில் பௌத்தம் பரவ முன்னர் இந்துமதம் வழிபாட்டிற் குரியயனவாக விளங்கியது.(17) மேலும், பண்டுகாபயன் சிவாலயத்தை அமைத்தான் என அறிய முடிகின்றது. கிறீஸ்துவுக்கு முற்பட்ட 3ம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கப்பெற்ற பல சாசனங்களில் சிவ என்ற பெயர்த் தொடர்புடைய பல பெயர்கள் காணப்படுகின்றன.(18) இத்தகைய குகைச் சாசனங்கள் இலங்கை எங்கும் பரந்து காணப்பட்டுள்ளன. என்பதுவே இங்கு முக்கியமான அம்சமாகும். இலங்கை வரலாற்றில் பெறும் தேவநம்பியதீசனின் தந்தையின் பெயர் முட்ட சிவ, பண்டுகாபயனின் தாய் மாமன் பெயர் கரிகந்த சிவ என்பதாகும். சிவ என்ற பெயர்த் தொடர்புகளும், சிவ என்ற பெயருடன் தொடர்பான பல குகைத் தான சாசனங்கள் மூலம் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் இலங்கையில் சிவவழிபாடு நிலவியது என்பதை ஏற்கலாம் எனப் பரணவிதான கூறுகின்றார். (19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோணேஸ்வரத்தின் தோற்றக் காலம்

இதுவரை திருக்கோணேஸ்வரத்தின் தோற்றக்காலத்தை நிர்ணயம் செய்ய முன்வந்த பல வரலாற்றுத்துறை ஆசிரியர்களின் கருத்துகளும் இங்கு அவசியமாகின்றது. கவிராஜவரோயரின் பாடலின் பிரகாரம் கி.து 1589இல் கோணேசர் ஆலயம் தோற்றம் பெற்றதாக அறிய முடிகின்றது. இலங்கைத் தொல்பொருளியற் துறைத் தலைவராக இருந்த பேராசிரியர் சேனக பரணவிதான திருக்கோணேஸ்வரம் அனேகமாக மகாசேனன் (கி.பி 302) காலத்திற்கு முந்திய காலகட்டத்தில் கட்டப்பட்டதாகக் கூறுகின்றார். (20) பி.ஈபீரீஸ் அவர்கள் விஜயனின் வருகைக்கு (கி.மு 483) அதிக காலத்திற்கு முன்னரே உருவாக்கப்பட்டது எனக் கருத்து தெரிவித்துள்ளார் (21) சிங்கள வரலாற்றாசிரியரான பவுல் பீரிசின் கருத்துப்படி நாகரின் வழிவந்தோர் இலங்கையின் வடக்கு வட மேற்கு, வட கிழக்குப் பகுதிகளில் ஈஸ்வரனுக்குரிய ஐந்து ஆலயங்களைக் கட்டினார்கள் இதில் திருகோணமலையில் அமைக்கப்பட்ட கோணேஸ்வரம் உள்ளடங்குகின்றது(22) சியர் அவர்களின் கருத்துப்படி கி.மு 1589 கோணேஸ்வரம் தோற்றம் பெற்றதாகக் கருதுகின்றார்(23) கலாநிதி செ.குணசிங்கம் அவர்கள் திருக்கோணேஸ்வரம் ஆகக்குறைந்தது கிறிஸ்துவிற்கு முற்பட்ட ஆறாம் நூற்றாண்டுக்கும், முதலாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் தோற்றம் பெற்றிருக்க வேண்டும் எனக் கருதுகின்றார்.(24) கொட்ரிங்ரன் 1927 இல் வெளியிட்ட தனது ஆயிவில் கோணேசர் ஆலயம் கி.மு 2590இல் உருவாக்கப்பட்டதாக குறிப்பிடுகின்றார். (25)கி.மு6ம் நூற்றாண்டுக்கு முன்னரே வழக்கத்திலிருந்த நாகவழிபாடும் இந்து மத வழிபாடும் இலங்கையில் பின்பற்றப்பட்டது. என்ற கருத்தை நிறுவ முடிகின்ற காரணத்தால் இந்து மதக் கடவுளுக்கான ஆலயமும் கி.மு காலத்திற்கு முன்பாகவே அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

வரலாற்று ஆய்வாளர் பீரிஸிஸ் கருத்துப்படி நகுலேஸ்வரம், முனீஸ்வரம், கேதீஸ்வரம், தொண்டேஸ்வரம், திருக்கோணேஸ்வரம் என்பன அனைத்தும் சிவ வழிபாட்டுத் தலங்களாக இருப்பதோடு இலங்கையின் வட, வடமேற்கு வட கிழக்குப் பிராந்திய துறைமுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரங்களில் காணப்படுவதால் தென் இந்திய பண்பாட்டுத் தொடர்பை மையப்படுத்தி இந்த ஆலயங்கள் அனைத்தும் விஜயனின் வருகைக்கு நீண்ட காலத்திற்கு முன்பு தோற்றம் பெற்றவை(26) மேற்கூறப்பட்ட முடிவுகளையும் காரணங்களையும் தொகுத்து நோக்குமிடத்து கிழக்கிலங்கையில் குறிப்பாகத் திருகோணமலையில் இந்து மதத்துடன் தொடர்புடைய நாக வழிபாடும் சிவ வழிபாடும் விஜயனின் வருகைக்கு முன்பாக (கி.மு5) பின்பற்றப்பட்டிருக்கின்றது. எனவே திருக்கோணேஸ்வரத்தின் தோற்றக்காலம் கி.மு 5ம் நூற்றாண்டுக் காலத்திற்கு உரியது என ஏற்பது பொருத்தமானதாகும். ஒரு முழுமையான ஆய்வு திருக்கோணேஸ்வரப் பகுதியிலவ் நடத்தப்பட்டு அகழ்வுப் பொருட்களைக் கரிம ஆய்வுக்கு உட்படுத்தினால் கோணேசர் ஆலயத் தோற்றக் காலத்தை அறிவியல் அடிப்படையில் உறுதி செய்யமுடியும். இந்த ஆய்வுக்கு வரலாற்று அறிவுடன் புவித்தரைத்தோற்றவியல் கால நிலை குறித்த சிறப்பான அறிவு மிக அவசியமானதாகும்.

## தென்னிந்திய அரசுகளின் எழுச்சிக் காலம்

16ம் நூற்றாண்டுக்கு முந்திய இலங்கை வரலாற்றின் போக்குகளைத் தென்னிந்திய அரசுகளே பெருமளவுக்குத் தீர்மானித்திருக்கின்றன. தென்னிந்திய நிலப்பரப்பில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களின் நேரடிப் பாதிப்புக்களை இலங்கை வரலாற்றில் தெளிவாகக் காணலாம்.

வரலாற்றில் பல தடவைகள் திருகோணமலை உட்பட இலங்கையின் ஏனைய பகுதிகள் தமிழக அரசுகளின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. குறிப்பாகத் திருகோணமலை மீது தமிழக அரசுகள் அரசியல் ஆதிக்கம் செலுத்துவதற்கு புவிசார் கேந்திர அமைப்பே அடிப்படைக் காரணமாகக் கருதுகின்ற போதும் ஒரே பண்பாடுடைய மக்கள் பாக்குத் தொடுகடலுக்கு இரு மருங்கிலும் வாழ்ந்திருப்பதே மிக முக்கியமான காரணமாகும். இதுவே தமிழக அரசுகளின் எழுச்சி இலங்கை மீது அரசியல் ஆதிக்கத்தை உருவாக்கியது. பல்லவர், பாண்டியர் போலல்லாது சோழர்களது எழுச்சி மிகப் பலமாக உருவாகியது. சோழர்களின் எழுச்சிக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலைத் துறைமுகம் தவிர்க்க முடியாத ஒரு தேவையாக இருந்தது. குறிப்பாகத் தமிழகத்தில் பல்லவர் ஆட்சியும், சோழ அரசின் எழுச்சியும், வீழ்ச்சியும் திருகோணமலையின் வரலாற்றை நேரடியாக பாதித்திருக்கின்றது. பூகோளரீதியாக தென் இந்தியப் பிராந்தியத்தை நெருங்கி இலங்கை காணப்படுவதும், தமிழக வணிகர்களுக்குத் தென் இந்திய கடல் எல்லைக்கு அப்பால் பயனுள்ள துறைமுகமாக திருகோணமலை விளங்குவதும் அடிப்படைக் காரணமாகியது.

கோணேஸ்வரமும், திருகோணமலைத் துறைமுகமும் தமிழக அரசர்களின் அதிக கவனத்தை ஈர்த்திருந்ததை திருகோணமலை மாவட்டத்தில் கிடைத்த பல கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. இலங்கையின் ஏனைய மாவட்டங்களில் கிடைத்த பல்லவ, சோழக் கல்வெட்டுக்களை விடத் திருகோணமலையில் கிடைத்த கல்வெட்டுக்களே எண்ணிக்கையில் மிக அதிகமாகும். எனவே திருகோணமலையின் ஆரம்ப கால வரலாற்றினைத் தமிழக வரலாற்றிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. குறிப்பாகச் சோழர்கள் இலங்கையைப் போரில் தோற்கடித்து பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டிருந்த போதும் திருகோணமலையைத் தமது வணிகத் துறைமுக நகராக வைத்திருக்க விரும்பியதில் ஆச்சரியம் எதுவும் இல்லை. இதற்கான தேவை என்ன என்பதை அறிய தமிழக வரலாற்றுப் பின்னணியின் அறிவு மிக அவசியமானதாகும். அத்துடன் தமிழகத்தில் நிலவிய சமூகப் பின்னணிகளையும், அதற்கான வரலாற்றுக் காரணங்களையும் நன்கு புரிந்து கொண்டால் தான் இலங்கையில் தமிழக ஆட்சியாளர்களினால் திருகோணமலையில் உருவாக்கப்பட்ட சமூக அமைப்பை அறிந்து கொள்ள முடியும். குறிப்பாகக் கோணேசர் கல்வெட்டில் குளக்கோட்டனால் கூறப்பட்ட செய்திகளையும் நன்கு விளங்கிக் கொள்ள முடியும்.

## தமிழக அரசுகளின் தோற்றமும் வளர்ச்சியும்

தமிழக நிலப்பகுதியில் மனித இனம் சுமார் இரண்டு இலட்சம் ஆண்டு காலத்திற்கு முன்னர் வாழ்ந்ததாக தொல்பொருள் தடய ஆவணங்கள் உறுதி செய்த போதிலும் அரசுகளின் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்ககாலச் சமுதாயத்தையொட்டி கி.மு 400 ஆண்டுகாலப் பகுதிகளில் தான் உருவாகியதாகக் கருதப்படுகின்றது. சங்க காலச் சமூகத்திற்கு முந்திய தமிழ் சமூக அமைப்பில் இனக் குழுக்களே ஆட்சி செய்தன. குழுக்களாக வாழ்ந்த மக்கள் மலைகளையும், காடுகளையும் சார்ந்து வாழ்ந்ததால், பொதுவாகக் குறிஞ்சி, முல்லைப் பண்புகளே அதிகம் காணப்பட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். இரும்புப் பயன்பாடே மருதநில நாகரீகத்திற்கு வழிகோலியது. இரும்பின் பயன்பாட்டால் புதிய உற்பத்திக் கருவிகள் உருவாகின. இது விவசாயத்தில் உபரி உற்பத்தியை தோற்றுவித்தது. உபரி உற்பத்தி என்பது தேவைக்கு அதிகமாக விளைச்சல் எனப்பொருள்படும். வேளாண்மைக்குத் தேவையான உழைப்புக் கருவிகள் வளர்ச்சியடையத் தானிய உபரி உற்பத்தி சொத்தாக மாறத் தொடங்கியபோது உடமை வர்க்கம், உடமையற்ற வர்க்கம் என வர்க்க வேறுபாடுகள் உருவாகின. நிலம் அடிப்படையாக இருந்த போதிலும் சொத்துடமையே இங்கு உடமை வர்க்கம் தோன்றக் காரணமாகியது.

உபரி உற்பத்தி விவசாயத்துடன் தொடர்புடைய சிறு கைத்தொழில்களும், வணிகமும் வளரத் தூண்டியது. இதுவரை அடையாளங் காணப்பட்ட இனக்குழு அல்லது குலச் சமுதாயம் மறைந்து உபரி உற்பத்தி காரணமாக தனியுடமையானது குலங்களுக்குள் இருந்த வலிமை வாய்ந்தவனைக் குலத் தலைவனாக்கியது.

கி.மு 400 ஆண்டுகளில், சங்க காலச் சமுதாயத்தில் குல மோதல்கள் இறுதிக் கட்டத்தை அடைந்தன. அடிக்கடி நிகழ்ந்த போர் காரணமாக வீரம் இலக்கியங்களின் கருப்பொருளாகியது. இதனால் தான் பேராசிரியர் கைலாசபதி சங்ககாலத்தை வீரயுகம் என அழைத்தார். இதுவரை காணப்பட்ட இரத்த உறவுடன் கூடிய குழுமுறை ஆட்சி நீங்கி, நிலப்பரப்பை அடிப்படையாகக் கொண்ட சிறு சிறு ஆட்சிகள் தோன்றின. இதற்குச் சொத்துடமையே அடிப்படையாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க இலக்கியத்தில் பேசப்பட்ட பாரி, ஓரி, பேகன், ஆய், காரி, அதியமான் உள்ளிட்ட 112 ஆட்சியாளர்களும் குறு நில மன்னர்களே. சில சிற்றரசுகளுக்குத் தலைமை வகித்த ஒருவன் தன்னைப் பேரரசனாக கூறிக் கொண்ட போதும் தோற்கடிக்கப்பட்ட சிற்றரசுக்களைத் தனது அரசுடன் இணைத்து ஒரு பலம் வாய்ந்த பேரரசை உருவாக்க முயலவில்லை. ஐரோப்பிய வரலாறுகளில் அறியப்படும் பேரரசைப் போன்று பலம் வாய்ந்த ஒரு மைய அரசை உருவாக்கத் தமிழ் மன்னர்கள் விரும்பவில்லை. மாறாகக், கப்பம் அல்லது திரை பெறுவதன் மூலம் தமது மேலாண்மையை உறுதிப்படுத்த விரும்பினார்கள். தமிழ் மன்னர்களின் இந்தப் பலவீனமான போக்குத்தான் 12ம் நூற்றாண்டில் மொகலாயரும், அதன் பின்னர் வந்த ஐரோப்பிய காலனித்துவ சக்திகளும் தமிழகத்தில் ஆட்சியைக் கைப்பற்ற இடமளித்ததோடு, பின்னர் இலங்கைத் தமிழ் இராச்சியங்களின் வீழ்ச்சிக்கும் அடிப்படைக் காரணமாகியது. இலங்கையிலும் ஒரு பலமான பரந்துபட்ட தமிழ் இராச்சியம் உருவாகத் தடையாக இருந்தது.

## பல்லவர் ஆட்சியின் தோற்றம்

சங்க கால குறுநில மன்னர்களுடைய ஆட்சி தளர்ச்சியடைய கி.பி 3ம் நூற்றாண்டில் சேர, சோழ, பாண்டிய அரசுகள் தோற்றம் பெற்றன. கி.பி 5ம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் சேர, சோழ, பாண்டியர்களும், களப்பிரர்களும் ஆட்சி செய்தனர். கி.பி 4ம் , 5ம் நூற்றாண்டுகளில் தான் தமிழகத்தில் மருத நில நாகரீகம் செழித்தோங்கத் தொடங்கியது. விவசாயமும், கைத்தொழிலும் வளர்ச்சியடையத் தொடங்கின. உள்நாட்டு உற்பத்தியும், வெளிநாட்டு வணிகமும் பெருகத் தொடங்கின. பெருகி வந்த உற்பத்தியின் விளைவான உற்பத்தியிலே பங்கெடுத்துக் கொள்ளாத ஒரு வர்க்கம் தோன்றியது. பேராசிரியர் க.கைலாசபதி இவர்களை வியாபாரிகள் வர்க்கம் என அழைத்தார். சங்கம் மருவிய காலத்தில் பெரு வளர்ச்சியுற்ற வணிக வர்க்கமே பல்லவர் காலத்தில் நிலமானிய முறை தோற்றம் பெறக் காரணமாகியது. நிலமானிய முறையின் அரசியல் சாரம் நிலத்தை மையப்படுத்திய நிர்வாக அமைப்பை உருவாக்குதல், அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரத் தாற்பரியமானது உழைப்போரை நிலத்தோடு இணைத்து பெறப்படும் உற்பத்தியின் ஒரு பகுதியை அரசுக்கு அளித்தலாகும். இதனால் சமுதாயத்திற்குள்ளேயே வர்க்கப் பிரிவுகள் உறுதிபடத் தொடங்கின. தமிழ்நாட்டில் வணிக வர்க்கம் தல தூக்க முயன்ற போது கலை இலக்கியத்திலும் மாற்றம் உருவாகத் தொடங்கின. கோவலன் என்ற வணிகன் சிலப்பதிகார நாயகனாகினான். பல்லவ அரசர்கள் பிராணமணர்களுக்கு நிலங்களைத் தானமாக வழங்கியதோடு, பிரமதேயங்களையும் (பிராமணக் குடியிருப்புக்கள்) உருவாக்கினார்கள்.

இதுவரை நிலத்தில் ஆதிக்கம் செலுத்தாது நிலத்தைப் பயன்படுத்திய பிராமணச் சமூகம் அதிகாரம் உள்ள நிலவுடமைச் சமூகமாகத் தன்னை மாற்ற முடிந்தது. வணிகர்களின் பெரும் ஊர்களான காஞ்சிபுரம், மகாபலிபுரம் என்பன பெருநகராக உருவாகத் தொடங்கியது. சமணர்களின் ஆதரவு பெற்ற வணிக வர்க்கத்திற்கும், நிலவுடமைப் பிராமணர்களுக்கும் அதிகாரப் போட்டி உச்ச நிலையை எட்டியது. வணிகர்களை எதிர்க்கின்ற போது வணிகர்களை ஆதரிக்கின்ற சமணர்கள் தாக்கப்பட்டனர். சமணர்களையும், பௌத்தர்களையும் எதிர்ப்பது ஒன்றும் இலகுவான செயலல்ல என்று உணர்ந்த பிராமண நிலக்கிழார்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு பக்தி இயக்கத்தை உருவாக்க வேண்டியிருந்தது. சமணப் பள்ளியில் (ஆலயம்) கல்வியும், மருத்துவமும் வழங்கப்பட்டதால், சமணம் தமிழக சமூகத்தில் ஆழ வேரூன்றி இருந்தது. இந்துக்களுக்கு சமணத்தையோ அல்லது பௌத்தத்தையோ எதிர்ப்பது ஒரு சவாலாகவே இருந்தது.

சைவ அடியார்களான காரைக்கால் அம்மையார், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் மற்றும் பேய் ஆழ்வார், பொய்கை ழேவார், பூதத்தாழ்வார் போன்ற வைணவ மத அடியார்களும் சமணத்திற்கும் பௌத்தத்திற்கும் எதிராக ஒரு பக்தி இயக்கத்தைக் கட்டி எழுப்பினார்கள். இந்தப் பக்தி இயக்கம் பரந்து பட்ட மக்களை ஒன்று திரட்ட வேண்டியிருந்தது. பழைய வேத வேள்வி வழக்கிலிருந்து கோவில் வழிபாட்டு முறை மாற்றியமைக்கப்பட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகமத்தை அடிப்படையாகக் கொண்ட தனி மனிதப் பிரார்த்தனை பெரு வழக்காயிற்று. சமண, பௌத்த மடங்கள் போன்று சைவ மத மடங்களும் உருவாக்கப்பட்டன. இந்து மத ஆலயங்கள் மட்டுமல்ல, பிரமதேயங்களும், சைவமடங்களும் சைவ மத வளர்ச்சியை ஊக்குவித்தன. சைவ மத வரலாற்றில் பல்லவர் காலம் பொற்காலமாகியது.

இன்று திராவிடக் கலையெனப் போற்றப்படும் தென் இந்தியக் கட்டடக் கலைக்குப் பல்லவர்களே வித்திட்டார்கள். அழிவு நிலையிலிருந்த பல ஆலயங்களுக்குத் தலபுராணங்களும், பதிகங்களும் பாடப்பட்டன. வடமொழிக்கும் பிராகிருதத்திற்கும் எதிராகத் தமிழும் தமிழிசையும், பக்தி இயக்கத்தில் முன்னுரிமை பெற்றன. 'தமிழோடிசை பாட மறந்தறியேன், என்றார் அப்பர். 'மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்' என்ற கோசம் தமிழகம் எங்கும் கேட்டது. இந்தக் கால கட்டத்தில் தான் தென் இந்தியாவில் மட்டுமின்றி, வட இந்தியாவிலும் நன்கு அறியப்பட்ட திருக்கோணேசர் ஆலயத்திற்கு திருஞானசம்பந்தர் பதிகம் பாடினார். இங்கு குறிப்பாக பல்லவர் பற்றி மிக விரிவாகக் குறிப்பிடுவதற்கு மூன்று காரணங்கள் உள்ளன.

1. பல்லவர் காலத்தில் (கி.பி 7ம் நூற்றாண்டு) வாழ்ந்த திருஞானசம்பந்தர் திருகோணமலைப் பதிகம் பாடியதன் மூலம் கோணேசர் ஆலயம் குறித்த கவனத்தை ஈர்த்திருந்தார்.

2. பல்லவராட்சியில் தான் முதற்தடவையாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் அரசரீதியான தொடர்பு உருவாகியது. இதற்கு முன்னர் தனிப்பட்ட தொடர்பே காணப்பட்டது.

3. பின்வந்த சோழரின் வெளிநாட்டு தொடர்பு மற்றும் இந்து மதப் பணிகளுக்கு ஆரம்பத் தளங்களை உருவாக்கியவர்கள் பல்லவர்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் தான் ஆய்வாளர்கள் பல்லவர் காலம் தமிழக வரலாற்றின் திருப்புமுனை எனக் கருதுகின்றார்கள். எனவே பல்லவர் கால வரலாற்றுப் பின்னணியை விபரமாக தெரிந்து கொள்வதன் மூலமே திருகோணமலையில் பல்லவராட்சியின் தாக்கங்களையும், அதன் தொடர் விளைவுகளையும் புரிந்து கொள்ள முடியும்.

**பல்லவர் காலம்**

திருக்கோணேஸ்வரம் குறித்த உறுதியான வரலாற்று ஆதாரங்களைப் பெறும் மற்றுமொரு காலமாக பல்லவர் காலத்தையே குறிப்பிட முடியும். கி.பி 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவ அடியாரான திருஞானசம்பந்தர் பாடிய திருகோணமலைப் பதிகம் திருக்கோணேஸ்வரம் திருகோணமலையில் அமைந்துள்ள செய்தியைத் தருகின்றது. பல்லவர் காலத்தில் இலங்கையின் வேறெந்தப் பகுதியையும் விட திருகோணமலைப் பகுதியிலே பல்லவச் செல்வாக்கு கூடுதலாகக் காணப்பட்டுள்ளது. (1) திருகோணமலை மாவட்டத்திலுள்ள குச்சவெளி, திரியாய்க் கல்வெட்டுக்கள் திருகோணமலையில் பல்லவர்களின் செல்வாக்கை உறுதிப்படுத்துகின்றன. குச்சவெளிக் கல்வெட்டு வடமொழியிலும், திரியாய், கற்சாசனம் பல்லவ கிரந்தத்திலும் காணப்படுகின்றன. இக் கல்வெட்டுக்களை ஆராய்ந்த பரணவிதான மானவர்மன் காலத்து பல்லவர் தொடர்புகளை உறுதிப்படுத்துவது போன்று திரியாய் கல்வெட்டு அமைந்துள்ளது எனக் கூறியுள்ளார்.

தமிழகத்தில் பல்லவராட்சியில் பெருவளர்ச்சி கண்டிருந்த சிற்பக்கலை வளர்ச்சியானது இலங்கைக் கட்டடக்கலை வளர்ச்சியிலும் ஆழமான தாக்கத்தினை உண்டாக்கியது. நான்காவது அக்கபோதி முதல் மானவர்ம காலம் வரை (கி.பி 667-718) இலங்கையில் பல்லவச் செல்வாக்கு உச்ச நிலையில் இருந்தது. அக்கிரபோதி மன்னரின் முதலமைச்சர்களாக இருந்த பொத்த குட்டன், பொத்த சாத்தன் ஆகியோர் பல்லவ வம்சத்தைச் சேர்ந்த தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி 436 இல் சிம்மவர்மன் என்ற பல்லவன் காஞ்சியில் களப்பிரர் காலத்தில் நிலையான ஆட்சியை ஏற்படுத்த முயற்சி செய்தான். பல்லவர்களுள் சிம்மவர்மனும், இவன் மகன் சிம்மவிஸ்ணுவுமே காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட ஆட்சியை ஏற்படுத்தியவர்கள். இவர்கள் உறுதிப்படுத்திய பல்லவராட்சி கி.பி9ம் நூற்றாண்டு வரை வலிமையுடன் தொடர்ந்தது. தமிழக வரலாற்றில் வலிமையான படை முதலில் தோற்றம் பெற்றது. வலிமையான படை முதலில் தோற்றம் பெற்றது. வலிமையான அரசை உருவாக்கிய பல்லவர்கள் வெளிநாடுகளுடன் தொடர்புகொள்ள வேண்டிய தேவை இருந்ததால், அயலுறவுக் கொள்கைகளையும் வகுத்துக் கொண்டார்கள். பல்லவர்களின் எழுச்சிக்குத் துணை நின்ற வணிகர்களுக்கு வெளிநாட்டு வர்த்தகம் தவிர்க்க முடியாத தேவையாக இருந்தது. இதுவரை தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையே இருந்த தனியார் வணிகம் போலல்லாது அரச ஆதரவுடன் வணிகம் உருவாகியது. ஏனெனில், வணிகர்கள் பல்லவ அரசுக்கு ஆதரவளித்தனர். வணிகத் தொடர்பே பின்பு பண்பாட்டுத் தொடர்புக்கு காரணமாகிறது என்பதை உலக வரலாறு பல இடங்களில் பதிவு செய்திருக்கின்றது.

இலங்கை இளவரசன் மானவண்ண தனக்கு கிடைக்க வேண்டிய ஆட்சி உரிமையைப் பெறுவதற்காக, பாண்டிய மன்னான நரசிங்க வர்மனிடம் (கி.பி 630 – கி.பி 668) உதவி கோரினான். நரசிங்க பல்லவன் அளித்த உதவியினால் பதவியேற்ற மானவண்ண பல்லவருடன் நெருங்கிய தொடர்பை வைத்துக் கொண்டான். எனினும் மீண்டும் பதவி இழந்த மானவண்ண தமிழகம் சென்று பாண்டிய அரசில் 20 வருடங்கள் வாழ்ந்த பின்னர் இரண்டாம் நரசிங்க வர்மனின் ஆதரவோடு இலங்கையில் முடி சூடிக் கொண்டான். இதனால் பல்லவ சிங்களத் தொடர்பு நீடித்துக் கொண்டது. பல்லவக் கலைஞர்கள், மற்றும் போர் வீரர்கள் இலங்கையில் குடியேறிக் கொண்டார்கள். வணிக நோக்கம் கொண்ட பல்லவர்களுக்கு மாந்தோட்டை, சலாபம் (சிலாபம்), திருகோணமலை போன்ற துறைமுக நகரங்கள் வணிகத்தைப் பெருக்க உதவியாக இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி 7ம் நூற்றாண்டில் திருகோணமலை மாவட்டம் வணிகத்தில் வளர்ச்சி பெற்றிருந்ததைத் திரியாய் பாறைக் கல்வெட்டு மூலம் அறிய முடிகின்றது. இவ்விடத்திற் கிரிகண்ட சேத்தியமொன்றை ரசபுக்க, வல்லிக என்ற இரு வணிகர்களின் அமைப்பு உருவாக்கியது பற்றி இக் கல்வெட்டுக் கூறுவதோடு இத்தகைய வணிக கூட்டத்தினர் சமுத்திரத்தினைக் கடந்து அங்கு வந்தவர்கள் என்றும், கடலிற் பிரயாணஞ் செய்வதில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்ததோடு பொருட்களை வாங்கி விற்பனை செய்வதிலும் ஈடுபட்டிருந்தனர் என்றும் இவர்களின் வர்த்தகப் பொருட்கள் பல்வேறு கப்பல்களில் கொண்டு செல்லப்பட்ட எனவும் குறிப்பிடுகின்றது. (2)

அநுராதபுர தொல்பொருட் தடயங்களிலிருந்து பல்லவர்களின் தொடர்பு அநுராதபுரத்திலும் இருந்திருக்க வேண்டும் எனக் கருத முடிகின்றது. துறைமுக நகரங்களில் மாத்திரமல்லாமல் இலங்கைத் தீவின் ஏனைய பகுதிகளிலும் பல்லவச் செல்வாக்கு காணப்படுகின்றது. ஆயினும், தென் இந்திய வணிகர்களுக்கு வசதியாக இருந்த திருகோணமலையே பல்லவர்கள் அதிகம் கவர்ந்தது. திருஞானசம்பந்தர் பாடியது போன்று குடிதனை நெருங்கி பெருக்கமாய் திருகோணமலை தோன்றியதற்கு, வணிகத்திற்கு ஏற்ற துறைமுக வசதி இருந்தது மாத்திரமல்ல, ஏற்கனவே புகழ் பெற்றிருந்த சிவாலயமும் காரணமாக இருந்திருக்கின்றது.

இன்று இலங்கையில் பௌத்த பண்பாடாகச் சித்தரிக்கப்படும் நாலந்த பௌத்த விகாரை, இசுறு முனியா, தம்புள்ள குகை விகாரை, போதிசத்துவ சிலை என்பன பல்லவ கலை வடிவங்களுக்கான சில உதாரணங்களாகும். இசுறுமுனியா என்பது ஈஸ்வர முனி என்பதன் திரிபாகும். திருகோணமலையில் திரியாயில் காணப்படும் பௌத்த தேவாலயச் சிதைவுகள் பல்லவக் கலையை நினைவுபடுத்துகின்றது. திரியாய் பௌத்த தேவாலயமான கிரிகண்ட விகாரையின் கலைப் படைப்புக்கள் பல்லவக் கலைஞர்களினால் உருவாக்கப்பட்டிருக்கிறது. பல்லவக் கலைஞர்கள் இத்தகைய பாரிய பணியில் ஈடுபட்டிருப்பதால், அவர்கள் மிக நீண்ட காலம் இலங்கையில் தங்கியிருந்திருக்க வேண்டும். இதற்கு பல்லவ இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்பு சீராக இருந்திருக்கின்றது. இதே போன்று தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற நாடுகளிலும் பல்லவக் கலை வடிவங்கள் இன்றும் அடையாளங் காணக்கூடியதாக உள்ளது. இலங்கையில் காணப்படும் இந்து ஆலயங்கள் அனைத்துமே பல்லவக் கலை வடிவத்திலிருந்து பிறந்தவையே. இரண்டாம் நரசிம்மன் மாமல்லபுரத்தில் கடற்கரைக் கோயில்களை சிறப்புடன் அமைத்தான். ஆரம்ப காலத்தில் திருக்கோணேஸ்வரம் ஒரு குகைக் கோயிலாக இருந்து பின்னர், பல்லவர் காலத்தில் கோபுரங்களுடன் கூடிய கருங்கற் கோயில் வடிவத்தைப் பெற்றிருக்க வேண்டும். ஏனெனில் பல்லவர் காலத்திற்கு முன் பொதுவாகக் குகைக் கோயில்களே காணப்பட்டன. ஆலயத்தில் கோபுரங்களை வடிவமைக்கும் கட்டடக் கலை மரபு பல்லவர்களினால் தான் முதலில் உருவாக்கப்பட்டது. போர்த்துக்கேயத் தளபதி கொன்ஸ்ரன்ரைன் தசா த நொரொஞ்□ா 1624ல் கோணேசர் ஆலயத்தை இடிப்பதற்கு முன்னர் வரையப்பட்ட கோணேசர் ஆலயத்தின் வரைபடமானது பல்லவர் கால சிற்பக்கலையை வெளிப்படுத்துகின்றது. பல்லவ அரசர்கள் திருக்கோணேஸ்வரத்தில் கருங்கல்லினால் ஒரு காவியத்தைப் படைத்திருந்தார்கள். குறிப்பாகத் திரியாயிலும், திருகோணமலையிலும் கிடைத்த விஷ்ணு சிற்பங்கள் பல்லவக் கலையில் உருவாக்கப்பட்டவையே.

## சோழரின் தோற்றமும் எழுச்சியும்

இலங்கை வரலாற்றில் சோழர் ஆட்சி தனிச்சிறப்பு பெறுவதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. தமிழக வரலாற்றில் சோழர்களே இலங்கையின் பெரும் பகுதியை முதன் முதலாக தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்த பெருமையைப் பெறுகின்றார்கள். அத்துடன் சோழர்கள் இலங்கையில் சுமார் 77 ஆண்டுகள் தொடர்ச்சியான நிலையான ஆட்சியையும் ஏற்படுத்தியிருந்தார்கள். இலங்கையில் சோழரினால் கைப்பற்றப்பட்ட பகுதிக்கு மும்முடிச் சோழ மண்டலம் எனப் பெயரிட்டு, இலங்கையை சோழராட்சியத்தின் ஒரு மாகாணமாகச் சேர்க்கப்பட்டது. சோழர்களினால் சிங்கள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னர்களின் இராச்சியத்திற்கு பல நூறு வருடங்களாகத் தலைநகராக விளங்கிய அநுராதபுரம் அழிக்கப்பட்டது. இராசராசனின் வெற்றியைக் குறிக்கும் பொருட்டு சோழப் பேரரசனான இராசராசனின் விருதுப் பெயரான ஜனநாதமங்கலம் என்ற பெயருடன் பொலநறுவை சோழர்களின் புதிய தலைநகராகப் பிரகடனம் செய்யப்பட்டது. சோழரின் ஆட்சியில் தான் திருகோணமலை முதல் முறையாக தமிழக ஆட்சியின் கீழ்கொண்டு வரப்பட்டதாக அறியப்படுகின்றது. சோழர்கள் இலங்கையின் பெரும்பாலான பாகங்களை நீண்ட காலமாக ஆட்சி செய்த போதிலும், திருகோணமலையில் அவர்களது ஆதிக்கம் அதிகளவு காணப்பட்டிருக்கின்றது. அது மட்டுமின்றி சோழர்களின் செய்திகளைக் கூறும் கல்வெட்டுக்கள் வேறு மாவட்டங்களை விட அதிகளவு திருகோணமலை மாவட்டத்திலேயே கிடைத்துள்ளன. திருகோணமலையில் சோழர் கால நடவடிக்கைகளை நன்கு புரிந்து கொள்வதற்கு தமிழகத்தில் சோழர் ஆட்சியின் வரலாற்றுப் பின்னணி குறித்து சற்று விரிவாகத் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

தமிழக வரலாற்றில் சோழருடைய எழுச்சி தவிர்க்க முடியாத ஒரு தேவை எனப் பல வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். சோழ இராச்சியத்திற்கான தேவை ஏற்கனவே உருவாகிய நிலையில் பல்லவ இராச்சியம் வலிமை இழக்கத் தொடங்கியது. இதற்குப் பல காரணங்கள் முன் வைக்கப்படுகின்றன. உபரி உற்பத்தி காரணமாக வலிமை பெற்றிருந்த உடமை வர்க்கம் பல்லவர் ஆட்சிக்கு அளித்த ஆதரவை விலக்க முற்பட்டதே உடனடிக் காரணமாகக் கருதப்படுகின்றது. குறிப்பாகத் தஞ்சை நிலக்கிழார்கள் அல்லது வேளாளர் பல்லவர்களுக்கு அளித்த ஆதரவை விலக்கியதை முக்கிய காரணமாக வரலாற்று ஆய்வாரள்கள் கருதுகின்றார்கள். நிலக்கிழார்களின் அரசியல் முடிவுக்கான காரணங்களை விரிவாக ஆராய்வதன் மூலம், சோழர்கள் இலங்கை மீது தொடுத்த போர்களுக்கும், திருகோணமலையை வணிக நகராக வைத்திருக்க வேண்டிய தேவைக்குமான காரணங்களை அறிந்து கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லவர் ஆட்சிக் காலத்தில் பெருகி வந்த உபரி உற்பத்தி காரணமாக வணிக வர்க்கம் உருவாகியது. உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் இடையில் தரகர்களாக உருவாகிய குழுவினரே பின்பு வணிக வர்க்கமாகத் மாற்றினார்கள் என பேராசிரியர் க.கைலசாபதி கருதுகின்றார். இவர்கள் நேரடியாக உற்பத்தியில் பங்கெடுத்துக் கொள்ளாத போதும் பெரும் சொத்துக்களைச் சேர்த்ததன் மூலம் சமூகத்தில் ஒரு சத்தி மிக்க வர்க்கமாக உருவாகினார்கள். இந்த வணிகர்களின் தோற்றமும் வளர்ச்சியுமே பிற்காலத் தமிழக அரசியல் மாற்றங்களுக்குக் காரணமாகின்றன.

உற்பத்திப் பொருட்களை உள்நாட்டில் விற்றுக் கொள்வதற்காகவும், அயல்நாடுகளுடன் வணிகத்தை மேற்கொள்வதற்காகவும் நகரத்தார் என அழைக்கப்பட்ட வணிகர்களுக்கான நகரம் என்ற அமைப்புத் தோன்றியது. காஞ்சிபுரம், மகாபலிபுரம், காவிரிப் பூம் பட்டினம் ஆகியவை நகரங்களாக வளர்ச்சியடைந்தன. (4) நகரங்கள் வணிகர்களின் வணிகச் செயல்களின் மையமாக உருவாகியது. பல்லவர் ஆட்சியில் வணிக வர்க்கத்தைச் சமணப் பள்ளிகள் ஆதரித்தன. சைவ, வைணவ ஆலய நிலங்கள் சமணர்களினால் பறிமுதல் செய்யப்பட்டன. சமணர்களின் ஆதரவைப் பெற்ற வணிக வர்க்கத்திற்கும், நிலக்கிழார்களுக்கும் நேரடி முரண்பாடு உருவாகின. சமணர்களிடம் இழந்த நிலங்களை மீட்பதன் மூலம் உற்பத்தியை மேலும் பெருக்கலாம் என்ற எண்ணம் சைவ நிலக்கிழார் அல்லது வேளாளருக்கு ஏற்பட்டது. எனவே நிலக்கிழார்களின் கீழ் பணி புரிந்த விவசாயக் கூலிகளை ஒன்று திரட்டி வணிகர்களுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்தார்கள்.

இந்த வர்க்கப் போராட்டம் சமணத்திற்கு எதிரான போராட்டமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டது. இந்த வரலாற்றுப் பிண்ணனியில் இரு முக்கிய விடயங்களை அவதானிக்கலாம்.

1. சோழப் பேரரசின் எழுச்சி
2. சைவ மதத்தின் எழுச்சி

இந்த இரு எழுச்சி நிகழ்வுகளும் வேறுபட்டனவாகத் தோற்றமளிப்பினும் ஒன்றில் ஒன்று தங்கியே உருவாகின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லவர் ஆட்சியின் போது முத்தரையர் என்ற சிற்றரசர்கள் நியமம் என்ற ஊரை தலைநகராகக் கொண்டு காவேரிப் படுக்கை ஊர்களை ஆட்சி செய்திருக்கின்றார்கள். வரலாற்றின் ஆரம்ப காலம் தொட்டு இலங்கையும், தமிழகமும் புவியியல் அடிப்படையில் கொண்டிருக்கும் நெருக்கம் பண்பாட்டு, அரசியல் தொடர்புக்குக் காரணமாக அமைந்தன. தமிழக ஆட்சியாளர்கள் இலங்கை மீது ஏற்படுத்திய சிறு படையெடுப்புக்களும், மேலாண்மையும் ஒரு தற்காலிக தாக்கத்தையே ஏற்படுத்தியிருந்தது. இலங்கை ஆட்சியாளர்களும் ஆட்சி உரிமை தொடர்பான நெருக்கடிகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் தமிழகம் சென்று உதவி கோருவது இலங்கை வரலாற்றில் பல காலகட்டங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. இத்தகைய வரலாற்றுப் போக்கானது குறிப்பாக கி.பி 6ம் நூற்றாண்டுக்குப் பின்னர் பாண்டிய, பல்லவ, சோழப் படையெடுப்புடன் மாறத் தொடங்கின. இந்த மாற்றமானது இலங்கை – தமிழக வரலாற்றின் முக்கிய திருப்பமாக அமைந்ததோடு, இலங்கை மீது ஏற்படுத்தப்பட்ட பண்பாட்டுத் தாக்கமானது ஒரு போதும் பின்னோக்கிய மாற்ற முடியாதவாறு உருவாகியது.

சோழர்கள் கி.பி 9ம் நூற்றாண்டில் நடத்திய திருப்புறம்பியப் போரில் பல்லவரையும், பாண்டியரையும் தோற்கடிக்க முன்னர் தமிழக ஆதிக்கப் போட்டில் பல்லவரும் பாண்டியருமே முன்னணியில் இருந்தனர். தமிழகத்தில் ஏற்படும் ஆதிக்க மாற்றம் இலங்கை ஆட்சியின் வெளியுறவுக் கொள்கையை நேரடியாகப் பாதித்திருக்கின்றது. பாண்டியரின் எழுச்சியினால் தனது ஆட்சிக்கு ஆபத்து உருவாகலாம் என உணர்ந்த அநுராதபுர மன்னன் மானவர்மன் பல்லவருடன் நட்பை வளர்த்துக் கொண்டான். ஆனால் சோழர்கள் திருப்புறம்பியப் போரில் பல்லவரை மிகக் கடுமையாக அடக்கியதை அறிந்த மானவர்மன் பாண்டியரோடு உறவை வளர்க்க விரும்பினான். இதன் மூலம் சோழரினால் ஏற்படக்கூடிய இலங்கை ஆக்கிரமிப்பை முழுப்பலத்துடன் எதிர்க்கக் விரும்பியதையே காரணமாகக் கூறப்படுகின்றது. சோழரின் எழுச்சியே பாண்டிய – சிங்கள உறவுக்கு அடிப்படை நோக்காக அமைந்தது. சோழருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டிய நாட்டைக் கைப்பற்ற அரசியல் காரணம் மட்டுமல்ல, பொருளாதாரக் காரணமும் இருந்ததில் வியப்பில்லை. பாண்டிய நாட்டின் தென் கோடிக் கடலில் விளைந்த முத்துக்கள் சோழரின் கவனத்தை ஏற்கனவே ஈர்த்திருந்தன. பாண்டிய நாட்டைக் கைப்பற்றுவதனால் கிடைக்கும் முத்துக்கள் மூலம் வருவாயைப் பெருக்கலாம் என சோழர்கள் எண்ணினார்கள். எனினும் சோழர்களினால் பல்லவர்களை அடக்கியது போன்று பாண்டியர்களை முற்றாக அடக்க முடியாமற் போனதற்கு பாண்டிய நாட்டின் இயற்கைக் காடுகள் காரணமாக அமைந்தன. பாண்டிய நாட்டின் இயற்கைக் காடுகள் சோழர்களின் எதிரிகளுக்கு பாசறைகளாகவும், மறைவிடங்களாகவும் மாறின. எனவே சோழர்களினால் முற்று முழுதாக பாண்டியர்களை அடக்க முடியாமல் போய்விட்டது. அரசியலைப் பொறுத்த மட்டில், சிங்கள – பாண்டிய உறவு காரணமாக பாண்டியர்கள் இலங்கையைப் பாண்டிய அரசின் ஒரு தளமாகப் பயன்படுத்துவது சாத்தியமாக இருந்தது. இது அகன்ற சோழப் பேரரசுக் கொள்கைக்கு ஒரு நிரந்தரத் தடையாக அமைந்துவிடக்கூடாது என்பதில் சோழர்கள் உறுதியாக இருந்தார்கள். எனவே சோழர்களது இலங்கைப் படையெடுப்பு சோழர்களது வெளியுறவுக் கொள்கையில் மிக முக்கிய இடத்தைப் பெற்றது.

விஜயாலய சோழன் தஞ்சையில் வலிமை குன்றிக் கொண்டிருந்த கோ.இளங்கோ என்ற புகழ் பெற்ற முத்தரையரை தோற்கடித்து கி.பி 850ல் தஞ்சாவூரில் தலைநகரை நிறுவினான். (5) பலமான சோழ இராச்சியம் உருவாக்கியதற்கு இந்த வெற்றி அடிப்படையாக அமைந்தது. பல்லவ மன்னனான அபராஜித வர்மனுக்கும், பாண்டிய மன்னனான இரண்டாம் வரகுணனுக்குமிடையே நடந்த கடும் போரில் தனக்கு ஆதரவாகப் போரில் பங்கேற்ற விஜயாலய சோழனின் வழியில் வந்த நான்காவது தலைமுறையைச் சேர்ந்த சுந்தர சோழ பராந்தகனுக்கு மூன்று புதல்வர்கள். இவர்களில் மூத்த மகன் ஆதித்த கரிகாலன் சூழ்ச்சியில் கொல்லப்பட்டான். அடுத்தவர் குந்தவை என்ற இளவரசி. இவர்களில் இளையவரே இராஜராஜன் என்ற விருதுப் பெயருடன் தமிழக வரலாற்றில் வீறுகொண்டெழுந்தவர். இவரின் இயற்பெயர் அருண்மொழி வர்மன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி 985ல் ஆட்சிக்கு வந்த இராசராச சோழனும், அவரைத் தொடர்ந்து கி.பி 1012ல் ஆட்சிக்கு வந்த மகன் இராசேந்திர சோழனும் பல படையெடுப்புக்களை நடத்தி சோழ இராச்சியத்தை விரிவுபடுத்தினார்கள். சோழப் பேரரசின் பெயரையும், பெருமையையும் நிலை நிறுத்தியவர் முதலாம் இராசராசன். சிறந்த வீரன் (6) . 'தமிழக வரலாற்றில் சோழப் பேரரசு பலம் பெற்ற அரசாக நான்கு நூற்றாண்டுகள் வரை நீடித்தது. இந்திய நாட்டின் பெரும் பகுதியை மட்டுமல்ல, கடல் கடந்த நாடுகளையும் கைப்பற்றி ஏகாதிபத்திய நாடாகவும் இராசராசன் பரம்பரையினர் சில காலம் ஆட்சி செய்தனர். இந்திய வரலாற்றில் இத்தகைய பெருமை பெற்றவர் சோழர் மட்டுமேயாவார். (7) சோழ மன்னர்களில் முதன் முதலில் இராசராசன், இராசேந்திரன் ஆகியோர் கடல் கடந்த நாடுகளைக் கைப்பற்றி, ஆட்சிப் பரப்பை விரிவுபடுத்தும் கொள்கை உடையோராக இருந்தனர். இந்தியாவின் கீழைக்கடல் பகுதிகளையும் வெற்றி பெற்று இந்தியாவின் மிகப் புகழ் பெற்ற பேரரசுகளுள் சோழப் பேரரசும் ஒன்று என்று கருதும்படி செய்தனர்.(8) இராசராசனின் புகழுக்கு அவனுடைய வீரச்செயலர்கள் மட்டு காரணமல்ல. அவர் வளர்த்த கலைகளும், நிர்வாகத்திறனும் காரணங்களாகும் (9) இராஜராஜன் தனது 16வது ஆட்சிக் காலத்தில் தனது ஆட்சிக்கு உட்பட்ட பேரரசு முழுவதையும் அளந்து கணிப்பிட்டார். நிலங்களை அளப்பதற்கு நிலஅளவை நாயகமாக மாராயன் என்பனை நியமித்தார். இலங்கையில் தனது இராச்சியத்தை அளக்க நில அளவையாளர்களை அனுப்பி வைத்தார். உலக வரலாற்றில் இத்தகைய பெரும்பணியை நிறைவேற்றிய மன்னர்கள் எவரும் இல்லை. இந்த அசுரப் பணியை துல்லியமாகச் செய்து முடித்ததோடு, ஏடுகளில் பதிவு செய்தும் வைத்தார். இலங்கையின் சோழராட்சிப் பகுதிகள் அளந்து கணிப்பிடப்பட்டது. இதனால் இராஜராஜ சோழனுக்கு குருவன் உலகளந்தான் என்ற விருதுப் பெயர் ஏற்பட்டது (10) கடல் கடந்த அகன்ற சோழராச்சியத்தை உருவாக்க காரணமாக இருந்த சோழப் படைவீரர்கள் பதினொரு இலட்சமாகும். இராஜராஜனின் சோழப்படையானது 31 படைப்பிரிவுகளைக் கொண்டிருந்தது. இலங்கையில் மட்டும் 90 ஆயிரம் வேளைக்காறப் படையினர் நிரந்தரமாக நிறுத்தப்பட்டனர். முதலாம் விஜயபாகுவினால் சோழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு இலங்கையில் இருந்து விலக்கப்பட்ட பின்னரும் கூட திருகோணமலையில், கொட்டியாரத்திலும் வேளைக்காறப் படைப்பிரிவு தொடர்ந்து நிலை கொண்டு இருந்தன.

இராஜராஜனால் உருவாக்கப்பட்ட படைப்பலத்தை அவன் மகன் இராஜேந்திரன் மேலும் வீவுபடுத்தினான். இராஜரஜன் ஆட்சியேற்றுக் கொள்வதோடு சோழ வம்சத்தின் சிறப்பும் புகழும் மிக்க ஒரு நூற்றாண்டுக்குள் நாம் பிரவேசிக்கின்றோம் என்ற சோழரின் எழுச்சி பற்றி நீலகண்ட சாஸ்த்திரியின் வர்ணனை பொருத்தமானதே. சோழரின் உள்நாட்டு, வெளிநாட்டுப் படையெடுப்புக்கள் பல காரணங்களுக்காக நிகழ்ந்ததாக ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். ஆனால் அமெரிக்க வரலாற்றுத்தறை ஆய்வாளர் ஸ்பென்சர் தமிழக படையெடுப்புக்களை இரு வகைகளாக காண்கின்றார்

1. ஆட்சியை விரிவாக்கம் செய்வதற்காக நடத்திய போர்
2. தமிழகத்தில் தமது ஆட்சியை பலப்படுத்துவதற்காக செல்வங்களை குவிக்கும் நோக்கில் ஏற்படுத்தப்பட்ட போர்

சோழர்கள் ஆட்சியை விரிவாக்கம் செய்வதற்காக படையெடுத்தார்கள் என்பதை விடத் தமிழக ஆட்சியைப் பலப்படுத்தவே படையெடுப்பு நடத்தினார்கள். அரபு வணிகர்களின் வணிகப் படகுகள் இந்து சமுத்திரத்தில் அதிகரிக்கத் தொடங்கியிருந்தது. மேலும் அரேபியர்களின் தென், தென்கிழக்காசிய வணிக ஆதிக்கத்தை முறியடிக்க வேண்டிய பொருளாதாரத் தேவை சோழருக்கு ஏற்பட்டது. இந்தியாவின் தென்கோடி நாடுகளில் அரேபியர்கள் நடத்திய வணிகத்தை முறியடிப்பதன் மூலம் தமிழகத்திற்கு செல்வங்களைக் கொண்டு வருவது எளிதாகக் கருதப்பட்டிருக்கலாம்.

அரேபியர்களின் இந்திய நாட்டின் தென்புறக் கரையோரப் பகுதிகள், மற்றும் தென் கிழக்காசிய நாடுகளின் வணிகத்தை முறியடிக்கவே இப்பகுதி நாடுகளை இராசராசன், இராசேந்திரன் முறியடிக்கவே கைப்பற்றினார் என வரலாற்றாசிரியர் ரோமிலா தாப்பர் கூறுவார். (11) எனவே சோழர்களுக்குத் தென் இந்திய எல்லைக்கு அப்பால் திருகோணமலை ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகத் துறைமுக நகராக பயன்பட்டத்தில் வியப்பில்லை. அத்துடன் திருகோணமலையின் இயற்கைத் துறைமுகமும், வளமிக்கப் பின்னணி நிலமும் சோழ வணிகர்களுக்குப் பெரும் உதவியாக இருந்தது. சோழருடைய கடலாதிக்கக் கொள்கையில் திருகோணமலையின் கேந்திர முக்கியத்துவம் சிறப்புக்க கவனத்தை ஈர்த்திருந்தது. (12)

சோழர் காலத்திற்கு முன்பாகவே திருகோணமலைத் துறைமுகம் முக்கியத்துவம் பெற்றிருந்தது. இதன் காரணமாகவே திருகோணமலைத் துறைமுகத்திற்கு ஊடாகவே விஜயனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த பாண்டு வாசுதேவ என்பவனின் மனைவியாகிய பட்டகச்சானா இலங்கை வந்ததாக மகாவம்சம் கூறுகின்றது.(13) எனினும் சோழர்களே தென், தென்கிழக்காசியப் பிராந்தியத்தில் திருகோணமலைத் துறைமுகத்தின் கேந்திர முக்கியத்துவத்தை நன்கு அறிந்தார்கள் எனக் கூறலாம். சோழரின் கடாரம், ஸ்ரீ விஜயம் நோக்கிய படையெடுப்புக்களுக்குத் திருகோணமலை முதற்கட்டத்தளமாக விளங்கியது. எனவே தான், இந்திய உப கண்டத்திற்கு வெளியே தமது ஆட்சி விரிவாக்கத்தின் முதற் கட்டமாகத் திருகோணமலையைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர விரும்பினார்கள்.

## சோழரின் இலங்கைப் படையெடுப்பு

சோழரின் பேரரசன் இராஜராஜனால் (கி.பி.985 – கி.பி 1016) அவனது ஆட்சி ஆரம்பித்து எட்டாம் ஆண்டில் தொடக்கி வைக்கப்பட்ட இலங்கைப் படையெடுப்பு அவனது மகன் முதலாம் இராஜேந்திரனால் கி.பி 1017ல் நிறைவு செய்து வைக்கப்பட்டது. முதலாம் இராஜேந்திரனின் முப்பத்திரண்டு கால ஆட்சியில் (கி.பி 1012 – கி.பி 1044) ஆரம்ப ஐந்து வருடகாலப் பகுதியில் இலங்கைப் படையெடுப்பு நிறைவுக்கு வந்தது. சோழர்கள் இலங்கை மீது மேற்கொண்ட போருக்கான நோக்கங்களை அறிய சோழர்களின் மீது மேற்கொண்ட போருக்கான நோக்கங்களை அறிய அயல்நாட்டுப் படையெடுப்பைத் தூண்டிய காரணங்களை விரிவாக அறிய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜராஜனும், அவனது மகன் இராஜேந்திரனும் மேற்கொண்ட இலங்கைச் சோழப் படையெடுப்பு முதலில் திருகோணமலையை இலக்கு வைத்தே நடத்தப்பட்டிருக்கிறது. சோழர் காலத்திற்குச் சற்று முன்பாகத் தென், தென் கிழக்காசியா நாடுகளின் அரசியலிலும், வணிகத்திலும் நிகழ்ந்த மாற்றங்களே சோழர்களின் அயலுறவுக் கொள்கையில் பல திருப்பங்களை உருவாக்கியது 'ஈழத்தினைத் தனது ஆணைக்குக் கீழ் மேலாதிக்கத்தினை உபகண்டத்தில் தான் கொண்டிருந்த மேலாதிக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் நடவடிக்கையாக மட்டும் அமையாது கடலாதிக்கம் கொண்ட அரசாகச் சோழ அரசை மாற்றும் அவரதுதிட்டத்தின் அங்கமே எனலாம். என இலங்பைக் படையெடுப்பு குறித்து நீலகண்ட சாஸ்திரியின் குறிப்பு அவதானிக்கத்தக்கது. சோழரின் கடலாதிக்கத் தேவைக்கு தென் இந்திய கடல் எல்லையில் இருந்த திருகோணமலைத் துறைமுகம் ஒரு தவிர்க்க முடியாத தேவையாக இருந்திருக்கின்றது.

சோழருடைய படையெடுப்பு நிகழ்ந்த கால இலங்கையின் அரசியற் சூழ்நிலை பலமற்று இருந்தது என சூளவம்சம் கூறுகின்றது. சோழருடைய படையெடுப்பு நிகழ்ந்த கால கட்ட இலங்கை அரசியற் பின்னணி மிகவும் குழப்பம் நிகழ்ந்ததாக காணப்பட்டிருக்கின்றது. வலிமையற்ற மன்னன் மகிந்தன் நிர்வாகக் கட்டுப்பாட்டை இழந்ததோடு, மக்களின் ஆதரவையும் இழந்திருந்தான். பெரும்பாலான மக்கள் வரி செலுத்த மறுத்ததோடு குழப்பத்தை உருவாக்கினார்கள். அரண்மனை ஊழியர்கள் ஊதியம் கிடைக்காமல் அரசனுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர். தங்கள் கையில் இருந்த அம்பு வில்லுடன் அரசனுக்கு எதிராக வன்முறையில் இறங்கினார்கள் என சூளவம்சம் கூறுகின்றது.

5ம் நூற்றாண்டில் நிகழ்ந்த துருக்கி எழுச்சி காரணமாக மேற்கு ஆசியாவிற்கும் இந்தியா உள்ளிட்ட தென் ஆசிய நாடுகளுக்கிடையிலான தரை வழித் தொடர்பு துண்டிக்கப்பட வேண்டியேற்பட்டது. இதனால் வணிகம் பாதிக்கப்படவே தரைவழிப் பாதைக்கு மாற்றீடாக கடல்வழிப் பாதையின் பயன்பாடு மேலும் அதிகளவு அதிகரிக்க வேண்டிய தேவையை உருவாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கு கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலங்களில் இருந்தே கடல் வழி வணிகத் தொடர்பு இருந்த போதிலும், மேற்காசிய தரைவழித் தொடர்புத் துண்டிப்பினால் தென்னாசிய வணிகர்கள் கடல் வழிப் போக்குவரத்தில் மட்டும் அதிகளவு தங்கியிருக்க வேண்டியிருந்தது.

இதனால் திருகோணமலைத் துறைமுகம் மேற்கு ஆசிய, தென் கிழக்காசிய வணிகக் கப்பல்கள் தரித்து நின்று வணிகப் பரிமாற்றங்களைச் செய்யக் களமாக மாறியது. சுமார் ஏழாம், எட்டாம் நூற்றாண்டில் வலிமை பெற்று வந்த சிறி விஜயப் பேரரசின் வணிக வளர்ச்சி சோழரின் வணிக ஆதிக்கத்திற்கு தடையாக இருந்தது. குறிப்பாக இந்தியாவிற்கும், சீனாவிற்கும் கடல் வழி மத்தியில் வணிக ஆதிக்கம் செலுத்தி வந்த சிறி விஜயம் (மலேசியா) சோழரின் பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக இருந்தது. சோழர்கள் சிறி விஜயப் பேரரசின் மீது படையெடுத்து தமது ஆதிக்கத்தினை உருவாக்குவதற்குப் பதிலாக கரையோர நகரங்களைத் தாக்கித்திறை பெற்றதோடு நிறுத்திக் கொண்டார்கள் என இந்திய வரலாற்று ஆய்வாளர் நீலகண்ட சாஸ்திரி கூறுகின்றார். அரேபியர்களின் இந்திய நாட்டின் தென்புறக் கரையோரப் பகுதிகள், மற்றும் தென் கிழக்காசிய நாடுகளின் வணிக ஆதிக்கத்தை முறியடிக்கவே இப்பகுதி நாடுகளை இராஜராஜன், இராஜேந்திரன் கைப்பறினர் என வரலாற்றாசிரியர் ரோமிலா தாப்பர் கூறுவர். (14) மேற்காசிய, தென் கிழக்காசிய வணிகர்கள் இடையில் சந்தித்துக் கொள்ளும் இடமாக இலங்கை விளங்கியதால் இலங்கை மீதான படையெடுப்பு சோழரின் அரசியற் திட்டத்தில் தவரிக்க முடியாமல் முதலிடம் பெற்றது. இலங்கையைக் குறிப்பாகத் திருகோணமலைத் துறைமுகத்தை தமது ஆட்சியின் கீழ் சோழர் கொண்டு வரவேண்டிய தேவையை சோழரின் அயலுறவுக் கொள்கையே தீர்மானித்தது. இராஜராஜ சோழன் வங்காள விரிகுடாவைச் சோழப் பேரரசின் ஒரு வாவியாக மாற்றினான் என வரலாற்று விமர்சகர்கள் கூறுமளவிற்கு சோழரின் கடல் ஆதிக்கம் வலிமை பெற்றிருந்தது. இராஜராஜனின் மெய்க்கீர்த்தியில் அவரது படையெடுப்புக்களின் சாதனை விபரிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்களுர்ச் சாலைக் கலமறுத் தருளி
வேங்கை நாடுங் கங்க பாடியுந்
தடிகை பாடியும் நுளம்ப பாடியுங்
குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும்
முரட்டொழிற் சிங்கள ரீழமண் டலமும்
இரட்ட பாடி யேழரை யிலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமுந்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டதன்
னெழில்வள ரூழியு ளெல்லா யாண்டே செழியரைத்
தேசுகொள் கோராச கேசரி வர்மரான
உடையார்ஸ்ரீ ராசராச தேவர்க்கு யாண்டு'

(சதாசிவ பண்டாரத்தார், T.V பிற்காலச் சோழர் சரித்திரம், 1954, சென்னை, பக் 266)

திருகோணமலையைச் சோழர்கள் வெற்றி கொள்வதற்கு சாதகமான பல வாய்ப்புக்கள் முன்கூட்டியே ஏற்பட்டிருந்தது. ஏற்னவே பல்லவராட்சியிலும், அதற்கு முன்பாகவும் தென் இந்தியச் செல்வாக்கு மிக அதிகளவு திருகோணமலையில் காணப்பட்டது. இதனால் பெருமளவிலான தென் இந்திய குடியேற்றங்கள் உருவாகியிருந்தன. இக் குடியேற்றத்தில் கலைஞர்கள், படைவீரர்கள், வணிகர்கள், பிராமணர்கள் என பல தரப்பட்ட தென்னிந்திய சமூகப் பிரிவினர் இருந்தார்கள். நீண்ட தூர வணிகத்தில் ஈடுபட்ட வணிகர்கள் தங்கள் பாதுகாப்பிற்காக தனிப்படை வைத்திருந்தனர். இந்தப் படையை வேளைக்காறப் படை என்றே அழைக்கப்பட்டது. வளஞ்சியர் என்ற வணிகர் படை இலங்கையை ஆட்சி செய்த சோழ அரசுக்கு ஆதரவை வழங்கியிருக்கின்றார்கள். ஏற்கனவே இந்து மத வளர்ச்சியுடன் தமது ஆட்சியை விரிவாக்கம் செய்து கொண்ட சோழர், தென்னிந்தியப் பின்னணியைக் கொண்ட திருகோணமலை இந்து தமிழ்ச் சமூகத்துடன் இணைந்து கொள்வதில் பெரிய தடைகள் இருந்திருக்க வாய்ப்பில்லை. ஏற்கனவே கி.பி 3ம் நூற்றாண்டளவில் மகாசேனனின் ஆட்சியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது திருக்கோணேஸ்வரம் தகர்க்கப்பட்ட செய்தி அறிந்த திருகோணமலை இந்து தமிழச் சமூகம் சோழரின் ஆட்சியை நிராகரிக்கக் காரணம் இருந்திருக்காது.

மேற்கூறப்பட்ட காரணங்களைவிட, திருகோணமலையில் ஒரு பலமான அரசு காணப்படவில்லை என்பது மிக முக்கியமானதாகும். எனவே திருகோணமலையைச் சோழர் தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்த படை நடவடிக்கை இலகுவில் நடந்தேறியது. எனவே சோழர்கள் தென் கிழக்காசிய வணிக எழுச்சியை முறியடிக்க எடுத்த ஆரம்ப நடவடிக்கைகளில் ஒன்றாக திருகோணமலைப் படையெடுப்பையுங் கருதலாம்.

சோழரின் இலங்கைப் படையெடுப்பு பொருளாதாரக் காரணங்களினால் உருவானது என்பதற்கு பல காரணங்கள் உள்ளன. சோழர் ஆட்சியில் தமிழகத்தில் நீர்ப்பாசனம் உன்னத நிலை பெற்றது. ஆட்சிக்கு வந்த அரசர்கள் பல நீர்ப்பாசனப் பணிகளில் ஈடுபட்டு வேளாண்மைக்கும் வேளாண்மை சார்ந்த சிறு கைத்தொழில்களுக்கும் ஆதரவு தந்தனர். குறிப்பாக காவிரிக்கு அணை கட்டுவதற்காகக் கரிகாலச் சோழன் இலங்கையைப் போரில் தோற்கடித்து அங்கிருந்து 12000 பேரை அடிமைகளாக கொண்டு வந்தான் என தென்னிந்தியக் கல்வெட்டுக் கூறுகின்றது.(15) இதனால் தஞ்சை மாவட்டத்திலுள்ள பல நீர்ப்பாசனத் திட்டம் பயனடைந்தது. திருச்சி அருகே உள்ள கீர்த்திமான் ஆறு, குடமுருட்டி ஆறு, உய்ய கொண்டான் ஆறு, வீரசோழன் ஆறு போன்ற பல ஆறுகள் வழி மறிக்கப்பட்டு அணை கட்டுவதற்கு இலங்கையிலிருந்து கொண்டு செல்லப்பட்ட அடிமைத் தொழிலாளர்கள் பயன்பட்டிருக்கின்றார்கள். ஆகவே சோழர்களின் இலங்கைப் படையெடுப்பு ஆட்சியை விரிவாக்கம் செய்வதற்காக மட்டுமல்ல, பொருளியல் மேம்பாட்டிற்காகவும் ஏற்படுத்தப்பட்டது என்ற காரணம் முக்கியம் பெறுகின்றது.

சோழர்கள் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் தலைநகராகப் பொலநறுவையையும், வணிக நகராகத் திருகோணமலையையும் கொண்டிருந்தார்கள். எனினும் திருகோணமலையில் தான் சோழர்கள் அதிகம் அக்கறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தார்கள். இதை உறுதிப்படுத்திய பல கல்வெட்டுக்கள் சான்றாக உள்ளன. இந்திய கரையோரத்திற்கு மிக குறுகிய இடைவெளித் தொலைவில் உள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில் சோழருடைய ஆதிக்கம் மிகக் குறைவாக இருந்ததென்றே கூறவேண்டும். இது தவிர யாழ்ப்பாண மாவட்டத்தில் சோழராட்சி ஏற்படுத்திய ஆதிக்கத்தின் அளவினை அறிந்து கொள்ள போதிய தெளிவான ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. இதுவரை யாழ்ப்பாண மாவட்டத்தில் இரு சோழர்காலச் சான்றுகளே கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. திருகோணமலை மாவட்டத்தில் ஏற்பட்ட சோழர் ஆட்சியின் பாதிப்பின் அளவைக் கவனிக்கும் போது யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்பட்டிருந்த சோழர் ஆதிக்கத்தினை நாம் பெரிதுபடுத்தவோ அல்லது குறிப்பிட்டுச் சொல்லவோ முடியாது. (16)

இலங்கையின் பெரும் பகுதியைச் சோழர் தம் ஆட்சியின் கீழ் கொண்டு வந்த போதிலும் திருகோணமலையில் தான் அதிக ஆதிக்கத்தினைக் கொண்டிருந்தார்கள் என அறியும் போது திருகோணமலைக்குப் பதிலாக ஏன் பொலநறுவையைத் தலைநகராக்கிக் கொள்ள வேண்டும் என்ற கேள்வி எழுகின்றது. இலங்கையின் தென் பிராந்தியத்தில் இருந்து உருவாகும் சிங்கள அரசர்களின் எதிர்ப்புக்களை இலகுவில் எதிர்கொள்ள பொலநறுவையைச் சோழர்கள் தலைநகராகத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும். ஏனெனில், சோழர்கள் இலங்கை முழுவதிலும் தமது ஆட்சியை ஏற்படுத்தவே விரும்பினார்கள் என்ற நீலகண்ட சாஸ்த்திரியின் கருத்தைக் கவனத்தில் எடுக்கும் போது, சோழர்கள் தென் இலங்கை ஆட்சியாளரின் எதிர்ப்பை இலகுவில் சமாளிக்க பொலநறுவையை தலைநகராக தேர்ந்தெடுத்த வேண்டியிருந்தது. சோழர்காலத்திலும், சோழர் காலத்திற்கு முன்பாகவும் நிலவிய சிங்கள பாண்டிய உறவு பொலநறுவையைத் தலைநகராக்கும் சோழரின் கொள்கையில் அதிக அழுத்தத்தை கொடுத்திருக்க வேண்டும். தமிழகத்தில் சோழர் தமது ஆட்சியைப் பலமாக விரிவாக்கம் செய்திருந்த போதிலும், பாண்டியர்களை முற்றாக அடக்கவில்லை என்பது கவனிக்கப்படவேண்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழராட்சியில் பொலநறுவை தலைநகராக இருந்தபோதிலும், திருகோணமலைப் பகுதியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இங்கு சோழச் செல்வாக்கு அதிகம் காணப்பட்டது எனக் கொள்ள முடியாது. பாதுகாப்பு நோக்கம் ஒன்றினையே கருத்தில் கொண்டு சோழர் பொலநறுவையைச் தமது தலைநகராக்கிக் கொண்ட போதிலும் தமது உண்மையான ஆதிக்கத்தினை திருகோணமலையிலேயே ஏற்படுத்தியிருந்தார்கள் என அறியமுடிகின்றது. சோழரின் நிர்வாக மையமாக பொலநறுவை இருந்ததற்கான சான்றுகள் இதுவரை கண்டறியப்படவில்லை.

இலங்கையில் சோழராட்சி தொடர்பான தொல்பொருள் தடங்கள் பொலநறுவை, பதவியா, மாந்தோட்டம், திருகோணமலை ஆகிய நான்கு இடங்களில் அதிகளவில் காணப்படுகின்றது. இராஜராஜ சோழனின் மகன் இராஜேந்திர சோழன் தனது 25வது வயதில் இலங்கையில் தளபதியாக இருந்தான். சோழர்கள் திருகோணமலையில் மட்டுமல்ல, பொலநறுவையிலும் இரு சிவன் கோயில்களைக் கட்டினார்கள். இராஜராஜனின் தாயின் நினைவாக வானவன் மகாதேவி ஈஸ்வரம் என்ற ஒரு சிவாலயம் கட்டப்பட்டது. இந்த ஆலயமே இன்றும் பொலநறுவைச் சிவாலயம் என அழைக்கப்படுகின்றது. எனினும், பல்வேறுபட்ட அவதானிப்புக்களைக் கவனத்திலெடுக்கும் பட்சத்தில் திருகோணமலையில் தான் சோழரின் செயற்பாடுகள் அதிகளவு இருந்துள்ளது. பொலநறுவையைச் சோழர் தலைநகராகக் கொண்டிருந்த போதிலும் எண்ணிக்கையில் அதிகமான கல்வெட்டுக்கள் திருகோணமலையிலேயே கிடைத்துள்ளது. (17)

சோழப் பிரதிநிதி சோழ இலங்கேஸ்வரன் குறித்த தகவல்களைத் தரும் கல்வெட்டுக்கள் திருகோணமலையில் மட்டுமே காணப்பட்டிருப்பதால், சோழ இலங்கேஸ்வரனின் தலைமைத் தளமாக திருகோணமலையே இருந்திருக்கின்றது. இராஜாதிராஜனின் இருபத்தொன்பதாம் ஆண்டுக்குரிய மணிமங்கலக் கல்வெட்டு உரோகனைப் பகுதி மன்னர்களோடு நடத்திய போர்கள் குறித்து கூறுகின்றது. (18)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொரு தனித் தண்டற் பொருகட லிங்கையர்
கோமான் விக்கிரம பாகுவின் மகுடமும்
முன்றனக் குடைந்த தென்றமிழ் மண்டல
முழுவதும் மிழந் தெழுகட லீழம்
புக்க விலங்கேச னாகிய விக்கிரம
பாண்டியன் பருமணி மகுடடும் காண்டகு
தன்ன வாக்கித் தன்னக் குச்சியிலும்
ஆகாலி யீழஞ் சீரிதென் றெண்ணி
உளங்கொளந் நாடுதன்னுற வொடும் புகுந்து
விளங்குமுடி கவித்த வீரசலா மேகன்
போர்க்களத் தஞ்சித் தன்கார்க் களிறிழிந்து
கவ்வையற் றோடக் காதலி யொடுந்தன்
றவ்வையையப் பிடித்துத் தாயை மூக்கரிய
ஆங்கவ மானம் நீங்குதற் காக
மீட்டும் வந்து வாட்டொழில் புரிந்து
வெங்களத் துலந்தவச் சிங்களத் தரசன்
பொன்னணி முடியுங் கன்னரன் வழிவந்
துரைகொ ளீழந் தரசனாகியசீ
வல்லவ மதனராசன் மெல்லொளித்
தடமணி முடியுங் கொண்டு...

## திருகோணமலையில் சோழர்கள்

சோழர் பொலநறுவையைத் தலைநகராக் கொண்டு இலங்கையின் பெரும்பாலான பகுதியை ஆட்சி செய்து வந்த போதிலும் அவர்களுடைய செயற்பாடுகள் திருகோணமலை, கந்தளாய், பதவியா ஆகிய மூன்று நகரங்களை இணைக்கும் முக்கோணப் பகுதியிலே அதிகளவில் காணப்பட்டிருக்கின்றது. சோழர்காலத்திற்குரிய முக்கிய தகவல்களைத் தரும் பல கல்வெட்டுக்கள் இப்பகுதியிலிருந்தே கிடைத்திருக்கின்றன. சோழருடைய நிர்வாக முறை தற்கால நிர்வாகத்தை ஒத்திருந்தன. சோழராட்சியில் நிலவிய நிர்வாக முறைகளைத் திருகோணமலை மாவட்டத்தில் கிடைத்த கந்தளாயச் சிவன் கோயிற் கல்வெட்டு, விஸ்வநாதர் சிவன் கோயிற் கல்வெட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய குளம் கல்வெட்டு, மாங்கனாய் கல்வெட்டு, பளமோட்டைக் கல்வெட்டு, கஜபாகுவின் கந்தளாய்க் கல்வெட்டு, நிசங்கமல்லனின் கல்வெட்டு திருகோணமலை வடமொழிக் கல்வெட்டு, கோணேஸ்வர ஆலயப் பகுதியில் கிடைத்த இராஜராஜ சோழனுக்குரிய கல்வெட்டு, பத்திரகாளி அம்மன் கோயிற் கல்வெட்டு, நிலாவெளி பிள்ளையார் கோயிற் கல்வெட்டு, வில்லூன்றிக் கந்தசாமி கோயிற் கல்வெட்டு, கிளிவெட்டிக் கல்வெட்டு, தம்பலகாமம் ஐயனார் திடற்க் கல்வெட்டு, மாரியம்மன் கோயிற் கல்வெட்டு என்பன மூலம் அறியக் கிடக்கின்றது. மேற்கூறப்பட்ட கல்வெட்டுக்கள் சோழர் காலத்திற்கும் அதற்குப் பிற்பட்ட காலத்திற்கும் உரியனவாகும். எனினும் திருகோணமலையும், கந்தளாயும் சோழரின் அதிக செல்வாக்கிற்கு உட்பட்ட பகுதிகளாகும். வேறு மாவட்டங்களை விடத் திருகோணமலை மாவட்டம் சோழரின் அதிகளவு செல்வாக்கிற்கு உட்பட்டது என்ற கருத்தானது வெறும் சாசன எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டவையல்ல. மாறாக சாசன செய்திகளின் முக்கியத்துவத்திலிருந்து பெறப்பட்டதாகும் மேலும் ஏனைய மாவட்டங்களில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டுக்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டு சோழராட்சியின் ஆதிக்கத்தை மதிப்பீடு செய்வது பொருத்தமற்றது. கடந்த நூற்றாண்டுகளில் பல தொல்பொருள் ஆவணங்கள் அழிந்திருக்கலாம் அல்லது காணாமற் போயிருக்கலாம். எப்படியிருந்த போதிலும் திருகோணமலை மாவட்டத்தில் கிடைத்த கல்வெட்டுக்கள் ஏனைய இடங்களைவிட திருகோணமலையில் சோழராட்சியின் செல்வாக்கு அதிகளவு இருந்ததைச் சுட்டிக் காட்டுகின்றது.(19)

மாந்தையான இராஜராஜபுரமும், திருகோணமலையும் சோழரது இலங்கைக்கான இராணுவ மையங்களாகத் தெரிவு செய்யப்பட்டு இராணுவ கடற்படை நடவடிக்கைகளின் ஒழுங்கமைக்கப்பட்ட மையங்களாக்கப்பட்டிருந்தன. பொலநறுவையிலிருந்து இம் மையங்கள் நோக்கிய இரு பெருந்தெருக்கள் அமைக்கப்பட்டிருந்தன. மன்னார்த் தளத்தை நோக்கிச் சென்ற பெருந்தெரு இராஜராஜப் பெருந்தெரு என அழைக்கப்பட்டமையை இக் கல்வெட்டுக்கள் எடுத்துக் காட்டுகின்றன. திருகோணமலையை நோக்கிச் சென்ற பெருந்தெருவின் பெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் வரலாற்று வெளிச்சத்திற்கு வராதநிலை காணப்படுகின்ற போதும், முதலாம் இராசேந்திரனுடைய விருதுப் பெயரால் அந்தப் பெருந்தெரு அழைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவானதாகும். (20)

**கந்தளாய்க் கல்வெட்டு**

சோழ இலங்கேஸ்வர தேவன் சோழப் பிரதிநிதியாக இலங்கையை ஆட்சி செய்ததாக சோழ இலங்கேஸ்வரன் காலத்து கந்தளாய், மானான்கேணிக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. எனினும் இந்த இரு கல்வெட்டுக்களிலும் இருந்து யாருடைய பிரதிநிதியாக சோழ இலங்கேஸ்வர தேவன் ஆட்சி செய்தான் என்ற தகவலைத் தெளிவாகப் பெற முடியவில்லை. இதில் கந்தளாய்க் கல்வெட்டானது சோழர்கால ஆட்சி குறித்த பல அடிப்படைத் தகவல்களைத் தருவதால் மிக முக்கியமாக கருதப்படுகின்றது. இதுவரை சோழர்கள் தொடர்பாகக் கிடைத்த கல்வெட்டுக்களில் கந்தளாய்க் கல்வெட்டே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. (21)

கந்தளாய் கல்வெட்டானது ஒரு கற்பலகைச் சாசனமாகும். இரு துண்டுகளாக உடைந்து கந்தளாய் போராற்று குடியிருப்பிலுள்ள சிவன் கோயிலில் காணப்படுகிறது. கணிசமான பகுதி சேதமடைந்து விட்டதால் இக் கல்வெட்டின் முழுப் பயன்பாட்டையும் பெற முடியாதுள்ளது. சிதைவடைந்த எழுத்துக்கள் இட்டு நிரப்பப்பட்ட கல்வெட்டின் முதற்பாகம் (22)

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோ ஸ்ரீ சங்கவன்மரான
2. உடையார் ஸ்ரீ சோழ இலங்கேஸ்வர தேவற்கு
3. யாண்டு பத்தாவது ராஜேந்திர சோழ
4. வளநாட்டு ராஜ விச்சாதிர வளநாட்டு
5. பிர்மதேசம் ஸ்ரீ ராஜராஜ சதுர்வேதி
6. மங்கலத்துப் பெருங்குறி பெருமக்க
7. ளாம் இய்யாட்டை கும்ப நாயற்று பூர்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பட்சத்து துவாசியும் செவ்வாய்க் கிழ
9. மையும் பெற்ற ஆயிலியத்து நாளன்றிரவு
10. நம்மூர் தண்டுகின்ற முத்தங்கை கோயில்
11. மாணி

இலங்கையிலே சோழராட்சிக் காலத்து வரலாறு பற்றிய சில முக்கியமான தகவல்களைக் கந்தளாய்க் கல்வெட்டு தருகின்றது. இதனால் இக் கல்வெட்டு தரும் செய்திகளை விபரமாக அறிந்து கொள்ளவேண்டும். இக் கல்வெட்டில் பயன்படுத்தப்பட்ட எழுத்துக்கள் பதினொராம் நூற்றாண்டுக்குரிய கிரந்த எழுத்துக்களும், தமிழ் எழுத்துகளுமாகும். இந்த எழுத்துக்கள் தமிழகத்தில் கண்டு பிடிக்கப்பட்ட பிற சோழர்காலச் சாசனங்களை ஒத்திருக்கின்றன. இக் கல்வெட்டின் திகதி கோ ஸ்ரீ சங்கவர்மரான உடையார் சோழ இலங்கேஸ்வர தேவருடைய பத்தாவது ஆட்சியாண்டு எனப் பொறிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இந்த மன்னன் எப்போது முடி சூடிக்கொண்டான் என்ற விபரம் கிடைக்காத காரணத்தால் இக் கல்வெட்டிற்கான சரியான காலத்தைக் கணிப்பிட முடியாமல் உள்ளது. இந்தக் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டதன் நோக்கம் என்ன என்பதை அறிந்து கொள்வது சிரமமாக உள்ளது. மக்கிய தகவலைத் வெளிப்படுத்தும் இக் கல்வெட்டின் கீழ்ப் பகுதி சிதைவடைந்துவிட்டது. இந்தக் கல்வெட்டு கந்தளாயிலுள்ள விக்கிரம சோழ வாய்க்கால் திருத்துவது தொடர்பாக நடந்த மகாசபையின் கூட்டத் தீர்மானத்தைப் பதிவு செய்யவே பொறிக்கப்பட்டிருக்க வேண்டும். இக் கல்வெட்டு இராஜராஜ சதுர்வேதி மற்கலத்து (கந்தளாய்) பெருங்குறி மக்கள், மகாசபையின் பொது நிதியிலிருந்து பணம் எடுத்து விக்கிரம சோழ வாய்க்கால், மற்றும் கண்ணாறுகள்(மதகு) ஆகியனவற்றைத் திருத்தம் செய்ய நடைபெற்ற கூட்டத்தின் தீர்மானத்தை வெளிப்படுத்துகின்றது. இந்தக் கல்வெட்டில் இருந்து கிடைக்கப்பெறும் சோதிடக் குறிப்புக்களைக் கவனிக்குமிடத்து சோழ இலங்கேஸ்வர தேவனின் பத்தாவது ஆண்டில், மாசி மாதம் பூர்வபட்சத்து துவாதசியான செவ்வாய்க்கிழமை ஆயிலிய நட்சத்திரம் கூடிவரும் தினத்தன்று இரவு மகா சபைக் கூட்டம் வேண்டும் எனத் தோன்றுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தளாய்க் கல்வெட்டை ஆராய்ந்த கலாநிதி கா.இந்திர பாலாவின் முடிவின் பிரகாரம் கி.பி1033 மாசி 13ம் திகதி அல்லது கி.பி 1047 10ம் திகதி மாசி இல் கந்தளாய்க் கல்வெட்டுத் தெரிவிக்கும் மகாசபைக் கூட்டம் நிகழ்ந்திருக்க வேண்டும். இந்தக் கூட்டத்தில் மகாசபையின் வரி சேகரிப்பாளரும் கலந்து கொண்டதாக அறிய முடிகின்றது.(23) கந்தளாய்க் கல்வெட்டின் பெரும் பகுதி பெருமளவு சிதைந்து விட்டதால் கல்வெட்டின் வாசகங்களை முழுமையாக வாசிக்க முடியாவிடினும், சில சொற்களை அறியக் கூடியதாக உள்ளது.

மேற்படிக் கல்வெட்டின் மூலம் விக்கிரம சோழ வாய்க்கால் கண்ணாறு, பெறுங்குறி, பெருமக்கள், நம்மூர் தண்டுகின்ற முத்தங்கை கோயில் மானி, பிரம்மதேயம் ஆகிய சொற்களை அறியக் கூடியதாக உள்ளது. இராஜராஜ சதுர்வேதி மங்கலத்தின் ஊராட்சி அமைப்பான பெருங்குறி(மகாசபை) பெருமக்கள் ஒரு இரவு ஒன்றுகூடி விக்கிரம சோழ வாய்க்கால் தொடர்பாக எடுத்த தீர்மானத்தின் பதிவுகளே கந்தளாய்க் கல்வெட்டில் பொறிக்கப்பட்டிருக்கின்றது. பெருங்குறி என்பது மகாசபை என்ற வடமொழிச் சொல்லின் தமிழ் வடிவமாகும். விக்கிரம சோழ கால்வாயையும், அதற்குரிய கண்ணாறுகளையும் (கிளை வாய்க்கால்) திருத்தம் செய்ய பெருங்குறிப் பெருமக்கள் ஒன்றுகூடித் தீர்மானித்து எடுத்த முடிவுகளை கந்தளாய்க் கல்வெட்டில் பதிவு செய்ததாக முன்பு கவனித்தோம். அதில் பெருங்குறியில் தண்டல் அதிகாரி (வனி சேகரிப்பவன்) கலந்து கொண்டதாக அறிய முடிவதால் ஊராட்சி நிர்வாகத்தில் வரி சேகரிப்பு நிர்வாகம் மக்கிய பங்கு வகித்ததாக கருதமுடிகின்றது. இந்த வரிசேகரிப்பவனை மானி எனக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. மானி என்பது கோயில்களில் பணியாற்றும் பிரமச்சாரி பிராமணனைக் குறிக்கும். இவனிடம் நிலம், நீர்ப் பகிர்வு வழி அறக்கொடை, போன்றனவற்றின் விபரங்கள் எழுதப்பட்ட ஏடுகள் இருந்தன. இந்த ஏடுகளை வரிப்பொத்தகம் அல்லது புரவு எனவும் அழைக்கப்பட்டது. பெருமக்கள் என்பது பெருங்குறி ஊராட்சி நிர்வாகத்தின் உறுப்பினர் எனப் பொருள்படும் நம்மூர் தண்டுகின்ற முத்தங்கை கோயில் மானி என்ற சொற் தொடர் மூலம் கந்தளாயில் துர்க்கை அம்மன் ஆலயத் தண்டல் (வரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேகரிக்கும் பிரமச்சாரி இளம் பிராமணன் இருந்திருக்கின்றான் என அறிய முடிகின்றது. முத்தங்கை என்பது சாசன வழக்கில் துர்க்கை எனப் பொருள் தரும்.

பிராமணர்களுக்கு நிலதானம் அளிப்பது தமிழ் நாட்டு மன்னர்களின் வழக்கமாக இருந்தது. பல்லவர்களும், சோழர்களும் பெருமளவு நிலங்களைப் பிராமணர்களுக்கு தானம் செய்திருக்கின்றார்கள். நிலங்களின் பொருளாதாரப் பயன்பாட்டை மட்டுமல்ல நிர்வாக உரிமையையும் பெற்றிருந்தார்கள். இவற்றை சதுர்வேதி மங்கலம், அல்லது பிரமதேயம் என அழைக்கப்பட்டது. திருகோணமலை மாவட்டத்திலும் சதுர்வேதிமங்கலம் உருவாக்கப்பட்டிருந்ததாகக் கந்தளாய்க் கல்வெட்டுக் கூறுகின்றது. சுருங்கக் கூறின் சோழ நிர்வாகிகள் பிரமதேயம் அல்லது சதுர்வேதி மங்கலம் மூலம் நாட்டார்களைக் கண்காணிக்கவும் இறை நெறிப்படுத்தவும் மேம்படுத்தவும் செய்தனர்.

கந்தளாய்க் கல்வெட்டு இரு தகவல்களைக் கொண்டுள்ள தால் முக்கியத்துவம் அடைகின்றது.

1. சோழ இலங்கேஸ்வரன் குறித்த தகவல்

2. சோழர்களின் நிர்வாக முறை.

**திருகோணமலையில் சோழ இலங்கேஸ்வரன்**

சோழ இலங்கேஸ்வரன் குறித்த செய்திகளைக் கந்தளாய், மானாங்கேணிக் கல்வெட்டுக்கள் தருகின்றன. அகன்ற சோழப் பேரரசின் பல்வேறு மண்டலங்களுக்கு அலசப் பிரதிநிகளாக இளவரசர்களை நியமிக்கும் வழக்கம் இராஜந்திரனால் தான் முதன் முறையாக ஆரம்பிக்கப்பட்டது. முதலாம் இராசேந்திர சோழன் காலம் முதல் வீரராஜந்திரன் காலம் வரை பாண்டிய நாட்டிற்கும் கங்க நாட்டிற்கும், இலங்கைக்கும் பிரதிநிதிகளை அனுப்பும் வழக்கம் தொடர்ந்தது. இத்தகைய பிரதிநிதிகளை அனுப்பப்பட்டபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் எந்த இராச்சியத்திற்கு அனுப்பப்பட்டார்களோ அந்த இராச்சியத்தின் பெயரையும் குறித்து நின்ற விருதும் பெயர்களும் கொடுக்கப்பட்டன. (24) தன் மகன் ஒருவனை ஸ்ரீ சோழ பாண்டியன் என்ற விருதுப் பெயருடன் பாண்டிய நாட்டை ஆளும்படி இராஜேந்திரன் பணித்தான் எனத் விருவாலங்காட்டுச் செப்பேடு குறிப்பிடுகின்றது. இது போன்று சேரனுக்குரிய விருதுப் பெயரான வில்லவன் என்பது சேர மண்டலத்தை நிர்வகிக்கச் சென்ற இளவரசனுக்கு வழங்கப்பட்டது. பாண்டியனுக்குரிய. மீனவன் என்ற பெயர் பாண்டிய மண்டலத்திற்கு அனுப்பப்பட் இளவராசனுக்கு வழங்கப்பட்டது. எனினும் மேற்கூறப்பட்ட இளவரசர்கள் வடமொழிப் பெயர் வடிவங் களைத் தேர்ந்தெடுத்தோடு சோழ என்ற என்ற முதற் பெயரையும் சேர்த்தனர் என அறிய முடிகின்றது. இதனால் பாண்டிய நாட்டுக்கு அனுப்பப்ட்ட இளவரசன் சோழ பாண்டியன் என்றும், சேர நாட்டுக்கு அனுப்பப்ட்டவன் சோழ கேரளன் என்றும் அழைக்கப்பட்டான். ஆனால் இலங்கையை ஆட்சி செய்தவர்களுக்கு வம்சம் பெயர் இல்லாத காரணத்தால் இலங்கைச் சோழமண்டலத்தை நிர்வகிக்க நியமிக்கப்பட்ட சோழ இளவரசனுக்கு சோழ இலங்கேஸ்வரன் என விருதுப் பெயர் வழங்கப்பட்டது. ஆனாலும் இந்தச் சோழ இலங்கேஸ்வரன் யார் என்பது மிக முக்கியமான கேள்வியாகும். முதலாம் இராஜாதிராஜனால் நியமனம் செய்யப்பட்ட இலங்கையர்க் கிறைவன் என்பவனே சோழ இலங்கேஸ்வரனாக குறிப்பிடப் பட்டுள்ளது.

இலங்கையிலே முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன் 2வது இராஜேந்திரன், அதிராஜந்திரன் (வீர ராஜேந்திரனுடன் கூடி ஆட்சி நடத்திய சோழன்) ஆகியோரது கல்வெட்டு கிடைத்துள்ளன. ஆயினும், இராஜாதிராஜன் குறித்த கல்வெட்டு எதுவும் கிடைக்கவில்லை.(25)

வரலாற்று ஆய்வாளர் கலாநிதி செ. குணசிங்கம் இலங்கேஸ்வர தேவன் முதலாம் இராஜேந்திரனால் நியமனம் செய்யப்பட்ட சோழப் பிரதிநிதி எனக் கருதுகின்றார்(26) இலங்கேஸ்வரன் என்பது இலங்கை ஆட்சியாளருக்கான பொதுப் பெயராகக் கருத இடமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழர்கால ஆட்சி குறித்து ஆராய்ந்த டாக்டர் ஆ. பத்மாவதி விரராஜேந்திரனே இலங்கையில் சோழ இலங்கேஸ்வரன் என்ற பெயரில் ஆட்சி செய்தாகக் குறிப்பிடுகின்றார். இராஜாராதிராஜ சோழன் போரில் உயிர் துறக்க இவனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த 2ம் இராஜேந்திரனும், வீரராஜேந்திரனும் கொப்பத்துப் போரில் சாளுக்கியரைத் தோற்கடித்த பின்னர் இலங்கை மீதும் ஆதிக்கப் போரை நடத்தினார்கள். இவர்களில் வீரராஜேந்திரன் என்பவன் சோழ இலங்கேஸ்வரன் என்ற விருதுப் பெயருடன் ஆட்சி செய்ததை ஏற்கலாம். இலங்கேஸ்வலன் என்ற பொதுப் பெயரினால் தென் இலங்கை மன்னர்கள் பலர் சோழர்களினால் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர். இந்தப் பண்பு சோழராட்சிக்குப் பின்னரும் தொடர்ந்தது. சோழ மண்டலங்களை நிர்வகிக்க இளவரசர்களை நியமனம் செய்யும் சோழ மண்டலங்களை நிர்வகிக்க இளவரசர்களை நியமனம் செய்யும் வழக்கத்தை இராஜேந்திரனே ஆரம்பித்து வைத்தான். பெரும் பேரரசாக எழுச்சி பெற்ற சோழ இராச்சியத்தில் இளவரசர்களை நியமனம் செய்யும் வழக்கத்தை அறிமுகம் செய்ததற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. வரலாற்று ஆய்வாளர் நீலகண்ட சாஸ்த்திரி பின் வரும் இரு காரணங்களையே முக்கியமாகக் கருதுகின்றார்.(27)

1. இளவரசர்களுக்கு பதவியளிப்பு வழங்குவதன் மூலம் அவர்களது ஆற்றல் சரியாக மதிக்கப்பட வாய்ப்பேற்பட்டிருக்கின்றது.
2. போட்டிக்குரிய இளவரசர்களை வெளிநாட்டுப் பிரதிநிதிகளாக நியமனம் செய்வதன் மூலம் அரண்மனைச் சூழ்ச்சிகளுக்கான வாய்ப்புகள் தவிர்க்கப்பட்டிருக்கும்.

இந்த இரு காரணங்கள் தவிர இளவரசர்களின் புதிய ஆற்றல் எல்லை கடந்த நிர்வாகத்திற்கு வலிமை சேர்த்திருக்கும். மேலும், இராஜேந்திரனின் கவனம் தென் கிழக்காசியத் தீவுகளின் பக்கம் திரும்பியிருந்ததால் இலங்கையின் நிர்வாகத்தை நேரடியாகக் கவனிக்க முடியாத காரணத்தால் இராசப் பிரதிநிதியை நியமனம் செய்ய வேண்டிய தேதை உருவாகியிருக்க வேண்டும். தென் இந்தியாவிலும் பாண்டிய நாடு சோழருடைய ஆதிக்கதின் கீழ் முற்றாகக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்ததாக கருத முடியாது. ஆங்காங்கே பாண்டியர்கள் சோழருக்கு எதிராக கலகம் செய்தார்கள். ஏற்கனவே இலங்கையில் சிங்கள உறவு சீராக இருந்த காரணத்தால் சோழ நிர்வாகத்திற்கு நெருக்கடி ஏற்படாது கண்காணிக்க ஒரு இராசப் பிரதிநிதி தேவைப்படிக்கலாம். அவன் பொலநறுவையிலும், திருக்கோணமலயிலும் இருந்த தனது நிர்வாகத்தை கவனித்திருக்கின்றான்.

## சதுர்வேதி மங்கலம்

கந்தளாய்க் கல்வெட்டு சதுர்வேதிமங்கலம் குறித்த பல உறுதியான தகவல்களைத் தருகின்றது. சதுர்வேதி மங்கலம் என்பது நான்கு வேதங்களையும் கற்றுணர்ந்த பிராமணர்களுக்கு வரியில்லாமல் வழங்கப்பட்ட குடியிருப்பாகும். இத்ததைகய குடியிருப்பு கந்தளாயில் காணப்படட்டிருக்கின்றது. இந்தக் குடியேற்றம் எந்தக் காலகட்டத்தில் உருவாகியது என்பரத திட்டவட்டமாகக் குறிப்பிடுவதற்கு உறுதியான வரலாற்றுக் குறிப்புக்கள் கிடைக்க வில்லை. பல்லவர் காலத்தில் சைவ மத எழுச்சி காரணமாகப் பல பிராமணர்கள் திருக்கோணமலையில் குடியேறியிருக்க வேண்டும். இந்த எழுச்சியின் தொடர்ச்சியாகச் சோழர் காலத்திலும் பிராமணர்கள் குடியேறினார்கள் எனக் கொள்வதில் தவறில்லை. கந்தளாயில் ஏற்பட்ட பிராமணக் குடியேற்றம் சோழர்களின் ஆதரவைப் பெற்றதில் வியப்பில்லை. இராஜராஜன் காலத்தில் கந்தளாயில் இருந்த சதுர்வேதி மங்கலத்தை இராஜராஜ சதுர்வேதி மங்கலம் என்றே அழைக்கப்பட்டது. பேரரசன் இராஜராஜனின் ஆதிக்கத்தின் கீழ் கந்தளாய் கொண்டுவரப்பட்டதன் நினைவாகப் பெயர் மாற்றம் நிகழ்ந்திருக்கக்கூடும். இக் குடியேற்றம் அளவில் பெரிதாக இருந்ததோடு, அதிகாரம் உள்ளதாகவும் இருந்திருக்க வேண்டும்.

கந்தளாயில் உள்ள தென் கைலாசம் என்ற கோயிலில் சிறி விஜயராஜேஸ்வரம் உடையார் என்ற தெய்வத்திற்கு ஒரு பிராமண விதவை அளித்த அறக்கொடை குறித்த தகவல் காணப்படுவதால், பிராமணர்கள் பரவலாக வாழ்ந்திக்கிறார்கள் எனக் கருதலாம். இவை தவிர திருக்கோணமலை மாவட்டத்தில் சோழர் காலக் குடியேற்றங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல தடவை ஏற்பட்டதை வரலாற்று ஆவணங்கள் உறுதி செய்கின்றன. சோழப் வீரர்கள், கலைஞர்கள், பிராமணர்கள், தொழும்பர்கள் என பலதரப்பட்ட தென்னிந்திய சமூக வகுப்பைச் சார்ந்தவர்கள் திருக்கோணமலையில் குடியேறியிருக்கின்றார்கள். ஆயினும் குடியேற்றங்களின் எண்ணிக்கை பற்றி விபரமாகத் தெரிந்து கொள்ள போதிய தெளிவான ஆதாரங்கள் இல்லை. இலங்கையில் சோழரின் ஆட்சி வீழ்ச்சியடைந்ததன் பின்னரும் கூட தென்னிந்தியக் குடியேற்றம் தொடர்ந்தன.

சோழர்களினால் உருவாக்கப்பட்ட சைவ ஆலயங்களையும், மத நிறுவனங்களையும் நிர்வகிக்கப் பெரும் எண்ணிக்கையில் பிராமணர்களும், தொழும்பர்களும் குடியேறியிருக்க வேண்டும். இவர்கள் மதக்கடமைகளுக்காக மட்டுமின்றி நிர்வாகத்தை நடத்தவும் சோழ நிர்வாதிகளால் அலைத்து வரப்பட்டனர். இது தவிர, வேளைக்காறப் படை என அழைக்கப்பட்ட பகுதிநேரப்படையினரும் திருக்கோணமயில் குடியேறி இருந்தனர். வேளைக்காறப் படையினரது குடியேற்றம் சோழருடை வீழ்ச்சிக்குப் பின்னரும் தொடர்ந்தது. சூளவம்சம் வேளைக்காறப்படை கொட்டியாரம், கந்தளாய், திரியாய் ஆதிய இடங்களில் நிலை கொண்டதாகக் கூறுகின்றது. இது குறித்த தகவல் ஒன்று மயிலாங்குளம் கல்வெட்டுத் தருகின்றது. சோழராட்சியை விலக்கிக் கொண்டு விஜபாகு ஆட்சியை அமைத்த போதும் கந்தளாய் சதுர்வேதி மங்கலம் தொடர்ந்தும் பெரும் அதிகாரத்துடன் இருந்திருக்க வேண்டும். விஜயபாகுவினால் ஜனநாத மங்கலம் (பொலநறுவைக்கு) என்ற சோழரின் தலைநரம் விஜயராஜபுரம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது போல இராஜராஜ சதுர்வேதி மங்கலம் என்ற பெயர் மாற்றப்பட்டு, விஜயராஜ சதுர்வேதி மங்கலம் என அழைக்கப்பட்டது. இது விஜயாபாகுகந்தளாயிலிருந்த பிராமணர் களது எதிர்ப்பை விரும்பாமல் வஜயபாகுவினால் சதுர்வேதி மங்கலம் ஆதரிக்கப்பட்டதையே காட்டுகின்றது. விஜயராஜ சதுர்வேதி மங்கலம் பெயர் குறித்த தகவல்களை பளமோட்டைக் கல்வெட்டுக் கூறுகின்றது. இதற்கு இரு காரணங்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கந்தளாயிலிருந்து சதுர்வேதி மங்கலத்தை எதிர்ப்பதன் மூலம் தென் இந்திய ஆட்சியாளர்களின் எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படலாம் என்ற எச்சரிக்கை உணர்வு விஜயபாகுவை சதுர்வேதி மங்கலத்தை ஆதரிக்க நிர்ப்பந்தித்திருக்க வேண்டும். இந்த எச்சரிக்கை உணர்வு விஜயபாகுதைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த சிங்கள மன்னர்களிடமும் இருந்திருக்க வேண்டும். 2ம் கஜபாகு காலத்துக் (கி.பி. 1132-கி.ப. 1153) கல்வெட்டுத் தகவல் சதுர்வேதி மங்கலம் தொடர்ந்தைச் சுட்டிக் காட்டுகின்றது. இது வரை கிடைக்கப் பெற்ற வரலாற்றுச் சாசனங்களின் பிரகாம் நிசங்கமல்லன் காலம் வரை (கி.ப.1187-கி.ப.1196) கந்தளாய்ச் சதுர்வேதிமங்கலம் குறித்த உறுதியான தகவல்கள் உள்ளன. நிசங்கமல்லனின் கந்தளாய்க் கல்வெட்டின் தகவலின் பிரகாரம் கந்தளாய் நகரில் பார்வதி சத்திரம் ஒன்று இருந்தது தெளிவாகின்றது. நிசங்கமல்லனின் வேண்டுகோளுக்கு இணங்க கந்தளாயச் சதுர்வேதி மங்கலத்தில் பார்வதி சத்திரம் கட்டப்பட்டதாக நிசங்கமல்லனின் கல்வெட்டுத் தகவல் தருகின்றது. சோழராட்சிக்குப் பின்னரும் கஜபாகு, நிசங்க மல்லன் ஆகியோர் இந்து நலனில் அக்கறை கொண்டிருந்த காரணத்தால் கந்தளாய் தொடர்ச்சியாகப் பிராமணர்களும் இந்துக்களும் வாழ்ந்த இடமாக ஏற்பது பொருத்தமானதாகும்.

2. சோழராட்சி விலக்கப்பட்ட பின்னரும் திருக்கோணமலை நிலப்பரப்பில் பெருந் தொகையாகக் காணப்பட்ட வேளைக்காறப்படை எதிர்ப்பை இலங்கை அரசர்கள் விரும்பவில்லை. வேளைக்காறப்படைப் பிரிவின் பாதுகாப்பு பௌத்த நலன்களைப் பாதுகாக்கவும் தேவைப்பட்டிருந்தது.பொலநறுவையில் வைத்திருந்த புத்திரியின் பல் அடங்கிய பேழையின் பாதுகாப்பை தமிழக வேளைக்காறப்படையே பொறுப்பேற்றிருந்தது. அதே போன்று திரியாய் பௌத்த ஆலயத்தையும் தளபதி தலைமையிலான வேளைக்காறப் படையே பொறுப்பேற்றதும் நினைவில் கொள்ளத்தக்கவை.

**சோழர் காலத் திருக்கோணமலை நிர்வாகம்**

இராஜாராஜ சோழன் (கி.பி. 985-கி.ப. 1014) காலத்திலும் அவர்மகன் இராஜேந்திரன் (கி.ப. 1012-கிப.1044) காலத்திலும் சோழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராச்சியம் ஒன்பது மண்டலங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு மண்டலங்களும் வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இலங்கையின் சோழராட்சி உட்பட்ட பகுதிகளில் காணப்பட்ட நிர்வாகப் பிரிவுகளில் ஆறு வளநாடுகளையே சாசனங்கள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. இதில் நான்கு சோழ வளநாடுகள் திருக்கோணமலை மாவட்டத்தில் அடையாளங் காணக்கூடியதாக உள்ளது. அனைத்து சோழ வளநாடுகளும் சிறப்புப் பெயர்களினால் வழங்கப்பட்டது.

1. இராஜேந்திர சோழவளநாடு. (திருக்கோணமலை நகரமும் கந்தளாய் இராஜராஜ சதுர்வேதி மங்கலமும் உள்ளடங்கிய பகுதி) இதன் மறு பெயர்கள் மும்முடிச் சோழ வளநாடு. இராஜவிச்சாதிர வளநாடு என்பனவாகும்.

2. விக்கிரம சோழ வளநாடு (மூதூர் பற்றின் ஒரு பகுதி கணக்கன் கொட்டியாரம்)

3. இராஜராஜ வளநாடு (மூதூர் பற்றின் மற்றொரு பகுதியான மாப்பிசும்பு கொட்டியாரம்)

4. இராஜேந்திர சிங்க வளநாடு (வில்கம் விகாரை என அழைக்கப்படும் இராஜராஜப் பெரும் பள்ளி உள்ளடங்கிய பகுதி, தற்பொழுது கட்டுக்குளம பற்று என அழைக்கப்படும் பகுதி (இப்பிரதேசம் மானாவத்துளா அல்லது வீரபரகேசரி வளநாடு எனவும் அழைக்கப்பட்டது.)

பூகோள அடிப்படையில் தென்னிந்திய ஓரமாக இலங்கை அமைந்திருப்பதால் இந்தியப் படைபெடுப்புக்களும் குடியேற்றங்களும் அடிக்கடி நிகழ்ந்திருக்கின்றன. இவற்றை இலங்கை-இந்திய ஆரம்ப கால வரலாறு பல இடங்களில் பதிவு செய்திருக்கின்றது. பல்லவர் காலத்தில் பெருமளவில் திருக்கோணமலையில் கலைஞர்கள், போர் வீரர்கள், வணிகர்கள் குடியேறி இருந்தார்கள். குறிப்பாக பத்தாம், பதினொராம் நூற்றாண்டுகளில் மட்டுமல்ல பின்னரும் கூட தென்னிந்தியாவிலிருந்து பல குடியேற்றங்கள் இலங்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ந்திருக்கின்றது. கந்தளாய்க் கல்வெட்டு மற்றும் சோழர் காலக் கல்வெட்டுக்களில் சதுர்வேதி மங்கலம், பிரமதேயம் என்பன பற்றிய சில குறிப்புக்கள் காணப்படுகின்றன. கந்தளாயிற் கண்டெடுக்கப்பட்டுள்ள கல்வெட்டில் மிக முக்கியமான சோழர்காலச் செய்திகள் காணப்படுகின்றன.

சோழராட்சியில் நிர்வாகமுறை குறித்த சில தகவல்களை கந்தளாய்க கல்வெட்டுத் தருகின்றது. தமிழகத்தில் சோழராட்சியில் பாண்டிய மண்டலம் போன்ற பிற மண்டலங்களை நிர்வகிப்பதற்குச் ஏற்படுத்தப்பட் நிர்வாக முறையே திருக்கோணமலையிலும் நடைமுறைப்படுத்தியிக்கின்றார்கள். தென் இந்திய மத்தியகால வரலாற்றில் பல உள்ளூராட்சி சபைகள் உருவாக்கப்பட்டிருந்தன. சோழராட்சியில் ஊர், சபை, நாடு, என உள்ளூராட்சி நிர்வாகம் அதிகார ஒழுங்கு நிரலீல் காணப்பட்டன. இந்த நிர்வாக முறை தமிகத்தில் பல்லவராட்சியிலும் நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தது. ஆயினும், சோழராட்சியில் உள்ளூராட்சி நிர்வாகம் சிறப்பு நிலையில் காணப்பட்டது. நில உடமையாளர் செலுத்திய நில வரியைக் கடமை என்று அழைக்கப்பட்டது. உழு குடி என அழைக்கப்பட்ட விவசாயிகள் செலுத்திய நிலக் குத்தகையை குடிமை என அழைக்கப்பட்டது. இது தவிர குடிமக்கள் அனைவரும் பாதுகாப்பு வரி செலுத்தினார்கள். இந்த வரியை பாடிக்காவல் என அழைக்கப்பட்டது. நிலம், நீர்ப் பகிர்வு, அற நிலையம் கோயில், அறக் கொடை, வரி என்பன உள்ளடங்கிய பல விபரங்கள் ஏடுகளில் எழுதப்பட்டு ஊராட்சி பணிமனையில் பேணப்பட்டிருந்தது முதலாம் இராஜராஜன் காலத்திலேயே அவனது ஆட்சிக்கு உட்பட்ட வளநாடுகள் அனைத்தும் அளக்கப்பட்டதோடு பயன்பாட்டிற்கு உட்பட்ட நிலத்திற்கு வரி செலுத்தும் முறை ஆரம்பமானது. பிற்காலச் சோழ சாசனங்களில் பூச்சி, அட்டம் போன்ற சொற்கள் காணப்படுகின்றன. இவை வரி முறைகளைக் குறிக்கப் பயன் படுத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிகள் அறவிடப்படுவதற்கு ஒழுங்கு விதி ஏடு தயாரிக்கப்பட்டிருந்தது. இதில் வரி பெறும் ஒழுங்கு முறையுடன் வரி விலக்கு குறித்தும் சொல்லப்பட்டிருந்தது. நோயாளிகள், முதியோர்கள், ஊனமுற்றவர்கள், போரில் விழுப்புண் அடைந்தவர்கள், விதவைகள் என்போர் வரி விதி விலக்குப் பெறத் தகுதி பெற்றிருந்தார்கள். வரி ஏமாற்றுச் செய்பவர்களுக்கான கடுமையான தண்டனை விதிகளும் வரி ஒழுங்கு விதி ஏட்டில் சேர்க்கப்பட்டிருந்தது. மூன்று ஆண்டுகளுக்கு மேல் வரி செலுத்தத் தவறியவர்களின் நிலமும், அரசனால் பறிக்கப்பட்டது. சோழர் காலத்தில் கொட்டியாரப் பகுதியிலிருந்து ஐந்து கிராமங்களின் வரிகள் தஞ்சைப் பிருகதீஸ்வரர் கோவிலுக்கு அனுப்பப்பட்ட செய்திளை சாசனச் சான்றுகள் வாயிலாக அறிய முடிகின்றது. களவு கொலை போன்றன ஆக்ஞாக்ரயம் என அழைக்கப்பட்டது. குற்றச் செயலுக்கான குற்றவியற் தண்டனைக் கோவை தொகுக்கப்பட்டிருந்தது. இத்தகைய ஊராட்சி ஆவனங்களைப் புரவு, வரிப்பொத்தகம் என அழைக்கப்பட்டது.

சோழர்காலத் திருக்கோணமலைச் சமூக அமைப்பு சாதியத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. சாதியமைப்பின் ஒழுங்கு நிரலில் பிராமணர்கள் உயர்நிலையில் காணப்பட்டார்கள். சோழர்கால சமூக அமைப்பில் பிராமணர்களும், வேளாளர்களும் நிலவுடமையார்களாக் காணப்பட்டனர். வேளாளர்கள் நாட்டார்கள் என அழைக்கப்பட்டார்கள் நிலம், சமூக விதிகள் தொடர்பான அரசாணைகள் முதலில் வேளாளருக்கே தெரிவிக்கப்பட்டது. ஊர் மக்களால் தீர்க்க முடியாத பிரச்சினைகள் வேளாளர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. நாட்டார்களே வரி சேகரிக்கும் பணியில் ஈடுபட்டார்கள். மதத்தர்மத்தின் பெயரில் பிராமணர்களும், வேளாளர்களும் சேர்ந்து சமூக ஒழுங்கை ஏற்படுத்தினர். சோழர் காலத்தில் தொழும்பு,தொண்டு குடிமை பண்புகள் காணப்பட்டன. திருக்கோணமலைச் சமூகத்தில் சோழர்காலத்திற்குப் பின்னரும் மேற்குறிப்பிட் சமூக வழக்குகள் தொடர்ந்தன. ஒல்லாந்தருடைய பதிவேடுகளில் இந்த சமூக நடைமுறைகள் குறிப்புக்கள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழராட்சியில் காணப்பட்ட ஊர், மகா சபை என்பன ஊராட்சி மன்றங்களாக இயங்கிவந்தன. சோழராட்சியில் சபை அல்லது மகாசபை என்பன பிராமணர்கள் வாழ்ந்த பகுதியாகும். இது பிராமணக் குடியிருப்பான சதுர்வேதி மங்கலத்தின் ஊராட்சி அமைப்பாகும். இத்தகைய ஊராட்சி நிர்வாக முறையே திருக்கோணமலை மாவட்டத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது. கந்தளாய் நகரை இராஜராஜ சதுர்வேதி மங்கலம் என அழைக்கப்பட்டது. கந்தளாய் சதுர்வேதி மங்கலத்தில் இருந்த பெருங்குறிப் பெருமக்கள் திருக்கோணமலை மாவட்ட நிர்வாகங்களைக் கவனித்திருக்க வேண்டும். சோழக் கல்வெட்க்களில் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் திருக்கோணமலை மாவட்டத்தில் கந்தளாய் ஆகக் கூடி அதிகாரங்களைக் கொண்ட ஊராட்சி நிர்வாகத்தைக் கொண்டிருந்ததாக அறிய முடிகின்றது.

கந்தளாய்ப் பகுதியில் நில தானங்களைப் பெற்ற பிராமணர்கள் சைவ வழிபாட்டை மேம்படுத்தவும், நாட்டாருக்குப் பணிபுரியவும் செய்தனர். ஓதுதலும், ஓதுவித்தலும் பிராமணருக்கு ஒதுக்கப்பட்ட பணியாகும். சைவ மடங்களிலும், கோயில்களிலும் மதக்கல்வி போதிக்கப்பட்டன. வட மொழியில் பிரார்த்தனைகளும், கிரியைகளும் ஆலயங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டன. வேதங்களைப் பயிற்றுவித்தல், ஆலய மண்டபங்களில் மகாபாரதம் புராணம் படித்தல் போன்ற சைவ நெறிகள் பின்பற்றப்பட்டன இத்தகைய செயற்பாடுகள் மூலம் சோழ அரசுப் பிரதிநிதிகள் தங்கள் சமூக நியாயத்தை நடைமுறைப்படுத்தினார்கள். திருகோணமலை நகரப் பகுதியிலுள்ள சமய நிலையங்களோடு சோழர் கொண்டிருந்த தொடர்புகளுக்கு அங்கு காணப்படும் இராஜேந்திர சோழனது காலத்துச் சாசனங்கள் ஒஸ்றன்பேக் கோட்டையிலும் திருகோணமலை பத்திரகாளி அம்மன் கோயில் கல்வெட்டிலும் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒஸ்றன்பேக் கல்வெட்டு

முதலாம் இராஜேந்திரன் (கி.பி.1012-கி.பி 1055) காலத்துக்குரியதாக கருதப்படும் இச்சாசனம் 1836இல் பிரித்தானிய கடற்படையில் பணியாற்றிய D.W.பிலண்ட் என்பவரால் கண்டறியப்பட்டு பிரதியெடுக்கப்பட்டது. இச்சாசனம் கோணேசர் ஆலயத்தில் இருந்து ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியாளர்களினால் பிரித்தெடுக்கப்பட்டு துறைமுக மேடை அமைக்கப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இராஜேந்திரனின் சாதனைகளையும் புகழையும் கூறும் இந்தச் சாசனம் இராஜேந்திரனின் ஆட்சி ஆரம்பிக்கப்பட்ட கால கட்டத்தில் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த மெய்க்கீர்த்தியில் கங்கை, கடாரப் படையெடுப்புக்கள் பற்றி எதுவும் தெரிவிக்கப்பட வில்லை. இந்தச் சாசனம் வரலாறு குறித்து முக்கிய தகவல்களை வழங்காத போதும் சோழர்கள் திருகோணமலைப் பகுதியில் கொண்டிருந்த ஈடுபாட்டினைத் தெரியப்படுத்துகின்றது.

சிதைவடைந்த ஒஸ்றன்பேக் கல்வெட்டின் வாசகம்.

1 ......ம் நண்ணற் கருமுரண் மண்ணைக் க....
2 ....கடல் லிழத்தரையர் தம் முடியும் ங்....
3 ....யர் ஓங்கெழில் முடியும் முந்நவர் பக்கல் ெ.........
4 ......த்த சுந்தர மடியும் இந்திரநாரமும் தெண்.....
5 .......ண்டல முழுதும் எறிபடைக் கெரளந் மு ை....
6 .....ம் குலதநமாகிய பலபுகழ் முடியும் செங்.....
7 .....ங் கதிர் வெலை தொல் பெருங் காவல் (பல்).....
8 .....தண்டால் கொண்டட கொப்பர செகரிய.....
9 .....சொழ தேவற்கு யாண்டு.....

ஒஸ்றன் பேன் கல்வெட்டின் சில சிதைவடைந்த பகுதி நீங்காலாக கிடைக்கப் பெற்ற பகுதிகளில் எழுத்துக்கள் இட்டு நிரப்பப்பட்டு திருத்தியடைக்கப்பட்ட வடிவம் (28)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பாக்கையும் நண்ணற் கரு முரண் மண்ணைக் கடக்கமும்
2. பொருகடல் ஈழத்தரையர் தம் முடியும் ஆங்கவர்
3. தெவியர் ஓங்கெழில் முடியும் முன்னவர் பக்கல் தென்
4. னவர் வைத்த சுந்தர முடியும் இந்திரநாதமும் தெண்டிரை
5. ஈழமண்டல முழுவதும் எறிபடைக் கெரளந் முறமையிற்
6. சூடும் குலதநமாகிய பலபுகழ் முடியும் செங்கதிர் மாலையும்
7. சங்கதிர் வெலைத் தொல் பெருங் காவல் பல் பழந்தீவும்
8. மாப் பொரு தண்டால் கொண்ட கொப்பரகெசரி பன்மரான உடையார்.
9. சிறி சோழ ராஜெந்திர தேவர்க்கு யாண்டு.............வது

## மானாங்கேணிக் கல்வெட்டு

திருகோணமலை வரலாற்றுக் குறிப்புகளைத் தரும் கல்வெட்டு வரிசையில் மானாங்கேணிக் கல்வெட்டு மிக முக்கியமானதாகும். இச்சாசனத்தில் சோழ இலங்கேஸ்வர தேவன் குறித்து செய்தி பதிவாகியிருக்கின்றது. அத்துடன் இக்கல்வெட்டு சோழருடைய நிர்வாகப் பிரிவுகளான மண்டலம், வளநாடு போன்ற பிரிவுகளைத் தெரியப்படுத்துகின்றன. இராஜராஜசோழனும் (கி.பி 985-கி.பி1014)அவர் மகன் இராசேந்திர சோழனும்(கி.பி.1012-கி.பி.1044) ஆட்சி செய்த காலத்தில் சோழராட்சி பல நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சோழராட்சியம் ஒன்பது சோழ மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இலங்கை ஒன்பது மண்டலங்களில் ஒன்றாகும்.

திருகோணமலை நகர மத்தியில் உள்ள மானாங்கேணியில் கிடைக்கப் பெற்ற இக்கல்வெட்டின் இரு பகுதிகளும் சேதமடைந்து விட்டது. எனவே தெளிவான தகவல்களைப் பெற முடியாமல் உள்ளது. திருகோணமலை மரபுக்கதைகளின் பிரகாரம் சோழருக்குப் பின்னர் கோணேசர் ஆலயத் திருப்பணிக்காகக் குளக்கோட்டனால் உருவாக்கப்பட்ட குளமே மானாங்கேணியாகும். இங்கு ஒரு சிவாலயம் இருந்திருக்க வேண்டும். அகழ்வாய்வின் போது பார்வதி, ஆவுடையார், மகாவிஷ்ணு, நந்தி என்பனவற்றின் சிற்ப உருவங்கள் கண்டறியப்பட்டன. கோணேசர் வீதி உலாக் காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானாங்கேணிச் சிவாலயத்தில் தங்கிச் சென்றிருக்கவேண்டும் என நம்பப்படுகின்றது. இச்சாசனத்தில் ஒவ்வொரு வரிகளிலும் முன்பகுதிகளிலும் பின் பகுதிகளிலும் பல எழுத்துக்கள் சிதைவடைந்துவிட்டன. இச் சாசனம் தமிழும் கிரந்தமும் கலந்த மொழியில் பொறிக்கப் பட்டுள்ளது. சிதைந்த எழுத்துக்களை இட்டு நிரப்புவதில் பல சிரமங்கள் உண்டு கல்வெட்டின் சிதைந்த எழுத்துக்களை இட்டு நிரப்புவதற்கு சமகால வரலாற்று அறிவோடு சாசனப் பயிற்சியும் தேவையாகும் இச்சாசனம் தமிழும் கிரந்தமும் கலந்து காணப்படுவதால் கிரந்த மொழிப் பயிற்சி மிக அவசியமானதாகும். கிரந்தம் என்பது வட மொழியைத் தமிழ் வரி வடிவங்கங்களில் ஒலி பெயர்ப்புச் செய்தலாகும்.

கிடைக்கப்பட்ட கல்வெட்டின் வாசகம்

......ஸ்ரீ சோழ இல....
....தேவற்கு யாண்டெ....
...டி சோழ மண்ட.....
..ஐந்த்ரை சோழ வள..
....சோழ வளநா...
.மலை ஸ்ரீ மச்சு.....
....மூலஸ்தானமு.....
...வர முடையார்....
.ள மண்டலத்தி....

சிதைந்த எழுத்துக்கள் இட்டு நிரப்பி திருத்தி எழுதப்பட்ட கல்வெட்டு வாசகம்

ரான உடையார் ஸ்ரீ சோழ இலங்கேஸ்
வரதேவற்கு யாண்டெட்டாவது
மும்முடி சோழ மண்டலத்து
இராஜேந்த்ர சோழவள நாட்டு
மும்முடி சோழவளநாட்டு கோண
மாமலை ஸ்ரீ மச்சுகேஸ்வரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமுடையர் மூலஸ்தானமும்
ஸ்வரமுடையார் கோயிலும்
சோழ மண்டலத்து இராஜே
ந்த்ரசிங்க வளநாட்டு இன்னம்
பர் நாட்டு
வேளான் கணபதி

மேற்படிக் கல்வெட்டானது சோழ இலங்கேஸ்வர தேவனின் ஆட்சிக் காலத்தில் ஈழ மும்முடிச் சோழ மண்டலத்து சோழவள நாடான திருகோணமலை திருக்கோணேஸ்வரத்து (மச்சகேஸ்வரத்து) மூலஸ்தானப் பணியையும் சோழ மண்டலத்து மற்றுமொரு சிவாலயம் தொடர்பான பணியையும் இராஜேந்திர சிங்க வளநாட்டுப் பிரதானிகள் நிறைவேற்றியதைக் குறிக்கின்றது. (29) இக்காலத்துக் குரிய நிலாவெளிக் கல்வெட்டானது கோணேஸ்வரத்தை மத்ஸ்ய கேஸ்வர மகாதேவர் என்றே குறிப்பிடுகின்றது. இச்சாசனத்தில் வேளான் கணபதி என்பது இக் கல்வெட்டைப் பொறித்தவராவர்.

## நிலாவெளிக் கல்வெட்டு

கந்தளாய் மானாங்கேணி கல்வெட்டுக்களை அடுத்து முக்கியம் பெறுவது நிலாவெளிக் கல்வெட்டாகும். கோணேஸ்வரம் பற்றிய வரலாற்றுத் தடயமாக மட்டுமல்லாது திருகோணமலை என்ற பெயர் குறித்தும் சொல்லப்படுவதால் இக்கல்வெட்டு திருகோணமலை வரலாற்றில் முக்கியம் பெறுகின்றது. பத்தாம் நூற்றாண்டின் தமிழ், கிரந்தம் என்பன கலந்த மொழிநடையில் பொறிக்கப்பட்டுள்ளது. பதினான்கு வரிகள் பொறிக்கப்பட்டுள்ளன(30)

### கல்வெட்டின் வாசகம்

ஸ்ரீ கோணபர்வதம் திருகோண
மலை மச்ச கேஸ்வரமுடைய மகாதேவர்க்கு நிச்சலழி
வுக்கு நிவந்தமாக சந்திராதித்தவற் செய்த
உராகிரிகாம, கிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ட கிரிகாமத்து நீர் நிலமும் புன்செய்யும்
தேவாலயமும் மேனோக்கின் மரமும்
கீழ் நோக்கின் கிணறும் உட்பட
இந்நிலத்துக் கெல்லை தெற்கெல்லை
கல்லு குடக்கு எத்தகம்பே எல்லை
வடக்கெல்லை சூலக்கல்லாகும் சுடர் கோணமாமலை தனில்
நீலகண்டருக்குரிய நிலம் இருநூற்று
ஐம்பதிற்று வேலி இது பன்மயே
சுரரட்ஸ

## கல்வெட்டின் மொழிபெயர்ப்பு

கிழக்கே கடல், மேற்கே எட்டம்பே, வடக்கே சூலம் பொறிக்கப்பட்ட எல்லைக் கல், தெற்கே எல்லைக்கல் என்பன எல்லையாகக் கொண்ட உரகிரிகாமம், கிரிகண்டகாமத்து பாசன நிலமும், வானம் பார்த் நிலமும் அது உள்ளடக்கியுள்ள தேவாலயமும் மரங்களும், கிணறுகளும் திருகோணமலையிலுள்ள மச்சகேஸ்வரத்து மகேஸ்வரருடைய தினப் புசைச் செலவுக்காக சூரியனும் சந்திரனும் உள்ளவரை நில தானம் செய்யப்படுகின்றது. நான்கு எல்லைகளுக்குள் அடங்கி இந்த இருநூற்றி ஐம்பது வேலி நிலமும் கோணமலையில் வீற்றிருக்கும் நீல கண்டத்தை உடைய சிவனுக்குரியதாகும். இந்த நிலதானம் திருக்கோணேஸ்வரத்து அறங்காவலர்களான சிவனடியார்கள் குழுவின் பாதுகாப்பில் இருக்கும்.

நிலாவெளிப் பிள்ளையார் கோயில் கிணற்குப் படிக்கட்டாக இருந்த இக் கல்வெட்டானது கோணேசர் ஆலயச் கட்டச் சிதைவுகளில் ஒன்றாகும். இக் கல்வெட்டின் மேற்பகுதி சிதைவடைந்த காரணத்தால் இந்தக் கல்வெட்டைப் பொறித்த மன்னன் யார் என்பது அறிய முடியாமல் உள்ளது. இக் கல்வெட்டுத் துண்டை பத்துக் கல் தொலைவில் உள்ள நிலாவெளிக்கு ஏன் கொண்டு சென்றார்கள் என்ற வினாவிற்கு பொருத்தமான பதில் கிடைக்கவில்லை. பொதுவாக கோணேசர் கோயில் கட்டடச் சிதைவுகள் பல ஆலயங்கள் கட்டப்பட பயன்பட்டிருக்கின்றதுது. நிச்சலழிவு என்பது ஆலய தினப்பூசைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவைக் குறிக்கும். இக் கல்வெட்டில் திருக்கோணேஸ்வரத்திற்கு அளிக்கப்பட்ட நில தானத்தை குறித்த தகவல்கள் பொறிக்கப்பட்டுள்ளது. கோணேசர் ஆலயத்திற்கு நிலதானமாக 250 வேலி நிலம்(சுமார்1700 ஏக்கர்) கொடுக்கப்பட்ட செய்தி காணப்படுகின்றது. வேலி என்பது தமிழக வழக்கில் காணப்பட்ட அளவை முறைகளில் ஒன்றாகும். சுமார் 2000 குழிகள் 1 வேலியாக கருதப்படுகின்றது. எனினும் இந்த அளவை முறை சில இடங்களில் மாறுபட்டும் காணப்படுகின்றது. ஒரு வேலியானது 2000-6000 வரை மாறுபட்டு வருவதும் கவனத்திற்குரியது.

கோணேசர் ஆலயத்திற்கு அளிக்கப்பட்ட நிலதானத்தில் நீர்ப்பாசன நிலமும், வானம் பார்த்த நிலமும் அடங்கும். இந்த நிலத்திற்கான எல்லை வரையறை செய்யப்பட்டுள்ளது. கிழக்கே கடல், மேற்கே எட்டம்பே வடக்கே சூலம் பொறிக்கப்பட்ட எல்லைக்கல் தெற்கே எல்லைக்கல் என்பன எல்லைகளாக வகுக்கப்பட்டுள்ளது. எட்டம்பே எந்த இடத்தைக் குறிக்கின்றது. என்பது தெரியவில்லை கல்வெட்டின் சில பகுதி சிதைவடைந்து போனதால் கோணேசர் ஆலயத்திற்கு நிலதானம் வழங்கியவர் யார் என்பது தெரியவில்லை 250 வேலி நிலம் கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டதன் மூலம் நிலதானம் செய்தவர் இளவரசனாக அல்லது மன்னனாக இருக்க வேண்டும். இக் கல்வெட்டின் காலம் குறித்து ஒரு உறுதியான கருத்தைக் கூற முடியாத போதும் சோழர்கள் ஆரம்பத்திற்குரியது என அடையாளம் காணலாம்.

வேலி என்ற நில அளவை முறை சோழர் காலத்தில் இலங்கையில் அறிமுகமானதாக நிலகண்ட சாஸ்திரி கூறுகின்றார்(31) வரலாற்றாசிரியர் செ.குணசிங்கம் இக் கல்வெட்டை 11ம் நூற்றண்டின் ஆரம்ப காலத்திற்குரிய தாகக் கருதகின்றார். கல்வெட்டின் எழுத்தடைப்பு சோழர்கால ஆரம்பத்திற்குரியது. இக் கல்வெட்டானது. கந்தளாய் மற்றும் மானாங்கேணி கல்வெட்டின் எழுத்தமை ஒத்திருக்கின்றது(32) எனினும் பேராசிரியர் கா.இந்திரபால நிலாவெளிக் கல்வெட்டு பத்தாம் நூற்றாண்டுக்குரியதாக கருதுகின்றார். அவர் தனது முடிவுக்காக இரு காரணங்களை முன்வைக்கின்றார். பல்லவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திலும் சோழர் கால ஆரம்பத்திலும் (10ம் நூற்றாண்டு) தமிழும் கிரந்தமும் கலந்து சாசனங்களில் எழுதும் வழக்கம் அதிகளவில் காணப்பட்டது.

கல்வெட்டில் காணப்படும் எழுத்து வடிவம் தமிழும் கிரந்தமும் கலந்து எழுதும் பண்பு சோழர்கால இறுதியிலும் வழக்கில் இருந்தது. கோணேசர் கோயில் கல்வெட்டு இத்தகைய எழுத்து வடிவங்களிலே காணப்படுகின்றது. இறுதியாக நிலாவெளிக் கல்வெட்டின் இறுதியில் மச்சகேஸ்வரத்துப் பன்மாகேஸ்வரர் ரக்சை என்று காணப்படுகின்றது. பன்மாகேஸ்வரர் என்பது சிவனடியார்களைக் குறிக்கப் பயன்படும் சாசன வழக்குச் சொல்லாகும். மற்றொரு கருத்தில் மகேஸ்வரர் ஆலய பிராமணர்களையும் குறிக்கின்றது. பன்மகேஸ்வரனுக்குப் பணிபுரியும் சிவனடியார்கள் குழு என்று பொருள் கொள்வதே பொருத்தமானதாகும். பொலநறுவையில் இராஜராஜன் கட்டிய வானவன் மாதேவி சிவாயத்திலும் இத்தகைய பன்மகேஸ்வரர் காணப்பட்டதாக அறிய முடிகின்றது.

நிலாவெளிக் கல்வெட்டானது திருக்கோணேஸ்வர ஆலயத்திற்கான தான நிலங்களைக் குறிப்பிடுவதோடு எல்லைகளையும் வகுத்துக் கூறுவதால் சோழர் காலத்தில் திருகோணமலையில் நில அளவைக் கணிப்பீடு துல்லியமாக மதிப்பிடப்படும் முறை காணப்பட்டதை அறிய முடிகின்றது. சோழர்காலத்தில் பேரரசன் இராசராசன் நில அளவை நாயகமாக மாராயன் என்பவனை நியமனம் செய்து தனது இராச்சியங்களை அளந்து மதிப்பிட்டான் என்ற செய்தி உறுதியாகின்றது. திருகோணமலையில் கட்டுக்குளம் பற்றுப் பகுதியில் மட்டும் கோணேசர் ஆலய தினப் பூசைச் செலவுக்கு (நீச்சலழிவு) சுமார் 1700 ஏக்கர் நில உற்பத்தி தேவைப்பட்டிருக்கிறது. என்ற செய்தியை அறிகின்ற போது கோணேஸ்வர ஆலயத்திற்கு வருகை தந்த பக்தர்களின் எண்ணிக்கையும் மிகப் பெருமளிவில் இருந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருவது பொருத்தமான தாகும். திருஞானசம்பந்தன் குறிப்பிட்டது. போல குடிதனை நெருங்கி பெருக்கமாக திருகோணமலை தோன்றியிருந்தது என்பது மற்றுமொரு முக்கியமான அவதானிப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலாவெளிக் கல்வெட்டில் மச்சகேஸ்வரம் எனப்படும் திருகோணமலை

நிலவெளிக் கல்வெட்டிலிருந்து திருக்கோணேஸ்வரத்திற்கு மச்சகேஸ்வரம் என்ற புராணப் பெயர் இருந்திருப்பதை அறிய முடிகின்றது. திருகோணமலை என்ற பெயரை முதன் முதலாக நிலவெளிக் கல்வெட்டு மூலமே அறியக்கூடியதாக இருப்பதால் திருகோணமலை வரலாற்றில் இக் கல்வெட்டிற்கு ஒரு தனிச் சிறப்பு உள்ளது. எனவே திருகோணமலை என்ற பெயர் சோழர் கால ஆரம்பத்திலேயே மிகத் தெளிவாக பலராலும் அறியப்பட்டதாகக் கொள்ள முடிகிறது. 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவ அடியாரான திருஞானசம்பந்தருடைய பதிகத்தில் திருகோணமலை குறித்து அறிந்து கொண்டதன் பின்னர் நிலாவெளிக் கல்வெட்டு மீண்டும் உறுதி படுத்துகிறது.இதன் மூலம் தமிழர்கள் திருகோணமலையில் தொடர்ச்சியாக ஆட்சி அதிகாரத்துடன் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்த முடிகின்றது. திருகோணமலை என்ற சொல்லில் காணப்படும் திரு என்பது மேன்மை, அழகு, தெய்வத்தன்மை, செல்வம், இலக்குமி, சிறப்பு, பொலிவு, நல்வினை, மங்கலியம் எனப் பல கருத்துகளைகே கொண்டிருந்த போதும் இங்கு தெய்வத்தன்மை என்ற கருத்தையே குறித்து நிற்கிறது. (33) இது குறித்து தட்சணை கைலாச புராணம் விளக்குகிறது. கோணமலை என்பது மூன்று மலை முகடுகளைக் குறிக்கின்றது. திருக்கோணேஸ்வரர் ஆலயம் உருவாக்கப்பட்ட மலையை ஆரம்பத்தில் குறித்த திருகோணமலை என்ற பெயர் பிற்காலத்தில் திருக்கோணேஸ்வரம் உருவாகிய இடத்தைக் குறிக்காது தொடங்கியது. இவற்றை திருஞான சம்பந்தருடைய திருகோணமலைப் பதிகம்,நிலவெளிக் கல்வெட்டு, குடுமியமலைக் கல்வெட்டு என்பன உறுதி செய்கின்றன. பேரரசன் ஜடாவர்மன் சுந்தரபாண்டியனுடன் துணையாட்சி செய்த ஜடாவர்மன் வீரபாண்டியன் (கி.பி. 1251-கி.பி 1281) இலங்கை மீது படையெடுத்து இலங்கை மண்ணைத் தோற்கடித்து திருகோணமலையில் பாண்டிய இலச்சினையான மீன் கொடியைப் பறக்கட்டும், இரு கயல்களை கல்லில் பொறித்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றான் என தென்னிந்தியா குடுமியாமலைச் சாசனம் கூறுகின்றது. குடுமியமலைச் சாசனம் ஜடாவர்மன் வீர பாண்டியனின் பதினோராம் ஆண்டு ஆட்சியில் ஆட்சியில் பொறிக்கப் பட்டதாகும்.

"அரசை கெழுதாயம் அடைய வாரி
கானா மன்னவர் கண்டு கண்டேங்க
கோணமாமலையிலும் திரிகூடக்கிரியிலும்
உருகெழு கொடிமிசை இருகயலெதி
ஏனை வேந்தனை ஆணை திறைகொண்டு"

இக் கல்வெட்டில் திருகோணமலை ... என்ற வசந்த தொடர் காணப்படுகிறது. மாங்கேணிக் கல்வெட்டு மற்றும் தட்சண கைலாச புராணம், கோணாசல புராணம் என்பனவும் திருக்கோணேஸ்வரத்தை மச்சகேசவரம் என்றே குறிப்பிடுகின்றது.(34)

## திருகோணமலைப் பத்திரகாளி அம்மன் கோயிற் கல்வெட்டு

திருகோணமலைப் பத்திரகாளி அம்மன் கோயிலில் முதலாம் இராஜேந்திர சோழன் காலக் கல்வெட்டுத் தூண் கட்டடத்துடன் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கிறது. இது 9அடி 2 அங்குலம் உயரமும் 9 அங்குல அகலமும் கொண்டது. ஐரோப்பிய காலனித்துவ அரசினால் தகர்க்கப்பட்ட வேறு ஒரு ஆலயத்தின் கற்தூணாகும். பிற்காலத்தில் பத்திரகாளி ஆலயம் கட்டப்பட்டபோது மேற்படித்தூண் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதில் எழுத்துக்கள் சீரான வடிவத்தில் அமையவில்லை. இந்தத் தூண் கோணேசராலயம் அல்லது மானாங்கேணி சிவாலயத்திற்குரியதாக இருக்க வேண்டும். இந்தக் கல்வெட்டுத் தூணின் ஒரு பகுதி பூச்சினால் மறைந்து போய் இருப்பதனால் இக் கல்வெட்டுக் குறித்த செய்தி முழுமையாக அறிய முடியாதுள்ளது. எனினும் மூன்று பக்கங்களில் காணப்பட்ட செய்திகள் வாசித்தறியப்பட்டுள்ளன. வாசிக்கப்பட்ட பகுதியிலிருந்து முக்கியமான வரலாற்றுத் தகவல்கள் கிடைக்கவில்லை. முதலாம் இராஜராஜனின் புகழ் போற்றப்பட்டுள்ளது. இந்த சாசனம் பொறிக்கப்பட்ட நோக்கம் தெரியவில்லை. கட்டடத்தில் மறைந்துள்ள பகுதியில் முக்கிய செய்திகள் இருக்கக்கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பக்கம் 1**

1. ஸ்வ ஸி ஸ்ரீ த
2. திருமன்னிவ
3. ளர இரு நில
4. மட(ந்தை)
5. யு(ம்) (பொ)ற்ச
6. யப் (பாவை)
7. (யு) ம் தன்
8. (பெருந் தெவி)
9. யாராகி இ
10. ன் (புற) நெ
11. டுத்தியல் ஊ
12. ழியுள் இட
13. (துறை) நா(டும்)
14. (தொடர்வந)
15. வெலிப் (படா்)
16. (வன) வாசி
17. யும் சுள்ளிச்
18. சூழ் மதில் கொ
19. ள்ளிப்பா
20. க்கையும்
21. நண்ண
22. ற் கரு முர
23. ண் மண்
24. ணைக்கட
25. க்கமும்
26. பொருகட
27. லீழத்த
28. ரைசா்தம்
29. முடியும்
30. அங்கவா்
31. தெவியா் ஓ
32. ங் கெழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. முடியும்
34. மன்னவர்
35. பக்கல் தெ
36. ந்நவர்
வைத்த

**பக்கம் 2**

1. சுந்தர
2. முடியும்
3. இந்திர
4. னரமு
5. ம் தெண்
6. டிரை ஈழ
7. மண்டல
8. முழுவது
9. ம் எறிப
10. டைக் கெர
11. ளன் முறை ம
12. யிற் சூடுங்
13. (குலதந) மா
14. கிய பல(ர்)
15. புகழ் மு
16. டியும்
17. செங்கதி
18. ர் மாலை
19. யும் சங்
20. கதிர் வெ
21. ளைத் தொ
22. ல் பெருங்கா
23. வற் பல்ப
24. ழந் தீவும்
25. செருவில் (சி)
26. னைவி இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. ப (த) தொரு) கா
28. ல் அரசை
29. (க) ளை கட்ட
30. பரசுராமன்
31. மெவரும்
32. சா (ந்) தி ம (த்)
33. தீவரண் க
34. ருதி ( இரு )
35. த்திய செ
ம் பொற்

**பக்கம் 3**

1. திருத்தகு
2. முடியும்
3. பய ( ங் ) கொடு
4. பழிமிக
5. முயங்
6. கியில்
7. முதுகி
8. ட்டு ஒ
9. ( ழித்த )
10. ஜ ( ய ) சி
11. ( ங் ) கன்
12. அளப்பரும்
13. புகமொ
14. டு பீடி
15. யல் இ
16. ர் ட்டபா
17. டி ஏழ
18. ரை இலக்
19. கமும் ந
20, வ ( ) நதிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. சூலப்பெ
22. ருமலை
23. களும்

24-37 வரையிலான வரிகள் சிதைந்துவிட்டன . (35)

பல இடங்களில் எழுத்துச் சிதைவுகள் காரணமாக முழுமையான கருத்தை பெற முடியவில்லை. இது முதலாம் ராஜேந்திரனின் புகழ் கூறும் சாசனமாகும். அவருடைய செலவை செழிப்பில் மங்கலம் பொலிக, நிகரற்ற புகழுடைய நிலா மடந்தையும், துர்க்கையும் அவர் துணையாகி இடுதுறை நாட்டு வனவாசிப் படைகளுடன் வெற்றி பெற்றான். அரசனின் இல்லம் சுள்ளி மரங்களால் வளர்க்கப்பட்டு எவராலும் முற்றுகையிட முடியாத கொள்ளிப்பாக்கை கோட்டையைக் கொண்டது. பட்டத்து இராணியின் கிரீடமானது சிறப்பு அழகுமிக்காது. சுந்தர (பாண்டியன்) கீரிடமும் இந்திராவின் முத்து மாலையும் பிராகாசிக்கும் கடல் சூழ் ஈழ மண்டல மன்னனுக்கு கையளிக்கப்பட்டது. கடலினால் பாதுகாப்பளிக்கப்பட்ட அரசனைச் சூரியனின் செங் கதிர் மாலையினால் போற்றப்பட்டது. பழந் தீவுகளுக்கு சங்கொலி கேட்கும் கடலே பாதுகாப்பாக இருந்தது ... என மேலும் தொடர்கிறது.

**மயிலாங்குளம் சாசனம்**

திருகோணமலை மாவட்டத்தில் கண்டறியப்பட்டுள்ள சாசனங்களில் மயிலாங்குளம் சாசனம் திரியாய்ப் பகுதிச்ச செய்திகளையும் வேளைக்காரப் படையினரது செயற்பாடுகளையும் தெரிவிக்கின்றது. இச்சாசனம் 7அது 2 அங்குலம் நீளமும் 1 அடி 6 அங்குலம் அகலமும் உடையது. இச்சாசனம் தமிழ் எழுத்துக்களில் பொறிக்கப்படுள்ள போதும் கிரந்த எழுத்துக்களும் காணப்படுகின்றன. ஜயபாகு என்பவனின் ஆட்சிக்கு காலத்தில் (கி.பி.1126) இச்சாசனம் பொறிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் மத்திய காலப் பகுதியில் மூன்று அரசர்கள் ஜயபாகு என்ற பெயருடன் ஆட்சி செய்தா போதிலும் முதலாம் விஜயபாகுவின் தம்பியும் விஜயபாகுவிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் ஆட்சியைப் பிடித்தவனுமாகிய முதலாம் ஐயபாகு என அடையாளம் காண்பது பொருத்தமானதாகும். சாசனத்தின் மூலம் அவனது 18வைத்து ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பட்டதாக அறியப்படுகின்றது. (36)

சாசனத்தின் வாசகம்

1. ஸ்ரீ அபைய ச
2. லா மெகச் ச
3. க்கர வர்த்திகள்
4. ஸ்ரீ ஐயபா தெ
5. வர்க்கு யாண்டு ப
6. தின் எட்டாவது தம்
7. மாற் ஜீவிதா முடைய
8. கணவதித் தண்டநாத
9. நார் உதுத்துறை விக்
10. கிரம சலமெகர் நால்
11. படையும் ஆ ஸ்ரீ
12. ந்து பெருமிட்டு விக் கிரம சாலா மெகன்
13. கிராம சலா மெகன்
14. பெரும்புள்ளி திரு வெ
ள்ளைக்காறர் அபையம்

சாசனத்தின் பொருள்

ஸ்ரீ அபைய சலாமக சக்கரவர்த்தி ஐயபாகு தேவவின் 18வது ஆட்சி ஆண்டில் வேளைக்காறப் படைத் தளபதி ஆயுள் குத்தகையாக நிலத்தைப் பெற்று உதுத்துறையிலிருந்து பௌத்த பள்ளியை நாற்படையின் பாதுகாப்புடன் பாதுகாத்தான்.

மேற்படி சாசனம் தரும் தகவலின்படி மூன்று விடயங்கள் தெரிய வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. திரியாய்ப் பகுதியில் உதுத்துறையில் பௌத்த பள்ளி தமிழ்ப் படைத்த தளபதியின் பாதுகாப்பில் இருந்திருக்கின்றது
2. இந்த நிகழ்வு சக்கரவர்த்தி ஜயபாகு தேவவின் காலத்தில் (கி.பி 1128) நிகழ்த்திருக்கிறது.
3. சோழருடைய ஆட்சி விலக்கப்பட்ட பின்னரும் திருகோணமலை மாவட்டத்தின் பாதுகாப்பு தமிழ்ப் படைகளிடமே (வேளைக்காறபி படை) இருந்திருக்கின்றது.

இச்சாசனத்தில் காணப்படும் செய்திகளின் வரலாற்றுப் பின்னணியை விபரமாகப் பார்க்க வேண்டும், மகாசேனன் காலத்தில் கோணேசராலயம் அளிக்கப்பட்டு பௌத்த பள்ளி அமைக்கப்பட்ட தகவலை மகாவம்சம் கூறுகின்றது. எனவே கிழக்கில் பௌத்த பள்ளிகள் உருவாக்கப்பட்டிருக்கிறது. பெரும் பள்ளி என்பது பௌத்த பள்ளிகளைக் குறிக்கும். வில்கம் விகாரை சோழர் காலத்தில் இராஜராஜ பெரும் பள்ளி என்றே அழைக்கப்பட்டது. எனவே சாசனத்தில் பெரும் பள்ளி எனக் குறிப்பது பௌத்த வழிபாட்டுத்தலமேயாகும், எனினும், ஏன் பௌத்த பள்ளிகளை சிங்கள மன்னர்களின் படைகள் பாதுகாக்க முடியாமல் போனது என்ற வினா எழுகிறது. இதே போன்று திருகோணமலை மாவட்டத்தில் கொட்டியாரம் உள்ளிட்ட பகுதிகள் வேளைக்காறப் படைத் தளபதிகளின் பாதுகாப்பிலேயே இருந்திருக்கின்றது. கணபதி என்ற வேளைக்காறப் படைத் தளபதியின் பாதுகாப்பில் பௌத்த பள்ளி பாதுகாக்கப் பட்டிருக்கிறது.

இது திரியாய்ப் பிரதேசத்தில் பௌத்த சிங்களவர்களின் அதிகார மேலாண்மை காணப்படவில்லை என்பதை உணர்த்துகின்றது. எனவே தான் பௌத்த பள்ளியின் பாதுகாப்பு சிங்கள மன்னருக்கு அச்சுறுத்தலாக இருந்தது. வேளைக்காறப் படை சிங்களப் படையிலும் பார்க்க மிகுந்த பலமாக இருந்திருக்கின்றது. சாசனத்தின் மூலம் வேளைக்காறப் படை நால்படையைக் கொண்டிருந்ததாக அறிய முடிகிறது. நால்படை என்பது நான்கு பிரிவு படை எனப் பொருள் கொள்ள வேண்டியதில்லை. தென்னாசிய மன்னர்களிடம் நால் வகைப் படையிருந்திருக்கின்றது. எனவே தேர், யானை, குதிரை,காலாற்படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடங்கிய படைத் தொகுதி தளபதி கணபதியின் கட்டுப்பாட்டின் கீழ் திரியாய் பகுதியில் இருந்திருக்கின்றது எனக் கருத முடிகிறது. சோழர்களை விஜயபாகு வெற்றி கொண்ட போதிலும் சோழர்களின் உருவாக்கப்பட்ட தென்னிந்திய ஆதிக்கத்தை இறுதிவரை முறியடிக்க முடியாமல் போய்விட்டது. தளபதி கணபதி இராணுவக் கடமைகளை மட்டுமல்லாது குடிசார் நிர்வாகத்தையும் கவனித்திருக்க வேண்டும்.

12ம் நூற்றாண்டின் வரலாற்று நிகழ்வுகளைக் கவனிக்கும் போது நிலமானிய அமைப்பின் தோற்றத்தை அவதானிக்க முடிகிறது. கணபதிக்கு ஆயுள் கால நிலா குத்தகை கொடுக்கபட்டதன் மூலம் தளபதி கணபதி நிலமானிய நிர்வாகஅமைப்பின் நிர்வாகியாகச் செயல்பட்டிருக்க வேண்டும். இதை கீழைத்தேச நிலமானிய சர்வாதிகாரத்தின் தோற்றக் காலமாக கொள்ளலாம்.இலங்கை வரலாற்றில் கி.பி.9ம் நூற்றாண்டை அடுத்து அநுராதபுரா கால அரசியலில் பல மாற்றங்கள் உருவாகின. அரச,பௌத்த மத நிறுவனங்களில் பணி புரியும் உயர் அதிகாரிகளுக்கு நிலங்களை வாழ்க்கை முழுவதற்கும் அனுபவிக்க வழங்கப்பட்டது.

இந்த நிலக் கொடையை திவெல் என அழைக்கப்பட்டது. இந்த முறையே நிலைமானியத்தின் தோற்றத்திற்கு வழிகோலியது. எனவே தளபதி கணபதிக்கும் திரியாய்ப் பிரதேச நிலங்கள் மானியமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது பொருத்தமானதாகும். நிலங்களில் இருந்து கிடைக்கப் பெரும் வருமானம் அரசாங்க அதிகாரிகளின் கைக்கு மாற்றமளிக்கும் நிலப் பகிரவுத் திட்டமானது எல்லைப்புற நிலத்தை மறைமுகமாக மைய அரசுடன் இணைக்க உதவியது. எனவே மத்திய அரசின் கட்டுப்பாடுகள் தளர்வு பெற்ற பிரதேசங்களின் நிலங்கள் நிலத்தானங்களில் பகிர்ந்தளிக்கப்பட்டன. இலங்கை மைய அரசு சோழர்களின் வருகையோடு கரையோரப் பகுதிகளின் கட்டுப்பாடுகளை இழந்திருந்தது.

இச்சாசனத்தில் வரும் சக்கரவர்த்திகள் என்ற பதம் சிங்கள அரச மரபில் தமிழகச் செல்வாக்கை எடுத்துக்காட்டுகிறது. சோழர் காலத்தில் தான் சக்கரவர்த்திகள் என்ற சொல்லின் பாவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பமாகிறது. இலங்கை வரலாற்றில் 12ம் நூற்றாண்டு காலப் பகுதிக்குரிய சாசனங்களில் சக்கரவர்த்திகள் என்ற சொல்லை காணக்கூடியதாக உள்ளது. சோழருடைய வருகைக்கு முன்பாக இலங்கைச் சாசனத்தில் சக்கரவர்த்தி என்ற சொல்லை சிங்கள மன்னர்கள் பயன்படுத்தவில்லை. புடுமுத்துவ தமிழக கல்வெட்டில் சக்கரவர்திகள் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. எனினும் பன்னிரெண்டாம் நூற்றாண்டுக்கு பின்னர் சக்கரவர்த்தி என்ற பட்டத்தை சூடியிருப்பதை அறிய முடிகிறது. மயிலாங்குளம் சாசனத்தில் கூறப்படும் உதுத்துறைப் பகுதி தற்காலத்தில் எந்த இடத்தைக் குறிக்கிறது என்பது தெளிவாகத் தெரியாத போதும் திரியாய் ஒரு சிறிய துறைமுகமாக விளங்கியிருப்பதால் உதுத்துறையும் திரியாய் பிரதேசத்தில் கடற்கரைப் பகுதியை நெருங்கி இருந்திருக்கலாம்.

மேற்குறிப்பிட்ட கல்வெட்டுகளைத் தவிர பதவியாவில் கண்டெடுக்கப்பட்ட சோழர்காலக் கல்வெட்டு அங்கு சோழர் அமைத்த படைத்தளங்கள், சிவாலயங்கள், அரண்கள் பற்றி தகவல்களைத் தருகின்றது. பத்தாம், பதினோராம் நூற்றாண்டுக்கு காலகட்டத்தில் பதவியா அரண்களும் சிவாலயங்களும் நிறைந்த பெரு நகராக இருந்திருக்கின்றது. இலங்கைத் தொல்பொருள் இலாகா பதவியால் ஐந்து சிவாலயங்களின் சிதைவுகளைக் கண்டுபிடித்துள்ளது. இரவிகுலமாணிக்க ஈஸ்வரம் என்ற புகழ்வாய்ந்த சோழர்காலச் சிவாலயம் இருந்ததாக அடையாளங் காணப்பட்டுள்ளது. இந்தச் சிவாலயத்திற்கு ஐவர் பேர் நாட்டிய அடிக்கல் விபரங்களும் கிடைத்துள்ளன. இவர்களில் நால்வர் வணிகர்கள். ஒருவர் நிர்வாக அதிகாரியாவார்.

**சோழர்காலத் திருக்கோணமலைச் சமூகப் பொருளாதார அமைப்பு.**

சோழர் ஆட்சி திருக்கோணமலையில் ஏற்படுவதற்கு முன்பாகவே திருக்கோணமலை ஒரு சிறந்த வணிகத் துறைமுகமாக விளங்கியது என்பதில் சந்தேகமில்லை. எனினும் சோழர் காலத்திலேயே சிறப்புநிலை பெறாத தொடங்கியது. தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகர்கள் வடவட மேற்கே கிரேக்கம் எகிப்து ஆகிய தேசங்களில் இருந்து தென் கிழக்கே சீனா வரை ஒரு நிலையான வணிகத் தொடர்பை வைத்திருந்தார்கள். எகிப்தில் கண்டறியப்பட்ட மட்பாண்டத்தில் கி.பி முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ் வணிகர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

திருக்கோணமலை மாவட்டத்தில் திரியாய், குச்சவெளி, கொட்டியாரம் இலங்கைத்துறை ஆகியன வணிகத் துறைமுகங்களாக விளங்கின.இலங்கையின் கிழக்கு கரையோரம் கி.பி 7ம் நூற்றாண்டில் சிறந்து விளங்கியிருந்ததை திரியாய் பாறைக்கல்வெட்டு கூறுகின்றது. ரசப்புக்க, வல்லிக என்னும் இரு வணிக அமைப்புகள் சிறந்து விளங்கியதாக மேற்படி கல்வெட்டு கூறுகின்றது.இந்த வணிக அமைப்பில் இருந்தவர்கள் கடலோடுவதில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்ததோடு பல தரப்பட்ட வணிக கடற்கலங்களை வைத்திருந்தார்கள் என அறியப்படுகிறது. கி.பி முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த தொலமியின் வரைபடத்தில் திரியாய் கிராமத்தை தலகோரி (வயடயமழசய ) என குறிப்பிடத்தக்க துறைமுகங்களில் திரியாய் இடம்பெற்றிருந்ததை தொலமியின் வரைபடம் உணர்த்துகின்றது.

சோழர் கால வணிக அமைப்புகளில் நானாதேசிகன், வலஞ்சியர், வீரக்கொடியர், நகரத்தார், செட்டிகள் போன்றோர் அடங்குவார்கள். இவ் வணிகக் கணங்கள் தங்கள் வணிக நடவடிக்கைக்காக சுயாட்சிப் பட்டினங்களை உருவாக்கினார்கள். சோழர் கால ஆட்சியில் வணிகள் கணங்கள் முக்கியம் பெற்றிருந்ததால் தமது கடல் வணிகத்திற்காக கடல் படையை வைத்திருந்தார்கள். இவை தவிர திருக்கோணமலை கரையோரப் பட்டிணங்கள் சோழர்களின் வணிகத் துறைமுகங்களாக விளங்கியிருந்தன. சோழர் கால வணிகர்கள் தமது கடல் மற்றும் தரைவழிப் போக்குவரத்துக்காக இராணுவப் பிரிவுகளையும் உருவாக்கியிருந்தனர். திருக்கோணமலை, கந்தளாய், பதவியா ஆகிய பெரும் நகரங்களை இணைக்கும் முக்கோணப் பிரதேசம் சோழருடைய பெரும் ஆதிக்கத்தின் கீழ் காணப்பட்டதால் இப்பகுதி வணிகத்திலும் மேலோங்கி இருந்ததாகக் கொள்ள முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவியாவில் கிடைத்த முதலாம் இராஜராஜனின் கல்வெட்டில் 'சங்கர மனுதன்' என்ற சொல் காணப்படுகிறது. சங்கரம் என்பது பெரும் கப்பல் எனப் பொருள்படும். சங்கர மனுதன் என்பது கப்பல் உரிமையாளனை அல்லது கப்பல் தலைவனைக் குறிக்கின்றது.எனவே பெருங்கப்பல்கள் சோழ வணிகத்தில் ஈடுபட்டதை அறிய முடிகின்றது. மேலும் சோழர் கால வணிகர்கள் மகாவலி நதி வழியாக சங்கடம் என அழைக்கப் பட்ட படகுகள் மூலம் பொலநறுவைக்கும் திருக்கோணமலைக்கும் இடையில் வணிகப் பொருட்களை நகர்த்தினார்கள். சங்கடம் நன்னீர்ப் போக்குவரத்திற்கு பயன்பட்டது. இவை தவிர வங்கம் என அழைக்கப்பட்ட வணிகப் படகுகள் வெளிநாட்டு வணிகத்திற்கு பயன்பட்டது. முல்லைத்தீவில் கிடைக்கப்பெற்ற இலட்சுமி நாணயங்கள் மேற்படி வணிக நடவடிக்கைகளை உறுதி செய்கின்றது.எனவே சோழர்களின் எழுச்சிக் காலத்திற்கு முன்பாகவே திருக்கோணமலை மாவட்டம் வெளிநாட்டு வணிகர்களுடன் தொடர்பு கொண்டிருந்த காரணத்தால் சோழர்காலத்தில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சிக்கு சாதகமான ஒரு தளமாக விளங்கியது.

சோழர் சமூகத்தில் விவசாயம், கைத்தொழில், வணிகம் என்பன நடைபெற்ற போதிலும் விவசாயமே ஆதிக்கம் செலுத்தியது. விவசாயத்தின் வளர்ச்சியை ஒட்டியே கைத்தொழில் வளர்ச்சியும் வணிக வளர்ச்சியும் அமைந்தன. ஒரு சமூகம் உற்பத்தியில் ஈடுபடும் பொது உற்பத்தியாளர்களுக்கிடையில் உற்பத்தி உறவு ஏற்படுகிறது. இந்த உறவே சமூகப் பொருளாதார உறவுமுறையை தீர்மானிக்கின்றது. 10ம் நூற்றாண்டு காலத் திருக்கோணமலையின் பொருளாதாரத்தில் வேளாண்மை அடிப்படையாக விளங்கியது. வேளாண்மைக்கு துணையாகத் தச்சுத் தொழில் என்பனவும் வளர்ச்சி பெற்றன.இதனால் வேளாண்மைத் துறை சார்ந்த பொருட்களையும் கைத்தொழிற் பொருட்களையும் மக்களிடையே பரிமாற்றம் செய்வதற்கு வணிகர் சமூகம் உருவாகியிருந்தது. உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோர்களுக்குமிடையே தரகர்களாக உருவாகிய வணிகர்கள் காலப்போக்கில் உற்பத்தியைத் தீர்மானிக்கின்ற ஒரு முக்கிய அலகாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கினார்கள். இந்த வணிகர் சமூகம் உள்நாட்டு வணிகர் (சுதேசி வணிகர்), அயல் நாட்டு வணிகர் (பரதேசி வணிகர்), பன் நாட்டு வணிகர் (நானாதேசி வணிகர்), என மூன்று பிரிவுகளாக காணப்பட்டனர். சோழர்கள் திருகோணமலை துறைமுகத்தை மையமாகக் கொண்ட பன்னாட்டு வணிகத்தைச் செய்திருக்கின்றார்கள். இலங்கையின் ஆரம்ப வரலாற்றில் மாதோட்டம், திருகோணமலை ஆகியனவே பெருந் துறைமுகங்களாக விளங்கின.

சுந்தரமூர்த்தி நாயனார் பத்து தேவாரங்களில் எட்டு இடங்களில் மாதோட்ட நன்னகர் எனக் குறிப்பிட்டதன் மூலம் மாதோட்டம் ஒரு சிறந்த துறைமுகமாக மட்டுமல்ல ஒரு பெரிய துறைமுகப் பட்டினமாகவும் விளங்கியிருந்ததை அறிய முடிகின்றது. எனினும் காலப் போக்கில் துறைமுகம் மணற் திடராகப் போய்விட்டது. தென்னிந்திய கரையோரத்தை நெருங்கி மாதோட்டம் காணப்பட்டதால் தென்னிந்திய வணிகர்களின் கப்பல்கள் மாதோட்டம் வந்து சென்றிருக்கின்றன. மன்னார் வளைகுடாப் பகுதி முத்து, சங்கு குளிக்கும் பகுதியாக காணப்பட்டதால் தென்னிந்திய வணிகர்களின் கவனத்ததை அதிகளவு ஈர்த்திருந்தது. முத்துக் குளிக்குமிடம் சல்லாபம் என அழைக்கப்பட்டது. சல்லாபம் என்ற சொல்லின் மருவலே சிலாபம் ஆகும். ஆனால் திருகோணமலைத் துறைமுகம் குறிப்பாக தென்னாசிய வணிகத்ததிற்கும் மேற்காசிய வணிகத்திற்கும் ஒரு மையமாக இருந்திருக்கின்றது. சோழர்களின் திருகோணமலைப் படையெடுப்பு தென்னாசிய வணிகத்தில் தமது நிலையை மேம்படுத்தவே நடத்தப்பட்டது . 8ம், 9ம் நூற்றாண்டில் யாவா, சுமத்திரா, இந்தோனேசியா என்பன உள்ளடக்கிய தென் கிழக்காசியப் பகுதி பன்னாட்டு வணிகத்தில் அதிக ஆதிக்கத்தைக் கொண்டிருந்த காரணத்தால், இந்த நாடுகள் கடலாதிக்க பேரரசாக உருவெடுக்க ஆரம்பித்தன. இத்தகைய ஆதிக்கம் சோழரின் கடலாதிக்க விரிவாக்கத்திற்கு தடையாக இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.எனவே திருகோணமலைத் துறைமுகம் ஊடாக நடைபெறும் அயல்நாட்டு வணிகர்களை முதலில் கட்டுப்படுத்த வேண்டிய தேவை சோழர்களுக்கு ஏற்பத்தது. அதன் விளைவுதான் திருகோணமலையை சோழர்கள் கைப்பற்றத் தூண்டியது. இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிலிருந்தே தென் கிழக்காசியாத் தாக்குதல்களை சோழர்கள் ஆரம்பித்திருக்கின்றார்கள். சுமத்தியா, யாவா ஆகிய நாடுகளின் துறைமுக நகரங்கள் சோழரால் தாக்கப்பட்டதால் சீனாவின் வணிகம் பாதிப்படைந்தது. தமிழ் படையினரின் அச்சம் காரணமாக சீனத்து கன்றான் துறைமுகத்திற்கு எண்ணிக்கையில் குறைந்த வணிகள் கப்பல்களே சென்றிருக்கின்றன. தமிழர் படைகளினால் அச்சமடைந்த வணிகர்களை மீண்டும் சீனாவுக்கு வரத் தூண்டுமாறு சீன தேசத்தை கி.பி 1028ம் ஆண்டு காலப் பகுதியில் ஆட்சி செய்த மன்னர் சூங் வரி சேகரிப்பாளருக்கு உத்தரவிட்டான்.

திருகோணமலையில் நடைபெற்ற சோழர் காலக் குடியேற்றங்களில் வேலைக்காறாப் படையினரும் உள்ளடங்குவார்கள். வேலைக்காறாப் படையினர் என அழைக்கப்பட்டவர்கள் பகுதி நேர போர் வீரர்களாக இருந்தார்கள். வணிகர்கள் கடற்கொள்ளையைத் தடுப்பதற்காக சிறு கடற்படைகளைக் கொண்டிருந்தனர். வளஞ்சியர் சேனாதிபதி, நாநாதேசி தண்டநாயகன் தலைமையில் வணிகர்களுக்கான படைகள் காணப்பட்டன. தண்டநாயகன் என்பது படை தளபதியாக குறிக்கும். பொதுவாக வன்னியர்களே கடல் வணிகர்களின் வேலைக்காறாப் படையில் போர் வீரர்களாக இருந்திருக்கின்றார்கள். வேலைக்காறாப் படையின் பெரிய தலமாக திரியாய், கந்தளாய், கொட்டியாரம் என்பன இருந்திருக்கின்றன.

உழுகுடிகள் என அழைக்கப்பட்ட விவசாயிகள் குடிமை என்ற வரியையும், நீர் வரியையும் செலுத்தியிருப்பதற்கு கந்தளாய் சிவன் கோயில் கல்வெட்டு சான்றாக உள்ளது. மணி என்று அழைக்கப்பட்ட வரி சேகரிக்கும் பிராமணன் குறித்த ஒரு தகவலும் கந்தளாய்க் கல்வெட்டில் கூறப்பட்டிருக்கின்றது. வேளாண்மைத்துறை சாரா உற்பத்திகள் குறித்த அதிக தகவல் கிடைக்காத போதும், மட்பாத்திரங்கள், தச்சுத் தொழில், கருமான் தொழில், உப்பு, துணி, எண்ணை போன்ற தொழில்கள் காணப்பட்டன. ஆலயங்கள், குளங்கள் போன்ற கட்டுமானப் பணிகள் நடைபெற்றிருப்பதால் செங்கல், கருங்கல் போன்றவற்றுடன் தொடர்பான தொழித்துறைகளும் காணப்பட்டிருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலைச் சமூகத்தில் சாதியம் வலிமை பெற்றிருந்தது. தொழில்கள் சாதிகளின் அடிப்படையில் பிரிக்கப்பட்டிருந்தன. சாதியக் கட்டுப்பாட்டை மீறுவது பொதுச் சமூக நீதியை மீறுவது போன்று கணிக்கப்பட்டது. தென்னிந்திய சமூக அமைப்பே ஈழத்தின் தமிழ் பிரதேசங்களில் காணப்பட்டது. ஈழத்தின் மீது ஆதிக்கம் செலுத்திய தென்னிந்திய ஆட்சியாலாளர்கள் தமது சொந்தப் பண்பாட்டையே வளர்க்க முற்பட்டதும் ஒரு காரணமாகக் கொள்ளலாம். நிலவுடைமையாளர்களான பிராமணர்களும், வேளாளர்களும் சமூகத்தில் உயர்ந்து காணப்பட்டனர். இந்தச் சாதிய அமைப்பானது உயர் மட்டத்திலிருந்த சமூகப் பிரிவினர் ஏனைய சமூகங்களின் மீதும் நேரடிக் கட்டுப்பாட்டை உருவாக்க உதவியது. வேளாளர் சமூகத்தாய் வேளீர் , வேளான் எனவும் அழைக்கப்பட்டது.வேளாள சமூகத்தில் நிலவுடைமையாளர்கள், நிலமற்றவர்கள் என இரு பிரிவினர் காணப்பட்டனர். நிலைச் சுவாந்தர்களாக விளங்கிய வேளாளர்கள் கிழான், தேவன், உடையான் என் அழைக்கப்பட்டனர்.

இவர்கள் பொருளியல் மேம்பாட்டால் உயர் பதவிகளை வகித்தார்கள். மற்றும் ஒரு பிரிவினர் சாலியர் எனவும் அழைக்கப்பட்டனர். சாலி என்ற தமிழ்ச் சொல்லானது நெல்லைக் குறிப்பதாகும். வேளாளரில் உழு தொழிலில் ஈடுபட்ட பிரிவினர் சித்திர மேழியர் எனவும் அழைக்கப்பட்டனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் சித்திரமேழி என்ற சிற்றூர் உள்ளது.

சாதிகளின் அடிப்படையில் தொழில்கள் அமைந்ததனால் தொழில்கள் குலத் தொழில்களாக கருதப்பட்டன. சாதிய ஒழுங்கு நிரலில் ஆதி மட்டத்தைச் சார்ந்தவர்கள் பல தரப்பட்ட தொழில்களைச் செய்தார்கள். சாதி ஒழுங்கு நிரலில் அடிமட்டத்தைச் சேர்ந்தவர்கள் குடிமக்களாகக் கருதப்பட்டனர். இவர்களைக் குடிகள் என அழைக்கப்பட்டது. குடிகளின் ஒரு பிரிவினர் சாய வேர் செடியின் வேர்களை பதனிட்டு சாயம் போடுதல் போன்ற தொழில்களையும் செய்தார்கள். குடிமக்கள் பிராமணர்களுக்கும் வேளாளர்களுக்கும் தொழும்பு செய்ய வேண்டியிருந்தது. உயர் குடியினரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் நடைபெற்ற சடங்குகளிலும், மதக் கிரியைகளில் செய்யப்படல் வேண்டிய தூலும்புகள் வரையறை செய்யப்பட்டிருந்தது. உயர் குடியினரின் தொழிலிலும் குடிகள் என அழைக்கப்பட்ட சமூகத்தினர் பங்கெடுக்க வேண்டியிருந்தது. குடிகளுக்கான ஊதியம் தானியமாகவும், குத்தகை நிலங்களாகவும் வழங்கப்பட்டன. இவை தவிர அடிமை முறை காணப்பட்டதற்கான சான்றுகள் திருகோணமலையின் பிற்பட்ட கால வரலாற்றில் பதிவு செய்யப்பட்டிருப்பதால் சோழர்காலச் சமூகத்திலும் இருந்திருக்கிறது என்பதையும் ஏற்கலாம். சோழர்கள் இலங்கையில் இருந்து பல லட்சம் மக்களையும், போரில் தோல்வியடைந்த சிங்கள படையினரையும் அடிமைகளாகக் கொண்டு சென்றிருக்கிறார்கள். இதைச் சோழர்களின் தமிழக கல்வெட்டுகள் தெரியப்படுத்துகின்றன.

**சோழராட்சியின் விளைவு**

திருகோணமலை வரலாற்றில் மட்டுமல்ல, இலங்கை வரலாற்றில் ஒரு மிக முக்கியமான திருப்பு முனையாக சோழரின் இலங்கைப் படையெடுப்பை குறிப்பிடலாம். இலங்கையின் ஆரம்பகால வரலாற்றில் தமிழக அரசுகள் ஒரு தொடர்ச்சியான அழுத்தத்தை கொண்டிருந்தன. இலங்கையின் அரசியற் போக்குகள் தமிழகப் படையெடுப்பால் மாற்றம் பெற்றன. இதனால் தான் இலங்கை வரலாற்றாசிரியர் மெண்டிஸ் கி.பி. 1505 வரையிலான இலங்கை வரலாற்றுப் பகுதியை தென்னிந்திய வரலாற்றுக்கு காலம் என அழைத்தார் தமிழக - திருகோணமலை வரலாறுகளைப் பொறுத்த வரை சோழர் காலம் மிக முக்கியமானதாகும். தமிழகத்திற் பல்லவ வம்சத்தின் ஆட்சி ஒடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, எழுச்சி பெற்ற சோழ ஆட்சியாளர்கள் சேரர், பாண்டியர்களையும், ஒரு நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்ததோடு பெரும் எழுச்சி பெற்றனர். சோழர் தங்கள் தரைப்படையைக் நோக்கியும், கடற்படையையும் ஈழம் நோக்கி நகர்த்தினார். சோழரின் ஆட்சி விரிவாக்கத்திற்கு திருகோணமலைத் துறைமுகம் முதற் தேவையாக இருந்த காரணத்தால் திருகோணமலை மாவட்டத்தில் தமது ஆதிக்கத்தை வலுப்படுத்திக் கொண்டார்கள். சோழர்கள் ஏற்படுத்திய பண்பாட்டு ஆதிக்கம் இந்து மத, தமிழ் மொழி உள்ளடக்கத்தினைக் கொண்டதாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1505 இல் இலங்கைக்கு போர்த்துக்கீசர் வரும் வரையிலான இலங்கையின் ஆரம்பகால வரலாற்றுப் பகுதியில் தமிழக அரசுகள் அதிக தாக்கங்களை உருவாகின. கி.பி 1070இல் முதலாவது விஜயபாகு சோழராட்சியை நீக்கும் வரை சோழருடைய ஆதிக்கம் இலங்கை முழுவதும் ஆழமாக வேஷரூன்றியிருந்தது. முதலாம் விஜயபாகுவினால் சோழருடைய ஆட்சியை இலங்கையில் முடிவுக்கு கொண்டு வந்த போதிலும், சோழர்களினால் உருவாக்கப்பட்ட இந்தக் கோயில்கள், பிராம்மணக் குடியிருப்புகள், தமிழ் அதிகாரிகளின் செல்வாக்கு என்பன முன்பு போலவே தொடர்ந்தும் காணப்பட்டன. தமிழக வணிகர்கள், படை அதிகாரிகள், கலைஞர்கள் ஆகியோர் கொண்டிருந்த ஆதிக்கம் திருகோணமலை வரலாற்றில் சிங்கள ஆட்சியாளர்களின் செல்வாக்கைத் தடுத்து நிறுத்தியது. கி.பி மூன்றாம் நூற்றாண்டில் மகாசேனன் திருக்கோணேஸ்வரம் உட்பட பல தேவாலயங்களை அளித்தான் என சூளவம்சம் கூறுகின்றது. சூளவம்சம் சோழருடைய படையெடுப்பை ஒரு கொள்ளையடிப்பாகவே கருதுகின்றது. சூளவம்சம் சோழரின் ஈழப் படியெடுப்பை பின் வருமாறு வர்ணிக்கிறது.

"இலங்கை முழுவதிலும் பௌத்த சங்கத்தில் முப்பிரிவுகளுக்கும் சொந்தமான புனிதத் சின்னங்கள் இருந்த அறைகள் சூறையாடப்பட்டு அழிக்கப்பட்டன. பரவலாகப் பல பௌத்த விகாரைகள் அழிக்கப்பட்டு இரத்தத்தை உறுஞ்சும் இராட்சதர்கள் போல ஈழத்தின் பொக்கிசங்கள் அனைத்தையும் எடுத்துச் சென்றனர்."

சோழரின் படையெடுப்பு பற்றி சூளவம்சத்தின் மதிப்பீடு மிகைப்படுத்தப்பட்டதொன்றாகும். சோழப் படையெடுப்புக்கு முன்னர் திருகோணமலையில் காணப்பட்ட விளக்கம் விகாரை இராஜராஜப் பெரும்புள்ளி என்ற பெயருடன் சோழரினால் ஆதரிக்கப்பட்டதை கல்வெட்டுகள் கூறுகின்றன. (39) இலங்கையில் மாத்திரமல்ல தமிழகத்திலும் இராஜ ராஜசோழன் பௌத்த விகாரையை ஆதரித்தான் என கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன. இங்கிருந்து கிடைக்கப்பட்ட பௌத்த வெண்கலப் படிமங்கள் தென்னிந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகபட்டின பாணியில் காணப்படுகின்றது. இராஜராஜசோழன் நாகப்பட்டினத்தில் இருக்கும் பௌத்த விகாரைக்கு "இராசராசப் பெரும்புள்ளி" என்று தன் பெயரை வைப்பதற்கு அனுமதி அளித்து ஆணை மங்கலம் என்னும் ஊரையும் பள்ளிச்சந்தமாக வழங்கினார். எனவே சூளவம்சம் கூறுவது போல சோழர்கள் பௌத்த மதத்தை அழித்தார்கள் என்று கூற்று மிகைப்படுத்தப்பட்ட தொன்றாக ஏற்க முடிகின்றது.

சோழர் ஆட்சியே திருகோணமலையில் சிற்ப வளர்ப்புக்கு கலை உருவாகக் காரணமாக அமைந்தது. சோழர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட, சிற்ப, சிற்ப வளர்ப்பு கலை என்பன இந்து மதத்தை மாத்திரமல்ல, பௌத்த மதத்திற்கும் வளம் சேர்த்தது. நாகபட்டின பௌத்த வெண்கலப் படிம மரபுகளையொத்த வெண்கலப் படிமங்கள் திருகோணமலை மாவட்டத்திலிருந்தும் பொலநறுவை மாவட்டத்திலிருந்தும் மீட்டெடுக்கப்பட்டுள்ளன. சைவ வைணவ, பௌத்த அவலோகிதீஸ்வர வெண்கலப் படிமங்கள் வார்க்கப்பட்டன. திருகோணமலைப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட காலத்தால் முதிர்ந்த பத்தினித் தெய்வம் பிரித்தானிய அருங்காட்சியகத்தில் உள்ளது. இவ்வுருவத்தினைப் போல அழகிய உடலமைப்பைக் கொண்ட சிலை இலங்கையில் இதுவரை எங்கும் கண்டு பிடிக்கப்படவில்லை(40) தம்பலகாமம், கந்தளாய் ஆகிய இடங்களில் கண்டறியப்பட்ட சிற்பங்கள் சோழருடைய சிற்பக் கலையை நினைவுபடுத்துகின்றன.

கி.பி 3ம் நூற்றாண்டில் மகாசேனன் கோணேஸ்வரத்தை அழித்த பின்னர் சோழரின் ஆட்சியினால் மீண்டும் திருகோணமலை மாவட்டத்தில் இந்துமதம் எழுச்சி பெற்றது. சதுர்வேதி மங்கலத்திற்கு ஊடாக இந்து அறநெறி தொடர்ந்து வளர வாய்ப்பேற்பட்டது. முதலாம் விஜயபாகு சோழராட்சியை இலங்கையிலிருந்து நிக்கி அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட பின்னரும் தமிழக ஆட்சியாளர்களின் வெறுப்பிற்கு அஞ்சியிருக்கக் கூடும். விஜயபாகு கந்தளாயில் இருந்த பிராமணக் குடியேற்றத்துக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்வது புத்திசாலித்தனமல்ல என உணர்ந்திருக்க வேண்டும். உதாரணமாக இராஜராஜனால் உருவாக்கப்பட்ட இராஜராஜ சதுர்வேதி மங்கலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அழைக்கப்பட்ட கந்தளாய் பிராமணக் குடியிருப்பு விஜயராஜச் சதுர்வேதி மங்கலம் எனப் பெயர் மாற்றப்பட்டு விஜயபாகுவினால் ஆதரிக்கப்பட்டது. விஜயராஜ சதுர்வேதி மங்கலம் குறித்து செய்தி விஜயபாகுவின் நாற்பத்திரண்டாம் ஆண்டு காலக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. எனவே விஜயபாகு தனது நீண்ட ஆட்சிக்காலப்பகுதியில் திருகோணமலையில் காணப்பட்ட பிராமணக் குடியிருப்புக்களை ஆதரித்தான் எனக் கொள்ளலாம். சோழரின் நடைமுறைகளைத் தொடர்ந்து பின்பற்றியவர்களாகவே சோழருக்குப் பின்னர் பொலநறுவையில் ஆட்சி செய்த விஜயபாகு, பராக்கிரமபாகு போன்ற மன்னர்கள் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். சோழருக்குப் பின்னர் முதலாம் விஜயபாகு, பராக்கிரமபாகு போன்ற வலிமையுடைய மன்னர்களின் ஆட்சி வடபகுதி நிலையிற் குறிப்பிடத்தக்க மாற்றத்தினைக் கொண்டு வரவில்லை. இரு மன்னர்களும் வலிமையுடையவர்களாகக் காணப்பட்டாலும் பல பிரச்சினைகளை எதிர் நோக்கியவர்களாகவே இயங்க வேண்டியிருந்தது.

விஜயபாகுவின் நாற்பது ஆண்டு கால ஆட்சி பொலநறுவையிற் சிங்கள அரசரின் ஆட்சியை மறுபடியும் புனரமைப்பதிலேயே செலவிடப்பட்டது. எனலாம். தமிழ், இந்து நலன்களுக்கு எதிரான நடவடிக்கைகள் சோழரின் தலையீட்டுக்கு வழிவகுக்கும் என்ற அச்சம் விஜயபாகுவிற்கு இருந்தது. நியாயமானதே. முதலாம் விஜயபாகுவின் ஆட்சிக் காலத்தில் அரசியலிலும், நிர்வாகத்துறைகளிலும் தமிழ்மொழி தனித்துவமான இடத்தினைப் பெற்றிருந்தது. விஜயபாகுவின் ஆட்சிக் காலத்தில் பணியாற்றிய தமிழ்ப் பணியாளர்கள் பற்றிய பெயர்கள் தனித்துவமாக ஒரு நூலில் பதிவு செய்யப்பட்டிருந்தது. இதிலிருந்து விஜயபாகுவின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மொழிக்கென ஒரு தனியான இலாகா இருந்திருக்க வேண்டும். என உணர முடிகின்றது.

கொட்டியாரப் பகுதியில் நிலை கொண்டிருந்த வேளைக்காறப் படை பல சந்தர்ப்பங்களில் கிளர்ச்சியில் ஈடுபட்டன. விஜயபாகுவின் நாற்பது ஆண்டு கால ஆட்சிக்குப் பின்னர் வாரிசுரிமை காரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நெருக்கடிகள் உருவாகின. எனவே விஜயபாகுவைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்தவர்களும் இலங்கையில் நிலை கொண்டிருந்த தமிழகப் படைகளில் தங்கியிருக்க வேண்டிய தேவை உருவாகியது. விஜயபாகுவின் மகனான விக்கிரமபாகு (1111-1132) பற்றிய சூளவம்சத்தின் கருத்து மிக முக்கியமானதாகும். விக்கிரமபாகு பௌத்த சங்கத்தினரின் உறைவிடங்களான பௌத்த விகாரைகளை வெளிநாட்டவரின் உறைவிடங்களாக மாற்றினான் என சூளவம்சம் குற்றஞ்சாட்டுகின்றது. விஜயபாகுவிற்கு பின்னர் ஆட்சி பீடம் ஏறிய வலிமை வாய்ந்த பராக்கிரமபாகுவும் அதிக மாற்றத்தைக் கொண்டுவர விரும்பவில்லை.

சோழர் ஆட்சியில் காணப்பட்ட இராணுவப் பிரிவுகளான எறிவீரர், முனைவீரர், இளஞ்சிங்க வீரர் என்பவர்கள் சோழருடைய வீழ்ச்சிக்குப் பின்னரும் இலங்கையில் தங்கியிருந்தார்கள். சிங்கள ஆட்சியாளர்கள் அனுராதபுர ஆட்சிக் காலத்தில் அரசுரிமைப் போருக் காகத் தமிழகம் சென்று படை உதவி பெறுவது வழக்கமாக இருந்தது. எனினும் பொலநறுவை ஆட்சிக் காலத்தில் சிங்கள அரசர்கள் தமிழக ஆட்சியாளரின் உதவியைப் பெற வேண்டிய தேவையை இங்கிருந்த தமிழகப் படைகள் பூர்த்தி செய்தன. எனவே சோழர்களை வெளியேற்றினாலும் சோழர்களினால் கொண்டு வரப்பட்ட தமிழகப் படையில் சிங்கள ஆட்சியாளர் தங்கியிருக்க வேண்டிய தேவை தவிர்க்க முடியாமற் போனது. சோழர்களினால் கொண்டு வரப்பட்ட வேளைக்காறப் படைப் பிரிவுகளில் ஒன்று கொட்டியாரத்தில் தொடர்ந்தும் நிலை கொண்டிருந்தது. இவர்களில் கணிசமான தொகையினர் திருகோணமலையில் தொடர்ந்து தங்கியிருந்த வணிகர்களின் பாதுகாவர்களாகப் பணி செய்தனர் சோழர் இலங்கையை விட்டு வெளியேறினாலும் திருகோணமலை உட்பட தமிழர்கள் வாழ்ந்த பகுதிகளில் சிங்கள அரசர்களினால் பெரு மாற்றத்தைக் கொண்டு வர முடியாமல் போனதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் தங்கியிருந்த வேளைக்காறப் படை சிங்கள அரசிலும் முக்கியத்துவம் பெற்றுக்காணப்பட்டது. இலங்கையில் தங்கியிருந்த வேளைக்காறப் படையினர் அரச பௌத்த உடமைகளை மாத்திரமல்ல, வணிகர்களினது மெய்பாதுகாவர்களாகவும் காணப்பட்டனர். அது மட்டுமின்றி பொலநறுவையிற் காணப்பட்ட சிங்கள அரசின் அரச சின்னமான தந்ததாது விகாரையைப் பாதுகாக்கும் பணியும் வேளைக்காறப் பிரிவிடமே ஒப்படைக்கப் பட்டிருந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. பதவியா, விகாரகின்ன ஆகிய இடங்களில் கிடைத்த கல்வெட்டுகளின் மூலம் இலங்கைப் பெரும் படை என்ற ஒரு தமிழக இராணுவப் பிரிவு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டதாக அறிய முடிகின்றது. இந்த இராணுவப் பிரிவில் தமிழர் மாத்திரமல்லாது மலையாளிகளும், தெலுங்கர்களும் காணப்பட்டார்கள். சோழர்களினால் இலங்கை வரலாற்றில் மிகக நீண்ட காலம் தலைநகராக இருந்த அனுராதபுரம் அழிக்கப்பட்டு பொலநறுவை தலை நகராக்கப்பட்டதன் பின்னர் மகாவலி நதி வழிப் பாதை மூலம் திருகோணமலைத் துறைமுகம் தொடர்புபடுத்தப்பட்டது. ஈழத்தில் உள்ள சோழக் கல்வெட்டுக்களையும் சோழ மன்னர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் அவதானிக்கின்ற போதும் பொலநறுவை அரசின் அரசியல், பொருளாதாரக் கலாச்சார வரலாற்றில் சோழராட்சி பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியதை உணர முடிகின்றது. அநுராதபுர மன்னர் காலத்தில் ஒரு படைத்தளமாகக் கருதப்பட்ட பொலநறுவை ஜனநாத மங்கலம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டதோடு கலிங்க மாகனின் (கி.பி. 1255) ஆட்சி வீழ்ச்சியடையும் வரை தலைநகராகவும் விளங்கியது.

சோழராட்சியில் பெருமளவில் தமிழர்கள் தென்னிந்தியாவிலிருந்து வந்து குடியேறியதனால் தென்னிந்தியப் பண்பாடு, தமிழ், இந்து மதம் என்பன திருகோணமலையில் மேன்மையடையக் காரணமாகியது. தமிழகத்திலிருந்து திருகோணமலையில் வந்து குடியேறிய தமிழர்களிற் படை வீரர்கள், பிராமணர்கள், வணிகர்கள், கலைஞர்கள், நிர்வாகிகள் அடங்கியிருந்தார்கள், எனவே தான் திருகோணமலை வரலாற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழர்கால பிராமணக் குடியிருப்பான சதுர்வேதி மங்கலம், சோழர்களின் நிர்வாகம் என்பன தமிழகப் பண்பாட்டையும் மரபுகளையும் உருவாக்கக் காரணமாக அமைந்தது. வரலாற்றாசிரியர் கிங்ஸ்லி டி சில்வா கூறுகையில் "சோழராட்சியின் தவிர்க்க முடியாத தாக்கம் என்னவெனில் ஈழத்தின் மதத்துறையிலும் பண்பாட்டுத்துறையிலும் இந்துப் பிராமண மரபுகளும், வழமைகளும், திராவிடக் கட்டடக்கலையும், தமிழ்மொழியும் ஊடுருவி மிகப் பலமாக வளர்ச்சி பெற்றதேயாகும்"என்றார்(41)

நிலஅளவை முறை, சுங்கவரி, நிலவரி, ஆலய மானிய போன்ற தமிழகத்தில் வழமையில் இருந்த நிர்வாகமுறை திருகோண மலையில் அறிமுகமானது, சோழரினால் அறிமுகப்படுத்தப்பட்ட நிர்வாக முறை சோழருக்குப் பின்னரும் திருகோணமலைலயில் தொடர்ந்தது. திருகோணமலையில் தமிழ் மக்கள் நிலமானிய அமைப்பு முறையிலான ஒரு சமூக அமைப்பு சோழராட்சியில் உருவாகத் தொடங்கியது. அதிகாரி, அல்லது அதிகார் அல்லது அதிகாரம் என்ற நிலத்தோடு தொடர்புடைய பதவிப் பெயரைக் கொண்ட சிறப்பு வாய்ந்த சோழ நிர்வாகிகள் நிலச்சுவாந்தராக மாற்றமடைந்து காலனித்துவ ஆட்சிக் காலத்தில் முதலியார், உடையார், மணியகாரர் என உருவாகுவதற்கு சோழர் கால நிலமானிய முறையே காரணமாக இருந்தது.

இலங்கை நிலப்பரப்பு முழுவதும் காலனித்துவ ஆட்சியாளர்களின் கட்டுப்பாட்டுக்குள் வருவதற்கு முன்பு இலங்கை வரலாற்றின் போக்குகளைத் தமிழக ஆட்சியாளர்களே தீர்மானித்திருக்கின்றார்கள் இலங்கை மீதான படையெடுப்புக்களுக்குத் தமிழக அரசின் பொருளாதாரக் கொள்கைகள் மட்டுமல்ல ஆட்சி விரிவாக்கக் கொள்கைகளும் காரணமாக இருந்திருக்கின்றது. தமிழக அரசுகளின் எழுச்சி இலங்கையில் தமிழர் பண்பாட்டையும், இந்து மதத்தையும் பாதுகாத்துக் கொண்டது போலவே பௌத்தப் பண்பாட்டின் வளர்ச்சிக்கும் காரணமாக இருந்திருக்கின்றது. தமிழக நிலப்பரப்பில் உருவான அரசியல் முரண்பாட்டை இலங்கை பௌத்த அரசுகள் சரிவரப் பயன்படுத்திக் கொண்டன. சிங்கள அரசர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தில் இருந்த எதிரிகளின் எதிரிகளை நண்பர்களாக்கும் அரசியற் சாணக்கியத்தைச் சரிவரப் பயன்படுத்தியது மூலம் சிங்கள பௌத்த அரசுகளுக்கு ஏற்படவிருந்த பல பின்னடைவுகளை விலக்கிக் கொண்டார்கள். குறிப்பாக சிங்கள-பாண்டிய உறவு சிங்கள அரசுகள் பலமடைய உதவியது. இலங்கையில் உள்ள பல பௌத்த பண்பாட்டில் பல்லவருடைய செல்வாக்கு மிக வெளிப்படையாகத் தெரிகின்றது. எனினும், சோழருடைய எழுபத்தேழு ஆண்டு கால ஆட்சி இலங்கை அரசியல் வரலாற்றில் மீள் மாற்றம் செய்ய முடியாத மாற்றங்களை உருவாக்கியுள்ளது. பௌத்த மதப் பின்னணியுடன் வளர்ச்சியடைந்த அநுராதபுர அரசு சோழர்களினால் நிர்மூலமாக்கப்பட்ட அரசியல் நிகழ்வானது பிற்காலத்தில் பலமான யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றத்திற்கான தளத்தை உருவாக்கிக் கொடுத்தது. திருகோணமலை வரலாற்றில் தமிழர் பண்பாட்டைச் சோழருடைய எழுச்சியும், 2வது பாண்டியப் பேரரசின் எழுச்சியும் பலமடையச் செய்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நன்றி நவிலல்

## அமரர்.

## திரு. சுந்தையா துரைராஜா

அவர்களின் மறைவைக் கேட்டவுடன் ஓடோடி வந்து ஆறுதல், கூறியதுடன் அஞ்சலி செலுத்திய நல் நெஞ்சங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். அன்னாரின் இறுதி சடங்குகளில் கலந்து கொண்டு ஆறுதல் கூறியவருக்கும் மலர் வலயங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் பதாதை காட்சி படுத்திய நிறுவனத்திற்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த நல் உள்ளங்களுக்கும் பல வகையிலும் உதவிய உற்றார் உறவினர் அயலவர் நண்பர்களுக்கும் மற்றும் வரலாற்றுத் திருகோணமலை நூலின் ஆசிரியர் கலாநிதி க.சரவணபவன் அவர்களுக்கும்

எங்கள் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்



**– குடும்பத்தினர் –**


**34/2, கடல்முக வீதி**
**திருக்கோணமலை**

- தொகுப்பாசிரியர் : சுந்தா (0756901316)
- அச்சு : ஏ.ஆர்.டிரேடர்ஸ் 0777695656

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

## அமரர்
## கந்தையா துரைராஜா






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org